Registered as a Newspaper பக்கங்கள் 24 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 7 (19.02.94) சனிக்கிழமை ஓசை 01

## பங்கீட்டு அட்டைக்கு இரண்டு கிலோ சீனி

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் அனைத்துக் குடும்பங்களுக்கும் பங்கீட்டு அடிப்படையில் சீனி விநியோகம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது கோமாரி கப்பலில் 700 மெற்றிக் தொன் சீனி ஏற்றப்படுவதாகவும் இக் கப்பல் நாளை ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் எனவும் யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார். இவை புதிய விலைத் திட்டத்தின் கீழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஒவ்வொரு (24 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை வெறியாட்டம்

# 10 மீனவர் படுகொலை

## மூன்று சடலங்கள் கரை ஒதுங்கின

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் பூனைத் தொடுவாய் கடற்பரப்பில் நேற்றுக் காலை மீனவர்மீது சிறிலங்கா கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 10 மீனவர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இம் மீனவர்களில் மூவரின் சடலங்கள் கரையொதுங்கின.

வழமைபோல் இம் மீனவர்கள் அப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது காலை 6.00 மணியளவில் அங்கு வந்த கடற்படையினர் அவர்கள் மீது கொடூர தாக்குதலை மேற்கொண்டனர். இப் பத்து மீனவர்களில் மூவரது சடலங்கள் கரையொதுங்கின. ஏனைய ஏழுபேரும் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அமிர்தநாயகம் ஜோன் பெனான்டோ (33), யாக்கோப்பிள்ளை நிக்சன் (20), யேசுராஜா சாந்தகுமார் (23) ஆகியோரின் சடலங்களே கரை ஒதுங்கியுள்ளன.

அந்தோனிப்பிள்ளை யாககோப்பிள்ளை (வயது 44) (இவர் யாக்கோப்பிள்ளை நிக்சனின் தந்தை). யேசுராஜா ஜெயா (வயது 18), (இவர் யேசுராஜா சாந்தகுமாரின் தம்பி), கவரியப்பிள்ளை யேசுராஜா (குணம்) (வயது 27) சவரியப்பிள்ளை அருள் ஜெயசீலன் (மிக்சின்), மனுவேல்பிள்ளை மரியசீலன் (வயது 24), ஆசீர்வாதம் பின்பேந்தி மருசலீன் (வயது 42), பாவா என்றழைக்கப்படுபவர் ஆகியோரே காணாமல் போயுள்ளனர்.

கொல்லப்பட்டும், காணாமற்போயும் உள்ள 10 மீனவர்களும் இராணுவ நடவடிக்கைகளினால் முள்ளியான் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து பூனைத்தொடுவாய் பகுதியில் வசித்து வந்தனர்.

இதேசமயம் மீனவர்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பிரதேசங்களை நிர்வகிக்கும் ஆற்றலுடன் புலிகள்

### லங்கா கார்டியன் தெரிவிப்பு

(லண்டன்)

விடுதலைப்புலிகள் பிரதேசங்களை நிர்வகிக்கும் பொறுப்புகள் கொண்ட ராணுவமாக விருத்திகண்டுள்ளனர் என பிரிட்டனின் சசெக்ஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி மூர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் லங்கா கார்டியனில் தென்னாசிய விவகார ஆய்வாளராக உள்ள கலாநிதி மூர் தனது ஆய்வுக் கட்டுரை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

1991 காலப்பகுதியில் மரபு சார்ந்த யுத்த முறைகளை தமது சமர்களில் பயன்படுத்திய புலிகள் தற்போது பிரதேசப் பொறுப்புகள் கொண்ட இராணுவமாக முன்னேறியுள்ளனர். தமிழ்ப் பிரதேசங்களில் சக்திவாய்ந்த ஒரே அமைப்பாக புலிகளே விளங்குகின்றனர்.

விடுதலைப்புலிகளின் இத்தகைய தன்மையே இந்தியப் படை இலங்கையில் நிலைகொண்டிருந்தபோதும் தொடர்ந்து அவர்களால் சக்திவாய்ந்த அமைப்பாக விளங்க முடிந்தது எனவும் கலாநிதி மூர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## கடற்படை பீரங்கித்தாக்குதல் ஒரு பெண்மணி காயம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு - கிழக்குகரையோரப் பகுதிக் குடியிருப்புகள் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலுக்கு ஒரு பெண்மணி காயமடைந்தார்.

வெற்றிலைக் கேணியிலிருந்து காங்கேசன் துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடற்படைக்குச் சொந்தமான 'டோறா' படகிலிருந்து நேற்றுப் பகல் 10.10 மணியளவில் இத்தாக்குதல் நடைபெற்றது.

வியாபாரி மூலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான பாலசிங்கம் - பாக்கியம் (வயது 50) என்பவரே கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தார்.

இவர் அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (யோ)

## காமினிக்கு ஆசனம் வழங்க தயார்

காமினி திசாநாயக்காவிற்காக தமது ஆசனத்தை வழங்கத் தயாராக இருப்பதாக கொழும்பு மாவட்ட எம்.பி ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

திரு. காமினி திசாநாயக்காவை முன்னாள் அமைச்சர் என்றுசொல்வதுஉகந்ததல்ல; இவர் புகழ் பெற்ற அரசியல்வபதியே என்று மேலும் குறிப்பிட்ட அவர் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆதரவு அவருக்கு உள்ளது என குறிப்பிட்டார்.

## கொழும்பு கரையோரம் தடைசெய்யப்பட்ட பகுதி

### கடற்படை தளபதி பிரகடனம்

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்தின் மேற்கு முனையிலிருந்து கொள்ளுப்பிட்டிவரையிலான கடற்பகுதி தடைசெய்யப்பட்ட பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மீன்பிடி வள்ளங்கள் மற்றும் ஏனைய வள்ளங்கள் இப் பிரதேசத்தினுள் செல்வதை அவசரகால சட்டத்திற்கு அமைய அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதியின் அனுமதியின் பேரிலேயே இப் பிரதேசத்திற்குள் செல்ல முடியும். கரையிலிருந்து இரண்டு மைல் தூரம் கடற்பகுதி தடைசெய்யப்பட்ட வலயமாக இருக்கும்.

ஈழநாதம் நான்காம் ஆண்டு நிறைவு 1994

இன்று, உங்கள் அபிமானப் பத்திரிகையான 'ஈழநாதம்' மக்கள் தினசரி தனது நான்காவது ஆண்டை நிறைவு செய்து ஐந்தாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. இக் கடந்த காலத்தில் பல்வேறு இன்னல்களை, பல வடிவங்களில் சந்தித்த போதும் ஈழநாதம் தொடரான ஒருவளர்ச்சிப் போக்கில் சென்றுள்ளதையிட்டு எமக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியை தங்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

ஈழநாதத்தின் கடந்த ஆண்டு வளர்ச்சியின் ஒரு மைல் கல்லாக அதன் வன்னிப்பதிப்பு வெளிவந்ததும் அமைந்திருந்தது. மேலும் பத்திரிகை விற்பனையிலும் குறிப்பிடும் படியான முன்னேற்றத்தைஈழநாதம்கண்டுள்ளது.

இவ்வாறு ஈழநாதம் கண்டுள்ள/கண்டுவரும் வளர்ச்சியானது தமிழீழ மக்கள் மத்தியில் அது நிலை பெறுவதில் வெற்றி கண்டு விட்டது என்பதையே உணர்த்துகிறது இதற்கு தமிழீழத்திலுள்ள பல தரப்பு மக்களிடமும் இருந்து கிடைக்கப்பெற்ற தான ஆதரவே காரணம் என்பதில்ஐயமில்லை. இந்த வகையில் இவ்வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த அனைவர்க்கும் ஈழநாதம் நன்றி செலுத்துகின்றது.

இதேவேளை, ஈழநாதம் கடந்த காலங்களைப் போன்றே ஒரு செய்திப்பத்திரிகை என்ற அதன் செயற்பாட்டிற்கும் அப்பால், அடக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலிப்பதும், தமிழீழ மக்களின் அரசியல், பொருளாதார விடுதலையையும், முன்னேற்றகரமான சமுதாய உருவாக்கத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும், தனது குறிக்கோளில் சிறிதும் வழுவாது என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றது. இதற்காக எதிர்காலத்திலும் கடந்த காலத்தைப் போன்று தமிழீழ மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் ஈழநாதம் வேண்டி நிற்கின்றது. அதனைமக்கள் வழங்குவார்கள் எனவும் நம்புகின்றது.

நன்றி

5வது ஆண்டில் வீறுநடைபோட வாழ்த்துகிறோம்

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(இ-8549)

# வரி விளம்பரம்

### தவறிவிட்டது

2-2-94 அன்று மானிப்பாய்க்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தேசிய அடையாள அட்டை இல. 496442326V அதன்விலாசம் புளியங்கூடல், ஊர்காவற்துறை. தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் க. கனகராசா இராசாவீதி, அச்சுவேலியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7556)

### சனிமாற்றம் (31-5-95 வரை)

1-3-94 முதல் 2-7-94வரை வியாழவக்கிரகமும் (நூலாசிரியர்சத்தியாவின் புதிய வெளியீடு) ரூபா 10/- எங்கும் கிடைக்கும் பாடசாலை உபகரணங்களுக்கு றெஜி புத்தகசாலை(ஆஸ்பத்திரிமுன்னால்) மானிப்பாய். (7565)

### விற்பனைக்கு

ஹோட்டலுக்குத் தேவையான தளபாடங்கள், கண்ணாடி சோக்கேஸ், கண்ணாடி றாக்கை, இரும்புக் குழாய் மேசைகள், இரும்புக் குழாய் குசன் கதிரைகள், எம்மிடம் உண்டு. தொடர்பு: இம்மானுவல்,றெஜிபேனாட், பீச்றோட்,1-ம் ஒழுங்கை, 10 A, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (7544)

### சாண விறாட்டி

விறகுத் தட்டுப்பாடா? கணகணப்பாக எரியும் சாண விறாட்டி இருக்கக்கவலை ஏன்? விறாட்டி ஒன்று விலை ரூபா 1/- ''மில்க்வைற்'' (சி- 8662)

### தேவை

வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், கசற்செற் வகைகள், மைக் மற்றும் எலத்திரனியல் பொருட்கள் நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்பு: மின்வளம் இல,81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-8638)

### வெளிவந்துவிட்டது

சமூகக்கல்வி துரித மீட்டலுக்கான வினாவிடை ஆண்டு 9 ஆக்கம்:- க. சந்திரசேகரம் ஏகவிநியோகஸ்தர்கள்:-(1)சோதிபுத்தகசாலை கச்சாய் வீதி, சாவகச்சேரி, (2) ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, 235 காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம் (7528)

### எண்ஜோதிடம்

அதிர்ஷ்டசாலியாக வர விரும்புவோர் வாங்கிப் படியுங்கள் விற்பனையாகிறது. ''நீங்களும் நிச்சயம் அதிர்ஷ்டசாலியாகலாம்'' வேலணை சோதிடர் V. A சிவராசா 152 B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (7569)

---

## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14-வது இசைவிழா
## 8-ம் நாள் 19-2-94 சனிக்கிழமை
### தியாகராஜ உற்ஸவம்
### வட - இலங்கை சர்வோதயத்தின் ஆதரவில்

காலை

**9.00 - 10.30 பஞ்சரத்தின ஆராதனை**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| என்.கே. பத்மநாதன் | கே. நித்தியானந்தன் |
| எம்.பி. நாகேந்திரன் | ரி. உதயசங்கர் |
| வீ.கே. கானமூர்த்தி | ஆர்.எஸ். ரவீந்திரன் |
| வீ.கே. பஞ்சமூர்த்தி | ஆர். எஸ். சுதாகரன் |
| ஆர். கேதீஸ்வரன் | பி. முருகதாஸ் |
| | கே. சிவகுமார் |
| | பி. கணேசன் |
| | எஸ். முருகையா |

**10.30 - 11.00 மங்கள விளக்கேற்றல்**

கி. நடராஜா தம்பதிகள் — த. மங்கையற்கரசி
அ. சிவராஜா தம்பதிகள் — சி.விமலானந்தராணி
அ. புஷ்பமலர் — அ. அருளானந்தம்
து. தவிலா

தலைவர்: திரு. க. திருநாவுக்கரசு (வடஇலங்கை சர்வோதயம்)

பிரதம விருந்தினர்: ப்ரம்மஸ்ரீ மஹாதேவக் குருக்கள்

**11.00 - 12.00 பஞ்சரத்தின ஆராதனை**

முது கலைஞர்களும் இளம் கலைஞர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்

**12.00 - 2.00 மதிய போசனம்**

### திருநெல்வேலி லெக்ஷ்மி ஸ்ரோர்ஸ் ஆதரவில்

மாலை

**3.00 - 4.00 மங்கள இசை**

எஸ். ஜெயநாதன், எஸ். ரத்தினம், வீ சிவரத்தினம் — நாதஸ்வரம்
என். முருகானந்தம், ரி. சுந்தரம் — தவில்

**4.00 - 4.45 பாட்டு**

எஸ். நாகராஜா - பாட்டு
பாக்கியலட்சுமி நடராஜா - வயலின்
எஸ். பாலச்சந்திர சர்மா - மிருதங்கம்

**4.45 - 5.05 வயலினிசை**

கிருஷ்ணவேணி மயில்வாகனம், சுஜாத்தா சிவசோதி — வயலின்
ப. ரதிருபன் - மிருதங்கம்

**5.05-5.30 வீணை இசை**

ச. சுதர்சனா, எஸ். குமுதினி, ரி. புவிதலக்ஷ்மி, எஸ். ஜெயமனோகரி — வீணை
எஸ். துரைராசா - மிருதங்கம்

**5.30 - 6.15 பாட்டு**

மிதிலா விவேகானந்தன் - பாட்டு
எஸ். சர்வேஸ்வர சர்மா - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**

எம். வர்ணகுலசிங்கம் - பாட்டு
வீ.கே. குமாரசாமி - வயலின்
வர்ணராமேஸ்வரன் - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**

திரு. த. ஆறுமுக ஆனந்தம் (உடுப்பிட்டி)
திரு. இ. தனபாலசிங்கம் (லெக்ஷ்மி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)
திரு க. நந்தகுமார் (சுமைகள் வர்த்தகநிலையம்)
திரு. த. தங்கேஸ்வரன் (உடுப்பிட்டி)

தலைவர்: திரு. எஸ். வேலாயுதம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

பிரதம விருந்தினர்: திரு. க. கந்தசாமி (கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் வலயம் II)

சிறப்பு விருந்தினர்: திரு.க. சோமசுந்தரம் (மகாராணி புடவை மாளிகை)

**7.30-8.15 பாட்டு**

பொன். சுந்தரலிங்கம் - பாட்டு
ஆர். ராதாகிருஷ்ணன் - வயலின்
எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
எஸ் துரைராஜா - கஞ்சிரா
தபோதநாயகம் - கடம்

**8.15-9.30 வில்லிசை**

கலா விநோதன் எஸ். கணபதிப்பிள்ளை (சின்னமணி) வழங்கும் ''சத்குரு ஸ்ரீ தியாகராஜர்''

வாழ்த்துவோர்: அருண்களஞ்சியம் திருநெல்வேலி சந்தை, திருநெல்வேலி. (சி-865)

---

## தொண்டர்

புணர்ச்சியும், அதன் மூலம் நவீன உலக ஓட்டத்திற்கு இசைவான சமூக மாற்றத்தையும் உருவாக்குவதில் இவ்வாறான தொண்டர் நிறுவனங்கள் கணிசமான பங்கை வகிக்க முடியும். தமது வளங்களை இந்ததிசையைநோக்கித் திருப்புவதற்கு இந்த நிறுவனங்கள் முயற்சிக்க வேண்டும்.

ஆனால், தூய்மையான சமூக உணர்வுடனும், மற்றும் மனித நேய அடிப்படையிலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படாதவரையிலும் இவ்வாறான நிறுவனங்கள் குறிப்பிட்ட பகுதி மக்களின் உண்மையான தேவைகளை உணர்ந்தும் தமது சுயலாபத்தை மறந்தும் உணர்வுபூர்வமாக சேவை யாற்றாத வரையிலும் குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் நோக்கும்போது இவ்வாறான அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகள்யாவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர நிவாரணியாக அமைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறமுடியும்

---

ஃ ''அப்பா எனக்கு நல்ல கதைப் புத்தகங்கள் வாங்கித்தந்திருக்கிறாரே!''

ஃ ''என்ன புத்தகம்?''

ஃ ''வரதர் கதைமலர்கள்- நாலு புத்தகங்கள். எல்லாம் அருமையானகதைகள்!''

### வரதர் கதை மலர்கள்

1. அவன் பெரியவன் -அநு. வை. நாகராஜன்
2. இராமன் கதை -'சம்பந்தன்'
3. போக்கிரி முயலார் -'சொக்கன்'
4. வேப்பமரத்தடிப்பேய் -'சி. சிவதாசன்' விரைவில் வருகிறது
5. சுதந்திரமாய் பாடுவேன் -'திருச்செந்தூரன்'

ஒவ்வொரு புத்தகமும் விலை ரூபா 12/-மட்டுமே! (7449)

---

## நினைவு கூருகின்றோம்.

### 1994-02-19

1986-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-மூதூர், நிலாப்பொலப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**பெரியவன்** (வேலுக்குட்டி ஜீவராசா-கட்டைபறிச்சான் திருமலை)

**ஆறுமுகம்** (பத்தக்குட்டி அற்புதன் - எல். பி. 03 கிளிவெட்டி - திருமலை)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியிற் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு பெண் உட்பட 03 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு தேசவிரோதக்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

❀ **பாபு** (சபாபதி கோபாலசிங்கம் - தங்கநகர், மூதூர்- திருமலை)

இதே ஆண்டில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட யாழ்-அளவெட்டி வடக்கைச்சேர்ந்த தமிழிளைஞன்.

1989-ம் ஆண்டு சுழிபுரத்தில் தேசவிரோதக்குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட உயர்வகுப்பு மாணவர்களாகிய 02 தமிழிளைஞர்கள்.

1992-ம் ஆண்டு மட்டு-மாவடிஓடைப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஓமன்** (செல்வநாயகம் விஸ்வநாதன் - குமாரவேலியார் கிராமம், செங்கலடி-மட்டு)

வவுனியாவில் தற்போதைய ராணுவ நடவடிக்கைகளில் காணாமல் போன 200க்கு மேற்பட்ட தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

❀ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8654)

## துணைவேந்தரின் ஆசிச்செய்தி



தமிழ் மக்களின் அபிமான நாளேடான 'ஈழநாதம்' தனது நான்காம் ஆண்டை நிறைவு செய்து ஐந்தாம் ஆண்டுப் பணியைத் தொடங்குகிறது என்னுஞ் செய்தி மகிழ்ச்சி தருவதாகும்.

இன்றைய காலமும் சூழலும் பத்திரிகையாளரின் சிறப்பான சேவையைப் பெரிதும் வேண்டி நிற்கின்றன. பத்திரிகைகள் செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்குமளவில் நின்றுவிடாது, சமூக மேம்பாட்டுக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் அரசியல் தெளிவுக்கும் தமது பங்களிப்பினை நல்குதல் வேண்டும். மக்களிடையே விழிப்பையும் எழுச்சியையும் தோற்றுவிக்க உழைத்தல் வேண்டும்.

இந்த வகையில் 'ஈழநாதம்' விதந்து கூறத்தக்க விதத்திலே செயலாற்றி வந்துள்ளது. அறிவியல், தொழில் நுட்பம் சார்ந்த பல்வேறு துறைகள் உட்பட, உலகியலின் அனைத்துப் புலங்களிலும் மக்களின் உணர்வைக் கூர்மைப்படுத்தி முன்னேற்றுவதான தனது பணியினை 'ஈழநாதம்' இன்னுமின்னுஞ் சீரிய வகையில் முன்னெடுத்துச் செல்லட்டும் என மனமார வாழ்த்துகிறேன். சென்ற நான்காண்டுகளாக இந்நாளேடு ஆற்றி வரும் தொண்டு மேன்மேலும் தரமுயர்ந்து நம் வாழ்க்கையைப் பண்படுத்தட்டும். அபிவிருத்திக்கு உறுதுணையாக 'ஈழநாதம்' அமைந்து பயன்படட்டும்.

பேராசிரியர்: அ. துரைராசா
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## தினசரி சிரிப்பாய் ஈழநாதமே!

ஈழநாதமே!
உன் பிறந்தநாளுக்கு வாழ்த்து.
"வன்னிப்பிள்ளை"க்கு முத்தங்கள்.
ஒவ்வொரு வயதும் கழியும் போதும்,
உன்னில் முதுமை படிவதில்லை.
பொலிவு மெருகேறப் புதிதாய்ப் பிறக்கின்றாய்.
"மகேந்திரா வீதி"யால் போகும் போதெல்லாம்
நிமிர்ந்து பார்ப்பேன்.
நீ அவதரித்த அந்தநாள் நினைவுக்கு வரும்.
உன்னை அழகாக்கிய "அழகன்"
நினைவுக்குள் வருவான்.
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்...
உனக்கும் அவனுக்குமான இரத்தஉறவு,
இனி இல்லாமற் போகாது.
நீராடி, மயிர்நீவி, வாசல் வரும்,
என் மனைவியின் அழகோடு,
விடியும் காலையில் வீட்டுக்குள் நுழைகின்றாய்.
என் வீட்டுக்கு மட்டுமா?
எத்தனை வீட்டுக்குள் எடுத்தடி வைக்கின்றாய்.
மஞ்சளும், குங்குமமும், மங்கலப் பொருட்கள்.
இவற்றுடன் ஈழநாதத்தையும் சேர்த்துக் கொள்வோம்.
"தினசரி தரிசனம்" கோடி புண்ணியம்.
ஈழநாதமே!
நீ வேர்கள் ஆழவோடிய விருட்சம்.
பெருந்தலைவன்
உன் வேருக்கு நீர் வார்க்கின்றான்.
நீ வெள்ளைத்தாளில் வந்தாலும்,
கோட்டுத்தாளில் வந்தாலும்,
உன் வரிகளுக்குள்ளே எத்தனை வடிவு.
மூன்றாம் பக்கத்து மூலையில் தொடங்கும்
ஆசிரிய தலையங்கம் பேசப்படும்.
வைகறையில் உன்னில் முகம் பார்ப்பதற்காக...
விடிய விடிய எத்தனைபேர் விழித்திருக்கின்றனர்.
நள்ளிரவில் கூவிச்சென்ற எறிகணை
எமனானது எவருக்கு?
நாசமாக்கிய கூரைகள் எத்தனை?
என்பதறிய உன்னைத்தான் எதிர்பார்க்கின்றனர்.
இசைவிழா எங்கே? தமிழ்விழா எங்கே?
"வெளிச்சம்" எப்போது வெளிவரும்?
எல்லாம் தெரிந்தவன் நீ ஒருவன் தான்.
செய்திவேட்டையில் நீ தோற்றது கிடையாது.
தர்மத்தின் பக்கம் தலைநிமிர்ந்துள்ளோர்
அச்சமின்றி ஆடிப் பாடலாம்.
நீயும் அப்படி நிர்மலமானவன்.
"உன்னை நான் வாழ்த்துவதும்,
நீயென்னை வணங்குவதும்,
அன்னை மகற்கிடையே அழகில்லை"
ஐந்து வயதுள் நுழையும் நாயகனே!
கிட்டவா ஒரு முத்தம்...
இனி உன்திசை கிழக்கு...
எழுவான் திசையின் கதிரோன் நீ.
தினசரி சிரிக்க என் வாழ்த்துக்கள்.

- புதுவை இரத்தினதுரை

## அரசியற்துறை பொறுப்பாளரின் வாழ்த்துச் செய்தி



இன்றைய உலகம் ஒரு புதிய யுகத்தை நோககி ஒரு புதிய நூற்றாண்டை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் மாறி வரும் இந்த உலகத்தின் நடப்பியல் பற்றியும் இன்றைய காலத்தின் போக்கு பற்றியும் மக்களுக்கு அறியத்தரும் சாதனமாக பத்திரிகை உலகம் செயற்படுகிறது, வாழ்க்கையின் உண்மைகளை பிரதிபலித்துக்காட்டும் கருத்துக்களையும் தகவல்களையும் தாங்கிவரும் சாதனங்கள் என்பதால் பத்திரிகைகளின் பங்கு முக்கியமானது. இந்தப் பத்திரிகைகளுக்கு அடிப்படையாக இருக்கவேண்டியது சுதந்திரம். பத்திரிகைகள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் பொழுதுதான் மக்கள் உண்மை நிலையை அறிந்துகொள்ளமுடியும். எனவே தான் பத்திரிகைச் சுதந்திரத்தை முழு உலகமும் வலியுறுத்துகிறது.

தென்னிலங்கையில் வெளியாகும் சிங்கள, ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளில் பெரும்பாலானவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. ஏனைய பத்திரிகைகள் மீதும் அரசாங்கம் அழுத்தங்களைப் பிரயோகிக்கிறது. அரசாங்கத்தின் நெருக்குதல் காரணமாக இப்பத்திரிகைகள் அனைத்துமே தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இருட்டடிப்புச் செய்கின்றன. உண்மையைத் திரித்து எழுதுகின்றன. தமிழரின் போராட்டத்தை மழுங்கடிக்கும் சாதனங்களாகவே அரசாங்கம் பத்திரிகைகளைப் பயன்படுத்துகிறது.

தென்னிலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள் தமிழர் விரோத சக்தியாக செயல்படுவதாலும், போராட்டத்தை மழுங்கடிக்க முயல்வதாலும், தமிழ் மக்களுக்கு போராட்டம் பற்றிய உண்மையான நிலைமையை எடுத்துவிளக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைதான் ஈழநாதம். இன்று ஈழநாதம் பத்திரிகை தனது நான்காவது ஆண்டை நிறைவு செய்கிறது. இந்த நான்கு ஆண்டுகளிலும் ஈழநாதம் மகத்தான சேவையை ஆற்றியிருக்கிறது. விடுதலைப் போராட்டத்தின் உண்மைக் குரலாக செயற்பட்டு, தமிழீழத்தின் எதார்த்த நிலைமையை மக்களுக்கு எடுத்துக்காண்பிக்கும் தலைசிறந்த சாதனமாக ஈழநாதம் அரும்பணி ஆற்றியிருக்கிறது.

தேசிய விடுதலைப் போராட்டம் நிகழும் ஒரு சமுதாயத்தில் அந்தப் போராட்டத்தின் தன்மை பற்றியும் போக்கு பற்றியும் தெளிவுபடுத்துவதில் பத்திரிகைகளின் பங்கு முக்கியமானது. இத்தகைய பத்திரிகைகள் நடுநிலைமையாகவும் சேவை நோக்குடனும் உண்மையாகவும் செயல்படுவது அவசியமானது. இதன் அடிப்படையில் உண்மைகளை மக்கள் உணர்ந்து கொள்ளச் செய்வதுடன் தேசாபிமானச் சிந்தனைகளையும் ஈழநாதம் வளர்த்து வருவது பாராட்டத்தக்கதாகும்.

பத்திரிகைகளின் செயல்பாட்டுக்கு நடுநிலைமை அவசியமானது. இவ்வாறான பத்திரிகைகளுக்கே அதிகளவான மக்களின் ஆதரவு கிடைக்கும். நடுநிலைமைக் கொள்கையுடன் மக்களின் தேவைகளை உணர்ந்து மக்களின் எண்ணங்களை பிரதிபலித்து எல்லா மக்களையும் ஈழநாதம் கவருகின்றது.

இந்த வகையில் சேவை நோக்குடனும் நடுநிலைமைக் கொள்கையுடனும் நான்காம் ஆண்டை நிறைவு செய்து நல்வழி காட்டி நிற்கும் ஈழநாதம் பத்திரிகையானது தமிழீழப் போருக்கு உரம் சேர்ப்பதோடு மக்களின் விடுதலைக்கும் அதன் வெற்றிக்கும் உயிர் கொடுத்து தனது அற்புதமான பணியை தொடர எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

சு. ப. தமிழ்ச்செல்வன்
அரசியற்துறை பொறுப்பாளர்
தமிழீழம்

## பையனே ஈழநாதா பல்லாண்டு வாழி! வாழி!!

செந்தமிழ் சேதி சொல்ல
இந்தமண் மீதில் மெல்ல
வந்துநீ உதித்தாய்! நல்ல
வாழ்வினைத் தந்தாய்; உன்னைச்
சிந்தையில் ஏற்றோம்; உந்தன்
சீரிய சேவை கண்டோம்!
ஐந்தாவது அகவை கண்டாய்!
இன்றுபோல் என்றும் வாழி!!

இத்தனை துயரம் மண்ணில்
எழுந்ததே என்றுன் பணியை
ஒத்தியா போட்டாய்? இல்லை!
பாதகர் தடையை வென்று
சத்தியம் காத்தாய்; இங்கே
சரித்திரம் படைத்தாய்! உந்தன்
முத்திய சேவை இந்த
மண்ணிற்கு தேவை; வாழி!

கைகளை வீசி வந்தெம்
கதவினைத் தட்டும் போது
வையகம் ஏழும் எங்கள்
வாசலில் வந்தே சேரும்!
ஐயமே இன்றி உலகச்
செய்தியை அறிந்தே சொல்லும்
பையனே ஈழ நாதா; நீ
பல்லாண்டு வாழி! வாழி!!

நம்புவோம்! இம்மண் மீளும்
நம்பகை அழியும்; எங்கள்
தம்பியின் காலம் தன்னில்
"தமிழீழம்" மீட்போம் உறுதி!
இம்மண் உள்ள மட்டும்
ஏதுமே தடைகள் இன்றி
உம்பணி தொடர்வாய்! இந்த
அகிலமே போற்றும்; வாழி!

-வேலணையூர் சுரேஷ்

**ஈழநாதம்**

**நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டி**
**முதற்பரிசு பெற்ற சிறுகதை**

# வழித்துணை

## ப-தேசீஸ்வரநாதன்

கடற்கரைக் காற்றின் குளிர் மயிர்க்கால்களினூடு நுழைந்து உடலைச் சில்லிட வைத்துக் கொண்டிருந்தது. இருளின் பிடியில் நிலம் சிக்கியிருந்தது. தோள்களில் கிடந்த பைகளைக் கீழே வைத்து கோகுலன் நெஞ்சின் குறுக்கே கைகளை வைத்து இறுகிக் கொண்டான்; ''மழை வந்தால் குளிரிலை விறைச்சே செத்துப் போடுவன்'' என்று வானத்தை தனது விழிகளால் தடவிக் கொண்டான்; ''இப்ப மழை மேகம் இல்லாட்டிலும் மார்கழி மாதத்திலை எந்த நேரமும் மழை வரும்; வந்தா அவ்வளவு தான்'' என்று நினைத்த கோகுலனுக்குச் சிரிப்பு வந்தது. ''போன முறை கிளாலியைக் கடக்கேக்கை உயிருக்குப் பயந்த நான் இண்டைக்கு குளிருக்குப் பயப்பிடுறன். பூநகரி அடிக்க பாதையிலை பிரச்சினை இல்லை என்ட உடனே குளிர் தெரியுது'' என்று சிந்தித்தான். கையில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்த கோகுலன் ''இன்னும் அரை மணித்தியாலம் எண்டாலும் செல்லும்'' என்றபடி கிடைத்த ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டான்.

போனவருடம் பேராதனைக்குப் போன கோகுலன் இன்றுதான் யாழ்ப்பாணம் திரும்புகிறான். கிளாலிப்பயணம் பாதுகாப்பானதாகிவிட்டது என்று அறிந்தவுடன் கிடைத்த விடுமுறைக்கு ஊருக்கு என புறப்பட்டு விட்டான். இந்தக் கொஞ்ச நாளிலை எவ்வளவு மாற்றங்கள். நேவியின்ரை அட்டகாசம் எல்லாம் நிண்டு இப்ப கிளாலியாலை பயணம் என்றது சாதாரண ஒண்டாப்போச்சு. போன முறை கிளாலியைக் கடக்கேக்கை... என எண்ணியபடி கோகுலன் பழைய நினைவுகளுள் மூழ்கிப் போகிறான்.

கடற்புலிகளின் படகு ஒன்று கரையை ஒட்டி கடலில் அலைகளின் தாலாட்டில் ஆடிக்கொண்டிருந்தது. படகின் விளிம்பில் இருந்த பிருந்தன் சுற்றிப் பார்க்கிறான். பயணிகளின் படகுகள் புறப்படுவதும் பயணிகளின் ஆரவாரமும் அவன் கண்ணில் தெரிந்தன. ''ரெண்டுமாதத்துக்கு முதல் போர்க்களம் போல இருந்த கடல் இண்டைக்கு சனம் பயமில்லாமல் போகக்கூடியதா மாறிவிட்டுது; இரவிரவா காவலுக்கு ஓடித் திரிந்த எங்களுக்கும் ஓய்வு. எத்தனை உயிரிழப்புகளுக்குப் பிறகு. எத்தனை போராளிகளின்ரை தியாகத்துக்குப் பிறகு இதைச் சாதிச்சிருக்கிறம்?'' என்ற சிந்தனை பிருந்தனுக்கு சீலனின் நினைவுகளை மீண்டும் இழுத்து வருகிறது.

❋ ❋ ❋

பொன்னுத்துரை வாத்தியாரின் வீடு களைகட்டியிருந்தது. இன்று அவரின் ஒரே மகன் கோகுலன் பேராதனைக்குப் போகப் போகிறான். கோகுலனுக்கு பொறியியல் துறைக்கு அனுமதி கிடைத்திருந்தது. இன்றே எப்படியும் புறப்பட்டாக வேண்டுமென்று கோகுலனுடன் பேராதனைக்குப் போகவுள்ள நண்பர்கள் முடிவெடுத்திருந்தார்கள். வாத்தியாருக்கு இரண்டு நாட்களாக மனதில் ஒரே கலக்கமாக இருந்தது. இத்தனை நாளும் மகனின் சாதனையை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவருக்கு இப்போது மகிழ்ச்சி மறைந்து கலக்கம் தோன்றிவிட்டது.

பேராதனைக்குப் போவதென்றால் முதலில் கிளாலியைக் கடக்க வேண்டுமென்ற உண்மை வாத்தியாரை மட்டுமல்லாது கோகுலனின் தாய் பார்வதம், தமக்கை மாலினி, கோகுலன் என எல்லோரையும் கலக்கியிருந்தது. நாலு நாளைக்கு முன்னாலும் ஒரு பயணிகள் படகு சிறீலங்கா கடற்படையிடம் சிக்கியதாக நாளிதழ்களில் செய்தி வெளிவந்திருந்தது;

மகனை எப்படியாவது கப்பலில் அனுப்பி விடலாம் என்று வாத்தியார் கச்சேரிக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குமாக நாயாய் அலைந்தார். ஒன்றும் சரிவரவில்லை'' பேசாமல் கோகுலனை அப்பவே ஆர்ட்சையோ கொமேர்சையோ படிக்கச் சொல்லி சொல்லியிருக்கலாம். இப்ப யாழ்ப்பாணக் கம்பசிலையே படிக்கக் கூடியதா இருந்திருக்கும்'' என்று வாத்தியார் அங்கலாய்த்துக் கொண்டார். ''எங்கடை ஊருக்குள்ளை வந்து பாதையை மூடிக் கொண்டு இருக்கிறாங்கள். கிடைக்கிற பாதையாலை போற சனத்தையும் வந்து வெட்டுறாங்கள். இந்த அநியாயப்படுவாங்களைக் கடவுள் கேக்கிறாரில்லையே'' என்று கடவுளுடன் பேசிக் கொண்டிருந்தார்.

பர்வதத்திற்கு மகனையும் கணவனையும் நினைத்துக் கவலையாக இருந்தது. கிளாலியை மகன் கடக்கப் போகின்றான் என்றதுமே அவர் கோயில்களுக்கு நேர்த்திகள் வைக்கத் தொடங்கிவிட்டார். ''கடவுளே, என்ரை பிள்ளையாரே கோகுலனை நீதான் பத்திரமா காப்பாற்ற வேணும். இந்த மனுசனும் ரெண்டு நாளா ஒருமாதிரி இருக்குது. நெஞ்சு வருத்தம் இருக்கு யோசிக்கக் கூடாது எண்டு டாக்குத்தரும் சொன்னவர். இந்தாளின்ரை கவலையையும் நீதான் குறைச்சு இந்தாளின்ரை நெஞ்சுக்கு பலம் கொடப்பா'' என்று அடிக்கடி வேண்டிக் கொண்டார். கடவுளை வேண்டியபடி மாலினியின் துணையுடன் பயணத்திற்குத் தேவையானவற்றை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார் பர்வதம்.

பிருந்தனுக்கு ஒரு நாளும் நோய் நொடியென்று படுத்துப் பழக்கமில்லை என்றும் இல்லாத விடயமாய் இன்று கடுங் காய்ச்சலும் தலையிடியும் பிருந்தனை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தன. நேரம் ஆக ஆக நடுக்கமும் சேர்ந்து கொண்டது. போர்வையை இழுத்து இறுக்கமாகப் போர்த்துக் கொண்டான். ஆனாலும் குளிரைத் தாங்க முடியவில்லை. காய்ச்சலின் தீவிரத்தினால் பிருந்தன் முனகத் தொடங்கினான்.

இராத்திரி கடற் காவலுக்குப் போய்விட்டு வந்து படுத்திருந்த சீலனுக்கு பிருந்தனின் முனகலால் விழிப்புத் தட்டியது. பிருந்தனின் நெற்றியில் தனது கையை எட்டி வைத்தான் சீலன். நெருப்புச் சுடுவது போல் இருந்தது. ''டே பிருந்தன் என்ன செய்யுது? சரியான காய்ச்சலாக் கிடக்கு. வாவன் கொண்டு போய்க் காட்டுவம்'' என்றவாறு சீலன் பாயை விட்டு எழுந்தான்.

''இல்லை மச்சான் இப்பவேண்டாம். பனடோல் போட்டாச் சரியாப் போயிடும். ரெண்டு பனடோல் எடுத்துத் தா. இண்டைக்கு இரவு கடல்காவலுக்கும் போக வேணும். நாளைக்கு வந்து காட்டுவம்'' என்று மறுத்தான் பிருந்தன்.

''விசர்க்கதை கதைக்கிறாய். இந்தக் காய்ச்சலோடை இரவு முழுக்கக் கடல்லை நிக்கப்போறியோ? இண்டைக்கு நான் போவன் நீ வா போய் மருந்தெடுத்துக் கொண்டு வருவம்'' என்றவாறு மோட்டார் சைக்கிளை சீலன் எடுக்கப்போனான்.

தேச விடுதலைக்காகப் போராட என வீட்டிலிருந்து புறப்பட்டு வந்த பிருந்தனுக்கு சீலன் பயிற்சி முகாமில் அறிமுகமானான். சீலனின் கலகலப்பான சுபாவமும் திறமைகளும் பிருந்தனை சீலனுடன் நெருக்கமாக்கின. பயிற்சி முடிந்ததும் இருவரும் ஒரே குழுவில் இணைக்கப்பட்டார்கள். பல சண்டைகளுக்கும் ஒன்றாகவே போனார்கள். ஒரு சண்டையில் எதிரியின் சுடும்பரப்புக்குள் காயம்பட்டு வீழ்ந்து கிடந்த பிருந்தனை தனது உயிரையும் பாராமல் சீலன் சாமர்த்தியமாக மீட்டு மருத்துவக்குழுவிடம் அனுப்பிவைத்தான். வைத்திய சாலைக்கு பிருந்தன் வந்த தன் பின்னாலேயே சீலனும் காயம் பட்டு வந்து சேர்ந்தான். இருவரும் வைத்தியசாலையிலும் காயம்பட்டோருக்கான முகாமிலும் ஒன்றாக இருந்தார்கள்.

காலம் இருவருக் கிடையிலான நட்பை மேலும் மேலும் இறுக்கமாக்கியது. தென் தமிழீழத்தைச் சேர்ந்த சீலனுக்கு பிருந்தனின் பெற்றோர் அம்மா, அப்பாவாகிவிட்டனர். சீலன் நல்ல அரசியல் தெளிவு உடையவன். எதையும் இலகுவாக விளக்ககூடியவன். விடுதலை என்றால் சிங்கள ஆட்சியை தமிழீழத்திலிருந்து அகற்றுவது தான் என்று எண்ணியிருந்த பிருந்தனுக்கு சமூகப் புரட்சி பற்றியும் அதன் தேவை பற்றியும் விளக்குவான் சீலன்.

கடற்புலிகளின் வளர்ச்சியோடு சீலனும் பிருந்தனும் கடற்புலிகள் அணியில் இணைக்கப்பட்டனர். பயிற்சிகளை முடித்துக்கொண்ட சீலனுக்கும் பிருந்தனுக்கும் ஒவ்வொரு குழுவை நடாத்தும் பொறுப்பு வழங்கப்பட்டது. இருவரது குழுக்களும் கிளாலியில் மக்களின் பயணத்திற்கு காவல் புரியும் கடமைக்கு என அனுப்பப்பட்டன.

''தம்பி ஒருக்கா வெளிக்கிட முதல் பிள்ளையாரிட்டை போயிட்டுவா அவரிலைதான் முழுப்பாரத்தையும் போட்டிருக்கிறன். மேசையிலை கிடக்கிற தேங்காயையும் கொண்டு போய் அடிச்சிட்டு அருச்சனையும் செய்- ஐயரிட்டை நாலுக்கும் சொன்னான் கட்டுவிச்சுக் கொண்டுவா'' என்று பர்வதம் சொன்னார்- வெளிக்கு வீரமாகக் காட்டிக் கொண்டிருந்த கோகுலன் உண்மையில் உள்ளுக்குள் நடுங்கிக் கொண்டுதான் இருந்தான்- தாய் சொன்னதுதான் தாமதம் உடனே கோயிலுக்குப் புறப்பட்டுவிட்டான். இன்று போல் ஒரு நாளும் கோகுலன் கோயிலில் ஈடுபாட்டுடன் வழிபட்டது கிடையாது- கோயிலால் வந்த கோகுலன் உடனே பேரூந்து நிலையத்திற்கு புறப்பட ஆயத்தமானான்-

''தம்பி கவனமாய் போயிட்டு வா. நாங்கள் மூண்டு பேரும் உன்னையே நினைச்சுக் கொண்டிருப்பம். அக்கரைக்குப் போன உடனை ஒரு துண்டுக் காயிதம் எண்டாலும் குடுத்துவிடு. விலாசம் எழுதின உறை டயறிக்குள்ளை வைச்சிருக்கு. உன்ரை கடிதம் காணாம அம்மா தண்ணி கூடிக் குடிக்கமாட்டன் தம்பி'' என்று மகனை உச்சி மோர்ந்து பர்வதம் வழியனுப்பினாள்- தந்தையும் தமக்கையும் கோகுலனுடன் பேரூந்து நிலையத்திற்கு வந்தனர்-

பிருந்தனுக்குமலேரியாவாக இருக்கலாம் என வைத்தியர் சொல்லி மருந்துகள் கொடுத்திருந்தார். யாழ்ப்பாணம் போய் இரத்தம் சோதித்தால் நல்லது என்றும் கூறினார் வைத்தியர் முகாமிற்கு திரும்பி வந்த பின் பிருந்தன் மீண்டும் தான் இன்றிரவு கடலுக்குப் போவதாகக் கூறினான்.

''பிருந்தன் நீ இண்டைக்கு ஒய்வெடு- நான் இண்டைக்குப் போவன்'' என்று சீலன் கூறினான். ''சீலன் நீ ராத்திரியும் போனனீ. இண்டைக்குப்பகலும் என்னோடை திரிஞ்சு நித்திரை கொள்ளவில்லை'' என்ற பிருந்தனை அதட்டி சீலன் படுக்கவைத்துவிட்டு இரவுக் காவலுக்குப் புறப்பட ஆயத்தங்களைச் செய்தான்-

பேரூந்து நிலையத்தில் கோகுலனின் நண்பர்கள் வந்திருந்தனர். வாத்தியார் மகனுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கிக் கொண்டிருந்தார்- பேரூந்து புறப்படும் நேரத்தில் வாத்தியாருக்கும் மாலினிக்கும் கண் கலங்கிவிட்டது. கோகுலனது கண்களிலும் கண்ணீர் திரையிட்டது. நண்பர்கள் கண்டால் பகிடி பண்ணுவார்கள் என்ற எண்ணத்தில் கண்களைத் துடைத்துக் கொண்டு நண்பர்களைப் பார்த்தான் அவர்கள் தமது பெற்றோரைப் பார்த்து கண் கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

கோகுலனின் நெற்றியில் தகப்பன் திருநீறைப் பூசிவிட்டார். அயலில் உள்ள கோயில்களில் எல்லாம் அருச்சனை செய்து திருநீற்றுச் சரைகள் கோகுலனுக்குக் காவலாக கொடுத்திருந்தார்கள்- அவை சட்டைப்பையிலும் பயணப்பொதியிலும் இருந்தன- பேரூந்து அசையத் தொடங்க தந்தைக்கும் தமக்கைக்கும் கைகளை ஆட்டினான் கோகுலன்:

கடற்புலிகளின் படகுகள் கடலில் இறங்கிவிட்டன. ஒரு படகில் சீலன் நின்றான். அவனது கையிலிருந்த வோக்கி இரைச்சலிட்டுக் கொண்டிருந்தது: ஏனைய கடற்புலிகளின் படகுகளுக்கு உத்தரவுகளை அறிவித்துவிட்டு தான் நின்ற படகை செலுத்துமாறு உத்தரவிட்டான் சீலன். படகு நீரைக் கிழித்துக்கொண்டு வான் நோக்கிப் பாய்வதுபோல் பயணித்தது.

வீசியடித்த கடற்காற்றின் குளிர் தெரியாத அளவிற்கு கோகுலனின் மனதில் பயம் நிறைந்திருந்தது. கடலில் நின்ற படகுகள் அலைகளில் ஆடிக்கொண்டிருந்தன. இருளைத் துடைக்க முயல்வதுபோல் ஒளிக்கற்றை ஒன்றை அடிக்கடி வானைத் தடவிச் சென்றது. தென் மேற்கிலும் கிழக்கிலும் தெரிந்த வெளிச்சக்

(இணைப்புப் பக்கம் 11-ல் பார்க்க)

# புலிகள் ஒலிக்கும் புதுயுகத்தின் குரல்

பாலகுமாரன்

தென்னாசியப் பிராந்தியத்தின் ஒரு மூலையில் இருந்து எழும் விடுதலைக் குரல் இன்று உலகெங்கும் எதிரொலிக்கின்றது. தமிழீழ தேசியத்தின் விடிவிற்கான போராட்டம் வரலாற்றின் இயங்கு விதிகளிற்கேற்ப வளர்ந்து இன்று ஒரு உன்னதமான கட்டத்தினை அடைந்து விட்டது என்பதை உலகமே ஏற்கவேண்டிய நிலை தோன்றி விட்டது: ''இந்த மண் இன்னும் சுமக்கும் - விடுதலையை வந்திடும் நாள் வரை விதைக்கும்'' என்கிற செய்தி காற்றொலியாக எங்கும் பரவுகின்றது. ''உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்று சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கின்றது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டி விடுகின்றது'' என்று வரலாற்றின் அடிநாதமான- உயிர்மூச்சான இயங்குவிதி புலிகள் தலைவரின் போர்க்குரலாகி விட்டது. வெறும் சடப் பொருட்களான தாங்கிகள், விமானங்கள், பீரங்கிகள் முன்னே தமது உயிர்ப் பொருளை கவசமாக, ஏவுகணையாக உவந்தளிக்கும் போராளிகள் தார்மீக பலம் இன்று ஒரு புதுத் தத்துவத்தை - புதுயுக மொன்றின் குரலை எங்கும் ஓங்கி ஒலிக்கச் செய்கின்றது.

புதுயுகத்தின் பிறப்புக்கு கட்டியம் கூறும் இத் தார்மீக பலம் ஒரு வரலாற்று நுட்பம் மட்டுமல்ல உளரீதியான ஒரு பரிமாணமும் கூட. இதனை புரிந்து உள்வாங்குவோர் உள்ளமும் விரிவடைந்து - துயர்கள் தாங்கும் பக்குவம் பெற்று - விட்டு விடுதலையாகி நிற்கும் நிலையை அடைந்து விடும். ஆயினும் இதனைப் புரிதல் என்பது சாதாரண கிரகிப்பிற்கு அப்பாற்பட்டு இருப்பதால் இத்தனை இழப்புக்களா? என மக்கள் சிலர் ஏங்க நேரிடுகின்றது. ஏனென்றால் சமகாலத்தில் வரலாறு படைக்கப்படும்போது - அதுவும் சிந்தப்படும் குருதியையால் வரலாறு எழுதப்படும்போது - அதுவும் புதிய உலகின் விதிகளை இப் புதிய வரலாறு பிறக்கும்போது அதனைப் புரிதல் இன்னும் கடினமாகின்றது.

வரலாற்றினை பின்னோக்கிப் பார்க்கும்போது அதன் ஒவ்வொரு காலகட்டத்திலும் வரலாற்றின் உந்து சக்திகளாக பல்வேறு காரணிகள் அமைவதைப் பார்க்கலாம். இந் நூற்றாண்டின் தொடக்கத்திலே குடியேற்ற வாதத்திற்கு எதிரான போராட்டங்கள் பின்னர் பொருண்மிய ஏற்றத் தாழ்வுகளை, சுரண்டல்களை நீக்க முயன்ற பொதுவுடமை வழிவந்த போராட்டங்கள் என வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு காரணிகள் முதன்மைப்படுத்தப்படுவதை பார்க்கிறோம். ஆனால் மனித வரலாறு எழுதப்பட்ட காலம் தொட்டு இன்று வரை வரலாற்றின் என்றும் மாறாத அடிப்படை நியதியாக மனிதன் தன்னை அடிமைத் தளைகளிலிருந்து விடுவிக்க, தனது இருப்பை, தனது அடையாளத்தை உறுதிப்படுத்த நடாத்தும் போராட்டங்களே அமைகின்றன. இவ் அடிப்படை விதி இன்று விடுதலைப் புலிகளின் போராட்டம் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படுவதோடு மேலும் புதுயுகத்திற்கான புது விதியாக செழுமைப்படுத்தப் பட்டும் வருகின்றது.

இவ் விதியினை பூரணமாக புரியாத நிலையில் இலக்கு மாறியதால் இன்று பல போராட்ட முனைப்புக்கள் தடம் புரள வேண்டியேற்பட்டது. இடை நடுவில் போராட்டத்தினை கைவிட வேண்டிய அவலமும் தோன்றியது. இது உள்நாட்டிலும் சரி உலக அளவிலும் சரி இன்று புலப்படும் ஒரு பேருண்மையாகும். இன்று சமூக மாற்றத்திற்காகப் போராட முற்பட்டலத்தின் அமெரிக்கா போராட்ட அமைப்புக்கள் என்றாலும் சரி, ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீனிய மண்ணை விடுவிக்கப்புறப்பட்ட பாலத்தீனிய விடுதலை இயக்கங்கள் என்றாலும் சரி- எதிர்ப்புரட்சிக் குழுக்களாக பரிணமித்த யுனிற்றா, கொன்ராஸ் அமைப்புக்கள் ஆயினும் சரி - கம்போடிய கைமர்ருச், பிலிப்பைன்சில் புதிய மக்கள் இராணுவமாயினும் சரி (NPA) மாறும் சருவதேசச் சூழல் காரணமாக நட்டாற்றில் கைவிடப்பட்டோர் போல் திகைத்து அவதிப்பட்டு அல்லலுறுகின்றனர். இப்போது என்ன நடக்கின்றது? எல்சல்வடோர்ஸ் போராளி இயக்கம் அமைதி உடன்பாட்டினை ஏற்று ஆயுதங்கள் கையளித்த நிலையில் மீண்டும் இரகசிய வலது சாரி கொலைக் குழுவினர் கையில் சிக்கி கொல்லப்படும் ஒரு பாதுகாப்புற்ற சூழல் இன்று எல்சல்வடோரில் நிலவுகின்றது. பாலத்தீனத்திலோ அரபாத்தும் இசுரேலியரும் பேசுகிறார்கள் - பேசுகின்றார்கள் - பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். பல பத்து பக்கங்களில் கையெழுத்துப் போடுகின்றனர். ஆனால் பாலத்தீனிய மக்களுக்கோ விட்ட இடத்திலிருந்து போராட்டத்தினை தொடங்க வேண்டிய நிலை. இது சருவதேச நடப்பு. எனவே சொந்தக் காலில் நிற்றல் என்பது இப்போது புலிகளின் போராட்டம் பிறப்பிக்கும் இன்னொரு விதி.

இது போலவே எமது வரலாற்றினைப் பாருங்கள் தொடக்கத்திலே போராட்டம் குறித்தும் அது செல்ல வேண்டிய பாதை குறித்தும் பல்வேறு விளக்கங்கள் முன் வைக்கப்பட்டன. இரு தேசத்து தொழிலாளர் இணைந்து செய்ய வேண்டிய முழுப்புரட்சி என்று புகன்றனர் சிலர்; மலையகத் தொழிலாளரை முன்னிறுத்தி செய்ய வேண்டிய ஈழப் புரட்சி என்று இயம்பினர் சிலர்; படைவீரர்களை தயாரித்த கொடுப்பதே நம் பணி என விளம்பினர் சிலர்; இல்லை, இவை எதுவுமில்லை ஒட்டு மொத்தமான தயாரிப்பின் பின் ஒரே இராணுவ நடவடிக்கையால் பெறப்படும் விடுதலை என பறைசாற்றினர் சிலர் இவை மட்டுமா? போராட்டத்தின் உள் முரண்பாடுகளாக வட, தென் தமிழீழப் பிளவுகள் தூக்கிப் பிடிக்கப்பட்டன; தென் தமிழீழத்திற்கே முன்னுரிமை என்றும் அரசியல், பிரிவா இராணுப்பிரிவா பெரியது என்ற முடிவற்ற விவாதங்களிலும் போராட்டம் சிக்க விடப்பட்டது. இவையெல்லாம் இங்குள்ள பிரதான முரண்பாடுகளாக தோற்றப் படுத்தப்பட்டன. அதனால் பல கவிஞர்க்கு கவிதை எழுத அவை கருப்பொருளாகவும் ஆகின.

ஆனால் இன்று? தொடக்கத்தில் எல்லாவற்றையும் உள்வாங்கிய தமிழீழ தேசியப் போராட்டம் சரியெது? தவறெது? பொருந்துவது எது? பொருந்தாதது எது? என உரைத்துப் பார்த்தது. ஏற்பன ஏற்று இன்று தள்ளுபவன புறம் தள்ளிவிட்டது. எனவே இன்று வடதமிழீழம் என்றோ தென் தமிழீழம் என்றோ எவரும் கூறும் போது அவை வெறும் புவியியல் சார் பிரயோகங்களாகவே இருக்கும். வேறெந்த வேறுபாடும் எவரும் இப்போது கற்பிக்க முடியாது. தமிழழீம் என்கிற தேசத்தில் அன்னியன் ஆக்கிரமிப்புச் செய்திருக்கும் பகுதி அவை எங்கிருந்தாலும் மீட்கப்பட வேண்டும்- விடுவிக்கப்பட வேண்டும் என்பதே இலக்கு. புலிகளின் தலைமை நெறிப்படுத்தும் போராட்ட உத்திகட்கேட்ப அவை படிப்படியாக மீட்கப்படும். ஆகவே எங்கிருந்து தொடங்குவது என்பதல்ல இன்றைய சிக்கல். எங்கிருந்தாவது தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும்என்பதே வரலாற்று நிபந்தனை. இந்நிபந்தனை இப்போது புலிகளால்பூரணப்படுத்தப்பட்டு விட்டது. எனவே இப்போது தமிழீழத்தின் எங்காவது ஓரிடத்தில் ஆக்கிரமிப்பு இராணுவம் தாக்கப்பட்டால் தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குல மண்ணும் அதிர்கின்றது. தன்மானத் தமிழன் அவன் எங்கிருந்தாலும் அவன் உடல் சிலிர்க்கின்றது.

இவற்றினை ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து இன்னொரு பேருண்மையும் புலனாகின்றது. வரலாறு தனது நீண்ட காலவோட்டத்தில் பற்பல தெரிவுகளை, வழிகளை, வாய்ப்புக்களை சிங்களதேசம் முன்னும் வைத்து வரும் ஒரு பரிசோனை முயற்சியிலும் ஈடுபட்டுவருகின்றது: தொடக்கத்தில் தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் உயர் மட்டத்தில் தமக்கிடையில் செய்து கொண்ட ஒப்பந்தத் தெரிவு; இந்திய தலையீட்டால் ஏற்பட்ட உடன்பாடு தொடர்பான தெரிவு; பின்னர் சருவகட்சி மாநாடு என்கிற தெரிவு; இறுதியில் தெரிவுக்குழு என்கிற தெரிவு; இப்போது எல்லாத் தெரிவுகளும் பயனற்றுப்போவதை வரலாறு பார்க்கின்றது. தமிழீழ மக்களின் இறுதி விருப்பத் தெரிவை அவர்கட்கு வழங்க முன் சிங்களவர்களுக்கு வழங்க வேண்டிய சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்படுவதை வரலாறு உறுதி செய்கின்றது.

இத்தகைய நிலையில் வெறும் இராணுவவாத செயற்பாடுகள் என்றும் 'நாலுவார்த்தை பேச எழுத வழியில்லையே' என்றும் கண்டனக் கணைகள் வீசியோர் வாய்கள் இப்போது அடைத்து நிற்கின்றன இப்போது கொழும்பு அரசியலில் ''பூநகரித் தாக்குதலின் பின்னான காலகட்டம்'' என்று ஒரு புதிய சூழல் உருவானது பற்றி விலாவாரியாக விதந்துரைக்கும் இவர்கள் பூநகரித் தாக்குதல் என்பது எவ்வளவு ஈகங்கட்கு மத்தியில் நடந்தது என்பதை அறிவாரா? அரசியல் என்றால் பல்வேறு தத்துவங்களை கரைத்துக் குடித்தோர் கையாளும்துறை போலவும் இராணுவம் என்றால் வெறுமனே கையிலே கருவியை எடுத்தல் என்று தோற்றப் படுத்தும் இவர்கள் உறுதியான அரசியல் இலக்கினை அடைவதற்கு இரத்தம் சிந்தும் அரசியலே ஆயுதப் போராட்டம் என்பதை அறிவாரா? இராணுவத்துறை என்பது கையிலே கருவியை எடுத்தல் மட்டுமல்ல, உயர் தொழில்நுட்பத் திறன்சார் அறிவியல் துறை என்பதும் அதில் தேர்ச்சிபெற மிகுதியான உழைப்பும், ஆற்றலும் வேண்டும் என்பதும் மிக நுட்பமாக துணிவின் எல்லையில் நின்று திரட்டப்படும் உளவுத் தகவல்களை செவ்வனே ஆய்ந்து திட்டமிடப்படுவதே ஓர் இராணுவ நடவடிக்கை என்று இவர்கள் புரிவார்களா? இப்போது புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் என்பது சமகாலத்திலே அரசியல் நடவடிக்கையாக உருமாறும் விந்தை எம்மக்கள் புரிந்த செய்தி. இப்போது எம்மக்கட்கு எமது போராளியின் கையிலிருக்கும் ஆயுதத்தின் உண்மையான பெறுமதி மட்டுமல்ல, அதன் அரசியல் பெறுமதியும் புரியும்.

தமிழ்த் தேசிய இனம் பல்வேறு சிக்கல்கள், குழப்பங்கள் மத்தியிலிருந்து புதிதாக விடுதலை இயக்கமொன்றைதொடக்கத்திலிருந்து கட்டி எழுப்பும்போது தோன்றும் சிக்கல்களை மனித உரிமை மீறல்களாக வகைப்படுத்துவோர் ஓர் புதிய இன்னொரு பேருண்மையை மறந்து விட்டனர். இப்போது மாறிவரும் புதிய உலகச் சூழலில், போட்டியணிகள் இல்லாத நிலையில் ஒரு நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு என்பன தட்டிக்கேட்க முடியாத சங்கதியாகஇல்லை. ஒரு நாடு தனது குடிமக்கள் என்று கூறிக்கொள்வோரின் அடிப்படை மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கின்றது என்பதைப் பொறுத்தே இது அமையும். சிறிலங்காவைப் பொறுத்தவரையில் சருவதேச சட்டங்கட்கு முன் தலைகுனியும் காலம் நெருங்குகின்றது.

இங்கே இன்னொரு செய்தியும் சேர்க்கப்படல் வேண்டும். அண்மைக் காலமாக சனாதிபதி டி.பி தமிழ் மக்கட்குதான்ஒய்வூதியம்வழங்குவதுபற்றி மக்கட்கு உணவு அனுப்புவது, கல்வி வழங்குவது பற்றி அதிகம் அலட்டிக் கொண்டு வருகின்றார். உண்மையிலே அவர் சர்வதே விதிகளைத் தனது நாடு கையெழுத்துப் போட்டு ஏற்றுக் கொண்ட ஜெனிவா சட்டங்களின் பொதுப் பிரிவு மூன்றினை அறியார் போலும் (General Conventions-Common Article 3) மோதல் தொடர்பான இவ்விதிகள் சர்வதேச மோதல் களங்கள் மட்டுமல்ல. உள்நாட்டு மோதல் சூழ்நிலைகட்கும் பொருந்தும் என்பதே அது. மேலும் இம் மூன்றாம் பிரிவு 1977-ம் ஆண்டின் (Additional Protocol II) மேலதிக இணைப்பு ஒன்றின் மூலம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இங்கேதான் முக்கியமான செய்தியென்று வருகின்றது. இவ் விதிகளின்படி மோதல்கள் நடக்கும் பகுதியில் இளம் சிறார்கள் முழுப்பாதுகாப்பும் அவர்கட்கான கல்வி வசதிகள் போன்றவை பேணப்படவேண்டும்; பொதுமக்களின் வாழ்விற்கு உத்தரவாதமளிக்கத்தக்க வகையில் அவர்களது உயிர்வாழ்வுக்கு அவசியமான பயிர்செய்கை, தானியக் களஞ்சியங்கள், கால் நடைகள், குடிநீர், வழிபாட்டுத் தளங்கள், நீர்ப்பாசன அமைப்புக்கள் போன்றவை பாதுகாக்கப்பட வேண்டும்; அதுபோலவே நிர்ப்பந்தமாக மக்கள் வெளிவேளியேற்றப்படல் தவிர்க்கப்படல் வேண்டும்; அவ்வாறு வெளியேற்றப் பட்டால் அம்மக்களை சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுப்படவேண்டும்.

சுருக்கின் ஓர் அரசு எவ்வாறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நெறிப்படுத்துவதோடு குடிமக்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே இவ் விதிகளின் நோக்கம். ஆனால் பல வித அழுத்தங்கள் சர்வதேச அமைப்புக்களால் கொடுக்கப்பட்டபோதும் சிங்கள அரசு இவ் விதிகளை ஏற்று கைச்சாத்திட இன்றும் முன்வரவில்லை. இது தொடர்பாக சிறிலங்காவில் இயங்கும் (CRM) எனப்படும் சனநாயக உரிமைகளை காப்பதற்கான இயக்கம் சிங்கள அரசின் கடுமையான கண்டனத்தை தொடுத்துள்ளது. எனவேதான் உணவு அனுப்பாவிட்டால் தமிழீழ மக்கள் மண்ணைத் தின்னநேரிடும் என்று டி.பி கூறுவதன் பின்னணி புரிகின்றது. மண்ணை நம்பி தற்சார்பாக வாழக் கூடியவர்கள் எமது மக்கள் என்பதை அவருக்கும் காலம் உணர்த்தும்.

எனவே ஒரு தேசிய இன ஆன்மாவின் எழுச்சி எத்தகையது, அது ஒலிக்கும் குரலின் ஆற்றல் எவ்வளவு என்பன எமது விடுதலைப் போராட்டம் புதுயுகத்தின் புதுமைக் குரலாக இன்று ஒலிப்பதே எவரும் மனம் கொள்ள வேண்டிய உன்னதமான உண்மையாகும்.

> ஒரு நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு என்பன தட்டிக் கேட்க முடியாத சங்கதியாக இல்லை. ஒரு நாடு தனது குடிமக்கள் என்று கூறிக்கொள்வோரின் அடிப்படை மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கின்றது என்பதைப் பொறுத்தே இது அமையும்.

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு

## பேபி போட்டோ

பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-8544)

ஐந்தாம் ஆண்டில்
விறுடன் நுழையும்
மக்கள் தினசரி
ஈழநாதத்தின்
பணிகள் தொடர
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

## ஸ்ரீ தாமோதர விலாஸ்

403, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8573)

வெலிங்டன் சந்திக்கருகில்

## UNKCO

COMPUTER CENTRE
37, Clock Tower Road,
JAFFNA.

(சி-8528)

ஆண்டுகள் நான்கு
தமிழன்னைக்காய்
ஒலித்த ஈழநாதமே -- எங்கள்
இனிய நாதமே
சிரஞ்சீவியாய் நீ வாழ்க
ஈழமண்ணின்
வேதனைகளும் சோதனைகளும்
சாதனைகளும் மீட்டிடும் நாதம் நீ
உன் நாதம் கேட்டு வீரம் பிறந்தது
உன் பணி நாளும் தொடர்ந்திட
வாழ்த்துகின்றோம்!

## கலக்சி

புகைப்பட சேவை
337, 1ஆம் மாடி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8548)

முழங்கட்டும் போர்முரசம்!
மலரட்டும் தமிழீழம்!

## கணேசானந்தாஸ்

சில்க் பலஸ்
15, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(சி-8536)

5 ஆம் ஆண்டில் பிரவேசிக்கும் ஈழநாதம் பத்திரிகைக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

## எவர் விஷன்

21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

வீடியோ கமரா திருத்துதலும்,
வீடியோ படப்பிடிப்பு செய்பவர்களும்.

## குணம் அன் கோ.

21A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான மணிக்கூடுகளும் திருத்துபவர்கள்

(சி-8588)

ஈழநாதம் 5 ஆம் ஆண்டில் எமது வாழ்த்துக்கள்

# மனப் புரட்சியும் சமூகப் புரட்சியும்

## கிருஷ்ணமூர்த்தி பற்றி ஒரு அறிமுகம்

அன்ரன் பாலசிங்கம்

யார் இந்த கிருஷ்ணமூர்த்தி? கடவுள் என்றும், ஞானி என்றும், புத்தனின் அவதாரம் என்றும், அனுபூதிமான் என்றும், ஆன்மயோகி என்றும், தத்துவதர்சி என்றும் நாம பதிக்கும் சமூக முத்திரைகளுக்கும் நமக்குத் தெரிந்த சாதாரண அளவிடுகளுக்கும் அகப்படாத ஒரு அபூர்வமான மனிதர்!

அவர் யார் என்பதை வரையறுத்துக் கொள்வது கடினம். அப்படி வரித்துக் கொண்டு நாம் அவரைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

'அவர் யார்' என்ற கேள்விக்கு, அவர் யாருமற்றவர் என்பது தான் பொருத்தமான பதில். ஏனென்றால் அவர் தனது சுயத்தை, ஆளுமையை அகத்தின் முகத்தை அழித்துக் கொண்டவர்.

அவர் ஒரு அசாதாரண மனிதர். அழகான மனிதர்.

தொண்ணூறு ஆண்டுகள் வரை நம்மோடு, இப்பூமியில் வாழ்ந்தார். இதில் எழுபத்தைந்து ஆண்டுகள் வரை நம்மோடு சதா கலந்துரையாடினார். போதித்தார், எழுதினார்.

மனித மனம்பற்றி, மனித உறவுகள் பற்றி, மனித விழிப்புணர்வு பற்றி, மனித விடுதலை பற்றி மனித வாழ்வின் சகல சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் மிகவும் கனிவுடன், மிகவும் அக்கறையுடன், மிகவும் துல்லியமான தெளிவுடன், மிகவும் அழகான, அற்புதமான கவிதா மொழியில் பேசினார். எழுதினார்.

அவரது போதனைகள், எழுத்துக்கள், எல்லாவற்றையும் நாம் ஒன்று சேர்த்து தொகுத்துப் பார்த்தால் அவை ஒரு பெரும் தத்துவார்த்தமாகவோ, கருத்துக் களஞ்சியமாகவோ அல்லது ஓர் ஆன்மீக தரிசனமாகவோ அமையமாட்டா. அவை அனைத்துமே நம்மை நோக்கி எறியப்படும் கேள்விகள்; நம்மோடு சேர்ந்து நடத்தப்படும் தேடுதல்கள்; நமது கனவுகளைக் கலைத்து, நம்பிக்கைகளை உடைத்து விழிப்புணர்வைத் தூண்டும் விசாரணைகள். கிருஷ்ணமூர்த்தி நமக்கு எவ்வித தத்துவக்கோட்பாடுகளையும் நெறித்து விடவில்லை. ஆன்மீக ஞான தரிசனத்தை அளித்து விடவில்லை. உண்மைப் பொருளை கண்டுகொள்ள ஒரு மார்க்கத்தைக் காட்டவில்லை.

யுகம் யுகமாய் நமக்குள், நமது மனக்குகை இருட்டினுள், நாமே வரைந்து விட்ட நிழலுருவங்களை, புனைந்துவிட்ட பொய்மைகளை கண்டு கொள்வதாயின், 'நாமே நமக்கு ஒளியாக வேண்டும்' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுயதரிசனக் கண்ணாடி.

மனித குலம் இன்று தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் ஒரு பயங்கர அணு யுத்தத்தின் விளிம்பில் நிற்கிறது. உலகமானது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதைபட்டுக் கிடக்கின்றன. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும், மனித இனம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகிறது. இனவாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன்முறைக்கு தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தம், போராட்டம், புரட்சிகள் வெடித்து மனிதனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கிறான். இவ்விதம் மனித வாழ்வு சீர்குலைந்து கிடப்பது ஏன்? மனித உறவுகள் சிக்குப்பட்டு குரோதமடைவது ஏன்? மனிதர்களிடையே அன்பும், அமைதியும் ஒத்திசைவான வாழ்வும் செத்துப் போனது ஏன்? மனிதன் முழுமையோடு நிறைவோடு, உள்ளும் புறமும். இசைவாக அமைதியோடு ஆனந்தமாக வாழ முடியாதா?

மனிதன் நாகரீகங்களைத் தோற்றுவித்தான். அவை அழிந்து போயின. சாம்ராஜ்யங்களைக் கட்டி எழுப்பினான். அவை இடிந்துவிழுந்தன. சமுதாய வடிவங்களை உருவாக்கினான். அவை சிதைந்து போயின. மனிதன் மீண்டும் ஒரு உன்னதமான, புதுமையான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழைகிறான். சமுதாய அமைப்பை மட்டும், மீண்டும் மீண்டும் மாற்றியமைத்து விடுவதால் மனிதன் சுபீட்சமடைய முடியுமா?

தனிமனிதனுக்கு புறம்பான எல்லாம் வல்ல ஒரு சக்தியாக, தனிமனிதனை ஆட்டிப் படைக்கும் சக்தியாக, தனிமனித தனித்துவத்தை நசுக்கிவிடும் ஒரு சக்தியாக சமுதாய அமைப்பு இயங்கும் பொழுது அது மனித முழுமைக்கும் விடுதலைக்கும் வழிவகுக்குமா?

சமுதாயம் என்பதே சிக்கலான மனித உறவுகளைக் குறிப்பது அல்லவா? இந்த உறவு எனக்கும் உனக்கும் உள்ள உறவு. அவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள உறவு. தனிமனித உறவுகளின் ஒட்டு மொத்தமான சிலந்தி வலைப் பின்னலாக சமூக அமைப்பு உருவகம் பெறுகிறது. தனிமனிதன் தனது மனவுலக இருட்டினுள் பாதை தெரியாது தடுமாறும்பொழுது, பொய்மைகளில் புதைந்து குழம்பும்போது, எனக்கும் உனக்குமுள்ள உறவுகளில் புரிந்துணர்வு இல்லாதபோது, அவனுக்கும் மற்றவனுக்குமுள்ள உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது சமுதாயத்தை மாற்றியமைக்க விழைவதில் என்ன 'அர்த்தம் இருக்கிறது? அக உலகத்தை அறவே உதாசீனம் செய்து புறஉலகத்தை, பொருளுலகத்தை மட்டும் சீரமைப்பதால் மனித வாழ்க்கை சிறப்புற முடியுமா?

இவ்விதம் கேள்விகளை எழுப்பும் கிருஷ்ணமூர்த்தி, முதலில் தனிமனிதன் தனக்குள், தனது மனவுலகில் ஒரு புரட்சியை செய்யவேண்டும் என்கிறார்.

''சமுதாயப் புரட்சியானது தனிமனிதனிலிருந்து, தனிமனிதன் உள்ளீடான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். தனிமனிதனின் உள்ளீடான புரட்சி நிகழாமல், மனவமைப்பு மாற்றப்படாமல், தனிமனிதனுக்குப் புறம்பாக, வெளியே நிகழும் எவ்வித புதுமையான சமூகப் புரட்சியும் உள்ளடக்கத்தில் உயிரற்றதாகவே இருக்கும். உயிர்த்துடிப்புள்ளதும் சிதைந்து போகாததுமான ஒரு புதிய சமூகவடிவத்தைக்கட்டி எழுப்புவதாயின் தனிமனிதனின் மனவரங்கில் ஒரு புரட்சி நிகழ்வது அவசியம்'' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

இந்த மனப்புரட்சியானது பிரக்ஞையின் விழிப்புணர்வாக, பிரக்ஞையின் அடித்தளத்திலிருந்து வெடித்தெழ வேண்டும்.

நானே என்னைப் புரிந்து கொள்ளாதவரை, வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளாதவரை, பொய்மைகளின் இருண்ட சுவர்களுக்குள் நான் சிறைபட்டுக் கிடக்கும்வரை நான் மற்றவனைப் புரிந்துகொள்வது எங்ஙனம்? இந்த சமூகத்தையும் உலகத்தையும் அறிந்து கொள்வது எங்ஙனம்?

இந்த சமூகமோ, உலகமோ என்னிடமிருந்து மாறுபட்ட, ஒரு பூடகமான பொருளல்ல. நானே இந்த சமூகத்தையும் உலகத்தையும் சிருஷ்டித்துள்ளேன். இந்த சமூகமும் உலகமும் எனது சுயத்தின் அசிங்கமான வெளிப்பாடாக பொருளுருவம் பெற்றிருக்கிறது. எனது ஆசைகள், எனது கனவுகள், எனது விருப்பு வெறுப்புகள், எனது மனப்புற்றிலிருந்து பாம்புகளாகச் சீறும் துவேஷங்கள், வெறிகள் எல்லாமே இந்த சமூக உலகத்தை, சமூக உறவுகளைப் படைத்திருக்கிறது. எனவே, நானே இந்த சமூகம்; நானே இந்த உலகம்.

நான் சிருஷ்டித்த இந்த சமூக உலகத்தை, நானாகவுள்ள இந்த சமுதாயத்தை, நானே மாற்றியமைப்பதனால் அந்தப் புரட்சி எனக்குள் தொடங்கப்பட வேண்டும். எனது மனவுலகக் களத்தில் அந்தப் போராட்டம் ஆரம்பமாக வேண்டும்.

இந்த உள்ளீடான மானசீக யுத்தத்தில் எனது விடுதலைக்கான ஆயுதம் எனது விழிப்புணர்வுதான். இந்த விழிப்புணர்வு வெளிச்சத்தில் எனது மனதின் வேஷங்களை, கோலங்களை நான் கண்டு கொள்ள வேண்டும். பொய்மைகளைக் கண்டு கொள்ளும் பொழுதுதான் உண்மை புலனாகிறது.

ஆன்மீக யாத்திரை என்றும், அகவுலகப் பயணம் என்றும், தியானம் என்றும், யோகம் என்றும், நமக்குள் ஒளிந்திருக்கும் ஆன்மத்தின் சூட்சுமத்தை அறிந்து கொள்வதென்றும், நாம் உலகத்தைத் துறந்து, வாழ்க்கையைத் துறந்து, உறவுகளை அறுத்து, யுகம் யுகமாய் நடத்திய தேடுதலால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் கடவுள் என்று தேடி அலைந்ததெல்லாம் நமது ஆசையின் நிழல்களன்றி வேறொன்றுமல்ல. கால விசாலத்தின் எல்லைகளைக் கடந்து சாவின் நியதியைவென்று, துன்பத்தின் அழுத்தங்கள் அகன்ற ஒரு நித்தியமான, சிரஞ்சீவியான, பேரானந்தமான ஜீவிதத்தை கனவு கண்ட நமது விபரீதமான ஆசை கடவுளாகப் பிறந்தது. இந்தப் பூமியில் ஆயிரமாயிரம் கோவில்களைக்கட்டி அதைக் குடியமர்த்தினோம். அர்த்தமிழந்த, அசட்டுத்தனமான நமது வாழ்க்கைக்கு ஒரு பிரமாதமான அர்த்தமாக, ஒரு அலாதியான நம்பிக்கையாக, கடவுள் என்ற கருத்துருவத்தை நாம் தழுவிக் கொண்டோம். நமது மனமோ கனவுலகில், கற்பனையுலகில், நிதர்சனத்திற்குப் புறம்பான புராண உலகில் தூங்குகிறது. இந்தப் புராதன மனதால், புளித்துப்போன பழைமையில் புதைந்திருக்கும் மனதால், காலம் காலமாகப் பொய்களால் வனையப்பட்ட மனதால், மூடநம்பிக்கைகளில் திளைத்துப் போன மனதால், சித்தாந்தங்கள், வேதாந்தங்களில் சிக்குப்பட்ட மனதால், கருத்துலகக் கோட்பாடுகளில் கட்டுண்ட மனதால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் ஒரு குருவை வரித்துக் கொண்டோ, ஒரு ஆன்மீக வழிகாட்டியைப் பின் தொடர்ந்தோ, ஆசிரமத்தில் தவமிருந்தோ, மந்திரங்கள் ஓதி, பிரார்த்தனைகள் செய்து அழுதுபுரண்டு ஆண்டவனை வேண்டியோ உண்மைப் பொருளைக் கண்டுகொள்ள முடியாது.

அறிவுப் பசியில் அலையும் நமது மனமோ கருத்துகளை விழுங்குகிறது. அனுபவத்தைத் தேடித் திரட்டுகிறது. ஞாபகப்பளுவை பெருக்குகிறது. நடமாடும் நூல்களாக, மற்றவர்களது செத்துப்போன கருத்துக்களை சதா அசை போடும் இயந்திரமாக எண்ணத்தின் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடக்கும் அறிவார்ந்த மனமும் உண்மையைக் கண்டுகொள்ளாது.

எண்ணத்தால், சிந்தனையால், அறிவால், அனுபவத்தால், மனிதன் காலம் காலமாய் வரைந்து கொண்ட கருத்துருவச் சித்திரங்கள் எல்லாம் பழைய மனதை, பயிற்றப்பட்ட மனதை சார்ந்தவை. இந்த பழைய மூளையத்தின் படிமங்களால் மெய்மையின் கதவுகளைத் திறக்கமுடியாது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

''மனித வாழ்வில் எண்ணம் ஏன் இத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகிறது என்று விசாரித்துப் பார்த்தீர்களா? மனதின் அனுபவக் கடலிலிருந்து ஓயாது அலைமோதும் கருத்துருவங்களாக, படிமங்களாக சதா மனதை உலைத்துக் கொண்டிருக்கும் இந்த எண்ணத்திற்கு நாம் ஏன் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்? மிகவும் தந்திரமாக, மிகவும் நுட்பமாக, மிகவும் சாதுரியமாக இயங்கும் எண்ணமானது தன்னிச்சையில், தனக்கேற்றவாறு சகலத்தையும் திரிபுசெய்து கொள்கிறது. நமது உறவுகளிலெல்லாம் பிளவையும் முரண்பாட்டையும் தோற்றுவிக்கிறது. இன்பம் துன்பம் என்று வாழ்வனுபவத்தைக்கூறுபோட்டு, எண்ணற்ற அனுபவக் கூறுகளை மனதின் நினைவறையில் குவித்துக்கொள்ளும் எண்ணமானது அந்த அனுபவக்கிடங்கிலிருந்தே மீண்டும் புனர்ஜென்மம் பெறுகிறது. வாழ்க்கைக்கு இந்த எண்ணத்தால் அளிக்கப்படும் விளக்கங்களும் வியாக்கியானங்களும் நேற்றைய, இறந்த கால அனுபவத்திலிருந்து பெறப்படுபவைதான். ஆகவே எண்ணமானது இறந்த காலத்தை சார்ந்தது; பழமையானது'' என்று குறிப்பிடும் கிருஷ்ணமூர்த்தி, எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுணர்ந்து கொள்வது தான் சுயதரிசனத்தின் அகப் புரட்சியின் ஆரம்பம் என்கிறார்.

எண்ண அசைவின் மையமாக எனது சுயம் இயங்குகிறது. இந்த சுயம் என்றால் என்ன? நான் என்று எனக்குள்ளிருந்து எண்ணிக் கொண்டிருப்பவன் யார்? அவதானிப்பவனாக, அனுபவிப்பவனாக, ஆசைப்படுபவனாக, எனக்குள் என் அகமாக, அந்தரங்க ஆத்மாவாக, என் ஆளுமையாக, என் அகந்தையாக, ஆணவமாக இயங்கி வரும் எனது சுயம் எப்படித் தோற்றம் கொண்டது? இந்த உலகத்தில் எனக்கு எல்லாமே அதுவாக, அதற்காக வாழ்ந்து அதற்காக அனுபவித்து அதற்காக துயரப்பட்டு, அதை நான் நிரந்தரமான நானாக நம்பி, அலாதியான பிரியத்தோடு நான் வழிபட்டுப் போஷிக்கும் அந்த நான், எனது சுயம் எனக்குச் சொந்தமானது எப்படி?

நான் பிறந்த கணத்திலிருந்து எனக்கொரு பெயர், எனக்கொரு சாதி, எனக்கொரு மதம் என்று எனது சமூகத்தின் சம்பிரதாயப் பொம்மையாக எனது சுயம் வனையப்படுகிறது.

எனது வாழ்வனுபவத்திலிருந்து, எனது நினைவுலகத்திலிருந்து எனது

(23 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்றாம் உலக நாடுகளும் வெகுசன தொடர்புத்துறையும்

வெகுசனத் தொடர்புத்துறை என்ற சொற்றொடரில் மூன்று அம்சங்கள் உள்ளன. அச்சு வழி வெகுசனத் தொடர்பு (Print Journalism ஒரு துறை. இப்போது உருவாகியுள்ள மின்னியக்கத் தொடர்புத் துறை Electronic Journalism) வேறு ஒன்று. மூன்றாவது பரபாக உள்ள பாரம்பரிய தொடர்புச் சாதனங்கள்.

பாரம்பரியமான தொடர்பு வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், அச்சு வழி வெகுசனத் தொடர்புத்துறை மற்றும் பல்வேறு தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாகப் பரிணமித்துள்ள மின்னியக்கத் தொடர்புத்துறை ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த ஆய்வு ஐரோப்பிய நாடுகளில் ஒரு துறையாகவுள்ளது. ஆனால், இவை குறித்துப் போதிய ஆய்வுகள் மூன்றாம் உலக நாடுகளில் மேற்கொள்ளப்படவில்லை. ஆய்வு ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இத்துறைசார் ஆய்வு அறிக்கை என்று சொல்லும் அளவிற்கு எதுவும் இல்லை. லேணர் மற்றும் கிறாம் கொம்யூனிகேசன் அன்ட் சேஞ்ச் இன் த டெவெலொப்பிங் கன்றீஸ் (Communication and Change in the Developing Countries) Honolulu, 1967) என்ற நூலை எழுதியுள்ளார்கள். இதன்பிறகு கடந்த பத்து ஆண்டுகளில் இத்துறையில் ஆங்கிலப் பிரசுரத்தினரால் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்கள், வெளிவந்த கட்டுரைகள் பல மூன்றாம் உலக நாடுகளில் வெகுசனத் தொடர்புத்துறை ஏற்படுத்தும் மாற்றங்கள் குறித்துப் பெரும்பாலும் குத்துமதிப்பாகவே எழுதப்பட்டவை. அனுவல் றிவ்யூ ஒவ் சோசியோலொஜி (AnnualReviewof Sociology) என்ற சஞ்சிகையில் மாஸ் கொம்யூனிகேசன் அன்ட் நாசனல் டெவெலொப்மென்ற் Mass Communication and National Development) என்ற தலைப்பில் ஹொலஸ் மற்றும் றயிற் (1979) எழுதிய கட்டுரையில் மூன்றாம் உலக நாடுகளில் வெகுசனத் தொடர்புத்துறை குறித்து எட்டரை வரிகளே எழுதியுள்ளார். இந்த வெளியீடுகள் எல்லாமே அநேகமாக ஐரோப்பிய பார்வையில் எழுதப்பட்டவை. இதில் மற்றொரு பரிமாணமும் இருக்கிறது அதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அது, வெகுசனத் தொடர்புத் துறையும் மூன்றாம் உலக நாடுகள் என்னும் பொருளைப் பற்றி என்ன ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்பது பற்றியல்ல, வெகுசனத் தொடர்புத் துறையைப் பற்றியதே ஆகும்.

இதழியல் (Journalism) பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள நூல்களும் பல அம்சங்களில் ஐரோப்பிய அனுபவங்கள் ஊடாகவே அமைந்திருக்கின்றன. ஐரோப்பிய நூலாசிரியர்கள் பலரும் தங்கள் தங்கள் பார்வையில் பட்டதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மேற்கு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க செய்தியாளர்களினதும், பத்திரிகை ஆசிரியர்களினதும் திரட்டிய அனுபவங்களையும், கருத்துக்களையும் பிரதிபலிப்பதாய் இந்நூல்கள் அமைந்துள்ளன. மேற்கு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வெகுசனத் தொடர்புத் துறைக்கும், மூன்றாம் உலக நாடுகளின் தொடர்புத் துறைக்குமிடையில் சமூக, பொருளாதார, பண்பாட்டு நோக்கங்களில் பாரிய வேற்றுமைகள் இருக்கின்றன. இந்த நிலையில் எல்லாவற்றையும் ஒருமைப்படுத்திப் பொதுக்குணம் காண்பது உண்மையைப் புறக்கணிப்பதாகும். சொல்லப்போனால், எங்கிருந்தோ இறக்குமதி செய்யப்படும் நூல்கள் மூன்றாம் உலக நாடுகளில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மூத்த பத்திரிகையாளர் கணிக்கிறார்கள்.

''பொதுவாக அமெரிக்க அல்லதுஐரோப்பிய இதழியல் பாட நூல்களே சந்தையில் உள்ளன. அந்த நூல்கள் மற்ற நாடுகளில் உபயோகிப்பதற்குப் பொருத்தமற்றவை. மாற்று வழியிலாத காரணத்தால் இந்த நூல்கள் உபயோகிக்கப்படுகின்றன'' என்று அவுஸ்ரேலியன் ஜேனலிசம் றிவ்யூ (AustralianJournalismReview) என்ற சஞ்சிகையில் டொன் வூல்போட் எழுதுகிறார்.

''வெளிநாட்டு நூல்களில் உள்ள கருத்துக்களை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றாமல் அதை அப்படியே மாணவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இத்தகைய பெரும் குறைபாடுகள் மத்தியிலும் இந்த நூல்கள் பெரும்படியாகப் பாவனையில் உள்ளன'' இவ்வாறு போல் அன்சா என்ற கானா நாட்டு மூத்த பத்திரிகையாளர் ஆதங்கம் தெரிவிக்கிறார்

## மூன்றாம் உலக நாடுகளின் தன்மைகள்.

இனி, மூன்றாம் உலக நாடுகளின் வெகுசனத் தொடர்புத் துறையில் பொதுத் தன்மைகள் சில இருந்தபோதிலும், மூன்றாம் உலக நாடுகள் எல்லாவற்றையும் ஒத்த தன்மையுடையவையாகப் பார்ப்பதில் தவறு உள்ளது. இந்த நாடுகள் அரசியல், பொருளாதார, சமூக விஷயங்களில் ஒரே சீரான தன்மை கொண்டவை அன்று. ஒவ்வொன்றும் அலாதியான குணவிசேஷங்களைக் கொண்டுள்ளன. இந்த நாடுகளில் சில எப்போதும் குடியேற்ற நாடுகளாக இருந்ததில்லை. உதாரணமாகத் தாய்லாந்தைக் குறிப்பிடலாம். எத்தியோப்பியா சில காலம்தான் குடியேற்ற நாடாக இருந்தது. பொருளாதார - சமூக அமைப்பிலும் லத்தீன் அமெரிக்காவையும், ஆபிரிக்காவையும் ஒரே அளவு கோல் கொண்டு அளக்க முடியாது. அதேமாதிரி ஆட்சி முறைகளிலும் மூன்றாம் உலக நாடுகளுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. தவிர, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வித்தியாசங்கள் இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு இரு நாடுகளும் ஒரேமாதிரியாக இல்லை. இலங்கையில் எழுத்தறிவுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகம். யப்பான் நீங்கலாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையில் இலங்கை முன்னணியில் உள்ளது. இந்தியாவில் எழுத்தறிவுள்ளவர்கள் 30 விகிதம். இந்திய ஜனத்தொகையில் இரண்டு சத விகிதத்தினருக்கு மாத்திரம் ஆங்கிலம் எழுதப் படிக்கத்தெரியும். இதெல்லாவற்றிற்கும் மேலாக, புவியியல் அடிப்படையிலும் இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் உள்ளன. இலங்கையில் மத்திய மலைத் தொடர் நாலா பக்கங்களிலும் சரிந்திருப்பது ஒளிபரப்புச் சேவைக்குப் (ரி. வி) பயன் பொருத்தமாக அமைந்துள்ளது. பிஜித்தீவில் ஒளிபரப்புச் சேவைக்கே பலஇயற்கையான தடைகள் உள்ளன. மற்றும்படி மூன்றாம் உலக நாடுகளில் மிகவும் பின்தங்கிய பகுதி ஆபிரிக்காவாகும். இந்தக் கண்டத்தில் தென் ஆபிரிக்கா, எகிப்து ஆகிய நாடுகள்தான் ஓரளவு முன்னேறிய நாடுகளாக உள்ளன.

## வெகுசனத் தொடர்புத் துறையில் பின்னடைவு

இந்தப் பின்புலத்தில் மூன்றாம் உலக நாடுகளில் வெகுசனத் தொடர்புத்துறையில் ஒரு பொதுப் பரிமாணம் இல்லை என்பது தெளிவாகின்றது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் வெகுசனத்தொடர்புத்துறையில் மூன்றாம் உலக நாடுகள் ஏனைய நாடுகளை விடப் பின்னடைவாக உள்ளதாக யுனெஸ்கோ அறிக்கை பரிந்துரைக்கின்றது. வெகுசனத்தொடர்புத் துறையில் 65 நாடுகள் பின்தங்கியுள்ளன. ஆபிரிக்காவில் 26 நாடுகளும் ஆசியாவில் 18 நாடுகளும், தென்அமெரிக்காவில் 15 நாடுகளும், பசுபிக் அட்லாண்டிக் பிரதேசத்தில் ஐந்து நாடுகளும் இத்துறையில் பின்தங்கியுள்ளன. இந்த நாடுகளில் தினசரிப் பத்திரிகைகள் வெளியாகும் நாடுகள் 37 என்றும், தினசரிகள் வெளிவராத நாடுகள் 28 என்றும் அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்ன என்பது கேள்வி.

மூன்றாம் உலகநாடுகளில் வெகுசனத் தொடர்பு புத்துறை பின்தங்கி இருப்பதற்குக் குடியேற்ற நாட்டு ஆட்சி முறையும் ஒரு காரணமாகும். ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகள் பல மிக அண்மைக் காலம் வரை குடியேற்ற நாடுகளாக இருந்தன. விடுதலை இயக்கங்களுக்குத் தொடர்பு சாதனங்கள் களமாக அமையும் என்றகாரணத்தால் தமது குடியேற்ற ஆதிக்க நாடுகளில் தொடர்புத்துறை வளர பிரான்ஸ், பிரித்தானியா போர்த்துக்சல், ஸ்பெயின் ஆகிய நாடுகள்தடையாகஇருந்தன. ஆயினும்ஆபிரிக்க, லத்தீன்அமெரிக்கபத்திரிகைகள் செய்திகளை திரட்டி வெளியிடுவதற்காக நடத்தும் போராட்டம்உலகத்தின் கவனத்தைக் கவர்ந்து வருகின்றது.

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் மூன்றாம் உலக நாடுகள் சிலவற்றில் ஒரு இனம்-அநேகமாகப் பெரும் பான்மை இனம் தனது பண்பாடும் இனமும்தான் சிறந்தன என்று அழுத்தும் மேலாண்மைக் கலாசாரம் (Ethocentrism) மேலோங்கி இருக்கின்றது. பெரும்பான்மை இனம் சொந்தக் காரணங்களுக்காக அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிறுபான்மை இனத்தவரின் பத்திரிகைகளின் வளர்ச்சியையும், தோற்றத்தையும் சிதைக்கும் வக்கிரப் போக்குக் காணப்படுகிறது, சிறிலங்கா அரசின் போக்கிலும் மேலாண்மைக் கலாசாரத்தின் சாயலைக் காணலாம்.

தென் ஆபிரிக்காவிலும் இதே நிலைதான். தென் ஆபிரிக்கமொழிகளானபண்டு, ஜுலு மொழிகளில்பத்திரிகைகள் வெளிவர அங்கு ஆரோக்கியமானதளமில்லை அரசின் அடக்கு முறைகள் பெரும்பான்மைக் கறுப்பின மக்களைஅணுகாதிருக்க தென் ஆபிரிக்கஅரசுபத்திரிகைகளின் வளர்ச்சியை! [மட்டுப்படுத்தியது.

மூன்றாம் உலக நாடுகள் சிலவற்றில் வெகுசனத் தொடர்புத் துறையைத் தொடங்க முடியாத சூழ்நிலையும் உள்ளது. உதாரணமாக, நேபாளத்தில் மன்னராட்சி முறையை எதிர்த்துப் பல முறை போராட்டங்கள் நடந்துள்ளன. பத்திரிகைகள் செய்யும் காரியங்களால் தமது ஆட்சி ஆட்டம் காணும் என்று அறிந்த அரசவம்சத்தினர் பத்திரிகைத் துறை மற்றும் கல்வித் துறை வளர முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிஉள்ளனர் பத்திரிகைத் துறையின் வளர்ச்சி எழுத்தறிவில் தங்கியுள்ளது நேபாளத்தில் எழுத்தறிவு உள்ளவர்களின் தொகை 12 சத விகிதம்தான் நேபாளத்தில் பத்திரிகைகளை வெளியிட முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அது வெற்றிபெறவில்லை இரகசியமாக ஓரிரு பத்திரிகைகள் வெளியிடப்படுவதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் கூறுகின்றன. ஸ்பானிய மொழி பேசப்படும் தென் அமெரிக்க நாடுகள் சிலவற்றில் இறுக்கமான சர்வாதிகார ஆட்சி நடை பெறுகிறது. வெகுசனத் தொடர்புத்துறை இந்த ஆட்சி முறையை நிராகரிப்பதால் ஸ்பானிய மொழிப் பத்திரிகைகள் வளர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்து சில நாடுகளில் தொடர்புத்துறை வளர்வதற்கு மொழியும் தடையாக உள்ளது. இந்தியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினர் மலைஜாதியினர், பழங்குடிகள் குலக் குழுக்கள் என்று வாழ்கின்றனர். இவர்கள் பேசும்மொழிகள்எழுத்துருவில் இல்லை இவர்களுக்கான ஒரு எழுத்து வடிவத்தை உருவாக்குவதில் சம்பந்தப்பட்ட அரசுகள் கரிசனை காட்டுவதில்லை. ஆகவே மூன்றாம் உலக நாடுகள் வெகுசனத் தொடர்புத்துறை வளர்வதற்கு மொழியும் ஓரளவு தடையாக உள்ளது.

## வல்லாதிக்க நாடுகளின் தாக்கம்

மூன்றாம் உலக நாடுகளின் வெகுசனத் தொடர்புத் துறையில் வல்லாதிக்க நாடுகளின் தாக்கமும் உள்ளது என்பது ஆய்வுக்கு உட்பட்டதாகும். 2- ஆம் உலகப் போருக்குப் பிறகு ஹிட்லரின் வீழ்ச்சியுடன் இணைந்தாற்

**மதன்**

போல் கம்யூனிசம் எழுச்சி அடைந்தது. குறிப்பாக வட கொரியா அமெரிக்காவுக்கு ஒரு சவாலாக அமைந்தது. மூன்றாம்உலகநாடுகளிலிருந்து அந்நியமயமாகாமலும், அமெரிக்காவின் செல்வாக்கை உலகில்தக்க வைத்துக் கொள்ளும் நோக்குடனும் 1948- இல் ஜனாதிபதி ஹரி எஸ். ரூமன் பத்தம்சத் திட்டத்தை முன்வைத்தார். அதில் 4- வது ஷரத்து, ''எமது விஞ்ஞான முன்னேற்றங்களையும், தொழில் அபிவிருத்தியையும் வளர்ச்சியடையாத பிரதேசங்களுக்கு வழங்குவதன் மூலம் அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்' என்று கூறுகின்றது. அமெரிக்கா எண்ணக் கருவில் 'அபிவிருத்தி செய்தல்' என்பது நவீனமயப், தொழில் நுட்பம், நகரமயமாதல், பொருளாதார அபிவிருத்தி, நவீன அமைப்புகளை உருவாக்குதல் என்பதாகும். இதன் வழி வெகுசனத்தொடர்புசாதனங்களும் அடங்கும். மூன்றாம் உலக நாடுகளில் சமூகமுன்னேற்றத்துக்கான காரணிகளில் வெகுசனத் தொடர்புத் துறையும் ஒன்று. எமது பாரம்பரிய தொடர்பு வடிவங்கள் மற்றும் நவீன தொடர்புச் சாதனங்களால் பயன்படுத்தி மூன்றாம் உலக நாடுகளை மேற்கத்தேயமயமாக்கும் போக்குக் காணப்படுகிறது. இதே கொள்கையைத்தான் உதவும் நாடுகளும்(Aid Group)கொண்டுள்ளன சுருக்கமாகச் சொல்லப் போனால் மேற்கத்தேய கலாசாரம் குறித்த வெளிப்பாடுகள் சில மூன்றாம் உலக நாடுகளின் வெகுசனத் தொடர்புத்துறைகளில் அரும்பியுள்ளது. இன்னும் சில நாடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

## கலாசார ஆக்கிரமிப்பு

தமது சொந்தப் பண்பாட்டை விமர்சிக்கும் புத்திஜீவிகள் கலாசார ஆக்கிரமிப்பிலிருந்து மூன்றாம் உலக நாடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். இது சுதந்திரமான வெகுசனத் தொடர்பை மறுக்கும் தன்மை என்றும் விமர்சிக்கப்படுகிறது. எது எப்படியிருந்தாலும் மேற்கத்தேய நாடுகள் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மூலம் ஒளி, ஒலி பரப்பித் தம்பணியை நிறைவேற்றுகின்றன. உதாரணமாக அமெரிக்க தயாரிப்பான டொனால்ட்டக் ஓர் 'கலாசார ஏகாதிபத்தியவாதி' என்று மெற்லான்ட் என்பவர் கூறுகிறார்.

மின்னியக்கத் தொடர்புத் துறையில் யப்பானுக்கு

(23 ஆம் பக்கம் பார்க்க)

# விறகாகிப்போன வேர்

வவுனியா-திலீபன்



சிறுகதை

**வீ**ட்டுப் படலையடியில் தபால் காரனின் மணிச்சத்தம்.

சங்கரின் கடிதம் வந்திருந்தது.

வழமையான கடிதங்களைப் போலவே இதிலும் தன் 'அட்டகாசங்களை' அவன் புலம்பியிருந்தான். இந்த மண்ணின் நிகழ்வுகளை ஆர்வத்துடன் கேட்டிருந்தான்.

'மச்சான் ... உன்னை மறக்கமாட்டேன். எங்கிருந்தாலும் உன் நினைவுகளுடனேயே இருப்பேன்' என்று வசனம் பேசிவிட்டு -

நோர்வே. . சுவிற்ஸர்லாந்து. கனடா. ஜெர்மனி... பிரான்ஸ் என்று பல நாடுகளுக்கு ஆதவனின் நண்பர்கள் பலர் சென்றிருக்கிறார்கள்.

சிலமாதங்கள்... ஓரிரு வருஷங்கள்... பின்னர் அவர்களிடமிருந்து வரும் கடிதங்கள்கூட நின்று போய் விடும்.

ஆனால் - சங்கர், மாதத்தில் ஒரு கடிதம் தவறாமல் ஆதவனிற்கு அனுப்பி வைப்பான்.

சங்கர் மீது நேசம் அடர்த்தியாக வளர்வதற்கு இதுதான் காரணமாக இருக்க வேண்டும் என்று ஆதவன் பல தடவைகள் நினைத்ததுண்டு.

தொடர்ந்து அவன் கடிதத்தை வாசித்தான்.

'நான் அந்நிய தேசத்தில் பல அந்நிய முகங்களுக்கு மத்தியில் வேற்று மொழியைப் பேசியபடி இயந்திரத் தனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

பத்து வருஷங்கள் வெறுமையான வாழ்க்கை நான் வாழ்ந்து கொண்டிருந்தாலும், உன் ஞாபகங்கள் என்னை சில நிமிஷ நேரம் என் சொந்த மண்ணில் வாழ வைக்குமாப் போன்று இருக்கும்.

அச்சமயத்தில்-

புதிய உணர்வு என் நெஞ்சமெல்லாம் பரவும். என்னை பரவசத்தில் மூழ்க வைக்கும்.'

அக்கடிதத்தில் சங்கரின் மனவுணர்வுகள் வெளிப்பட்டன. வாழ்வின் பூரணமின்மை தெரிந்தது.

''ஆதவன் இண்டைக்கு ஒரு விளையாட்டுச் செய்வமே...''

''சொல் மச்சான்''

''படம் முடிஞ்சு சனம் வரும்போது ஆஸ்பத்திரிச் சந்தி பொலிஸுக்கு சாத்துவம்...''

''சங்கர்... ஏண்டா சனம் வரும் போது செய்யவேணும்?''

''உனக்கு அறிவிருக்கே... சனம் இல்லாவிட்டால் திரண்டு வாற பொலிஸ்காரன்கள் பிறகு எங்களைப் பிடிச்சுப் போடுவான்கள். நாங்கள் தப்பிக் கொள்ள முடியாமல் போய்விடும்'',

சங்கர் சொல்வது சரியெனப்பட்டது.

''குட் ஐடியா!'' என்றான் ஆதவன்.

திட்டமிட்ட நேரம்.

புத்தர் சிலைக்கு காவலாக நின்ற பொலிஸ்காரனை நோக்கி கற்கள் வீசப்பட்டன.

ஆதவன் ஓடிய சைக்கிளில் சங்கர் ஏறிக்கொண்டான்.

''நாங்கள் செய்த வேலையைப் பற்றி நீ என்னடா நினைக்கிறாய்... இது கூடாததா? என்று சங்கர் கேட்டான்.

''இல்லை'' - ஆதவன்.

''எங்கட மண்ணில் புத்தர் சிலையை வைத்துவிட்டு இது தன்ரை மண் எண்டு அவன் சொல்கிறான். கடவுளின் சிலைக்கு பொலிஸ்காரன் காவல் காக்கிறான் ... எப்படியிருக்கு நடப்பு...''

அவர்களுக்கு கொஞ்சம் அரசியல் தெரிந்தது. பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புத் தெரிந்தது. தமிழனை அடிமைப்படுத்த வேண்டும் என்கிற ஆட்சியாளரின் மனப்போக்கு தெரிந்தது.

மறுநாள்.

பொலிஸ்காரன் வைத்தியசாலையில், காயத்திற்கு கட்டுப் போட்டிருக்கிறானாம் என அறிந்து இருவரும் நீண்ட நேரம் சிரித்தனர்.

இது சந்தோஷம். மறைந்திருந்து-எதிரியை தாக்கிவிட்டு மௌனமாகச் சிரிப்பதில் இமயம் அளவு திருப்தி.

நகர எல்லைப் பகுதி ஒன்றில் சிங்களக் காடையர்களினால் - தமது நண்பன் ஒருவனின் வீடு தாக்குதலுக்கு உள்ளாகிறது என்பதை அறிந்து-

ஒரு இரவு.

இருவரும் புறப்பட்டு விட்டார்கள்.

அந்த வீட்டின் மதில் ஓரமாகப் பதுங்கிக் கொண்டார்கள். நண்பனின் வீட்டு ஓட்டின் மீது கற்கள் வந்து வீழ்ந்தன.

ஆதவனும் சங்கரும் உஷாரானார்கள்.

வீதியை இருபக்கங்களாலும் குறுக்காக வழிமறித்தார்கள். இரு காடையர்கள் கையில் சிக்குண்டனர்.

மறுநிமிடம்.

சரமாரியான அடிகள்.

'அம்மே...' என்று அவர்கள் அழுத சத்தம் அருகில் உள்ள சிங்களக் குடும்பமொன்றிற்கு கேட்டதாக அவர்கள் பொலிஸில் புகார் தெரிவித்திருந்தனர்.

இருவருக்கும் புரட்சி பிடித்திருந்தது.

தொட்டுப் பார்ப்பவனை தட்டிப் பார்க்க வேண்டும்என்கிற தாகம் இருந்தது. அழிக்க நினைப்பவனை அழ வைக்க வேண்டும் என்கிற நோக்கம் இருந்தது.

தமிழ் மண்ணில் புதிதாக சிங்களவர் குடியேற்றம் செய்யப்பட்டனர். குடியேறி வந்தவர்களுக்கு அரசின் சலுகைகள் போதாதென்று களவும் தேவைப்பட்டது.

பொலிஸின் அனுசரணையுடன் தமிழ்க் கிராமங்களுக்குள் சிங்களக் காடையர் நுழைவார்கள்; திருடுவார்கள்.

திருடன் ஒருவன் சங்கரிடம் வசமாக மாட்டுப்பட்டபோது - தாக்கப்பட்டான்.

இராணுவமும் பொலிஸும் சங்கரைத் தேடித்திரிந்தபோது - அவன் ஆதவனின் வீட்டில் மறைந்து கொண்டான்.

சங்கரைத் தேடி அவர்கள் ஆதவனின் வீட்டிற்கு வரலாம் என்ற எண்ணம் தோன்றியபோது காட்டில் சங்கர் தங்க வைக்கப்பட்டான்.

உணவை ஆதவன் சுமந்து சென்று கொடுத்தான். இதே வேளை-

ஆனாலும் இந்த இரு வெவ்வேறான உணர்வுகளின் கலப்புத்தான் கண்ணீர் என்று எண்ணிக்கொண்டான்.

இருளுக்குள் சைக்கிளைச் செலுத்தி குறுக்கு வழியூடாக வீட்டிற்கு ஆதவன் வந்து சேர்ந்தபோது

வீட்டில் பேச்சுக்குரல் ஒலித்தது.

தாய் விம்முவது கேட்டது.

நீ .. இஞ்சை நிற்காதே உன்னைத்தேடி இஞ்சை வந்திட்டுப் போறான்கள் '' என்று தாய் அழுதழுது சொன்னாள்.

ஆதவனுக்குப் புரிந்தது.

தூரத்தில் உள்ள உறவினர் வீடொன்றில் ஆதவன் மறைந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டான்.

இந்த வாழ்க்கையே நரகமாகத் தெரிந்தது.

சில நாட்களின் பின் -

இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கு அக்கிராமம் உள்ளான போது-

> தொட்டுப் பார்ப்பவனை தட்டிப் பார்க்க வேண்டும் என்கிற தாகம் இருந்தது. அழிக்க நினைப்பவனை அழ வைக்க வேண்டும் என்கிற நோக்கம் இருந்தது.




இராணுவம் சங்கரின் தம்பியைப் பிடித்து, கொடூரமாகத் தாக்கி பல நாட்கள் தடுத்து வைத்து காயங்களுடன் வீட்டுக்கு அனுப்பியிருந்தது.

சங்கரைக் கைதுசெய்வதில் பொலிசாரும் இராணுவமும் தீவிரமாகச் செயற்பட்டனர்.

பகலிலும் இரவிலும் சங்கரின் வீடு முற்றுகையிடப்படும். சங்கர் நடமாடிய இடங்கள்கூட தீவிர தேடுதலுக்கு உள்ளானது.

இச் செய்தி தீயாய்த் தெருவெங்கும் உச்சரிக்கப்பட்டது.

ஆதவன் எச்சரிக்கையாகச் செயல்பட்டான். சங்கரை புதிய புதிய இடங்களில் தினமும் தங்க வைத்தான்.

இதற்கிடையில் சங்கரின் பெற்றோர் இராணுவத்தின் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். அதட்டல்...... மிரட்டல்களின் பின் அனுப்பி வைக்கப்பட்டனர்.

''மச்சான்... என்னால் நீ வீணாகக் கஷ்டப்படுகிறாய்... நான் என்ரை வீட்டுக்கே போய்விடுறன்... அவங்கள் பிடித்தால் பிடித்துக்கொண்டு போகட்டும்'' என்றான் வேதனையுடன் சங்கர்.

''யோசிக்காமல் கதையாதே. பிடித்தால்தான் பரவாயில்லையே... நாளைக்கு 'பொடியே' இல்லாமல் போய்விடுவாயே...

''என்னடாமச்சான்செய்யிறது...''

''இருக்கு வழி...''

''சொல்... சரணடைகிறதா?''

''இதைச் சொல்ல நான் தேவையில்லை''

''வேற என்னடா செய்யிறது...''

''தமிழ் மண்ணிலை இருந்தால் தானே பிடிக்கப் பார்ப்பார்கள்... நீ கொழும்பிற்கு போய்விடு...''

ஆதவனின் யோசனை சரியாவே இருந்தது. ஆனாலும் - பயணம் செய்யும் வழி பற்றி யோசிக்கத் தொடங்கினர்.

நகரம் அமைதியாக இருந்த இராப்பொழுது சைக்கிளில் சங்கரை ஏற்றிக்கொண்டு ரயில் நிலையத்திற்கு விரைந்தான் ஆதவன்.

எதுவித அச்சத்தையும் வெளிப்படுத்தாமல் ரயிலில் ஏறிய சங்கர் யன்னல் வழியாக ஆதவனை முத்தமிட்டபோது - ரயில் புறப்பட ஆயத்தமானது.

முதன் முதலாக ஆதவனின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

ஏன் இந்தக் கண்ணீர்?

சங்கர் தப்பித்துக்கொண்டான் என்ற உணர்வில் கசிந்த ஆனந்தக் கண்ணீரா? அல்லது - தன் ஆத்ம நண்பன் தன்னைப் பிரிந்து செல்கிறான் என்ற வேதனையில் வெளிவந்த அழுகையா என்பது அவனுக்கே புரியவில்லை.

ஆதவன் கைதானான்.

இராணுவத்தின் உள்ளூர்ச் சிறையில் விசாரணை என்ற பெயரில் அவன் மிதிக்கப்பட்டான். கடுமையான சித்திரவதையை அங்கு அனுபவித்தான். இது போதாது என்று மகசீன் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டான். சங்கரின் பெயரைக் கேட்டு அவன் தாக்கப்பட்டான்.

வெளியுலகையே எட்டிப் பார்க்க முடியாமல் அவன் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தான்.

மூண்றாண்டுகளின் முடிவில் - ஆதவன் விடுதலையானான். தான் பிறந்த மண்ணில் கால்வைத்து களித்தான்.

சங்கருடன் சுற்றித்திரிந்த வாழ்க்கையை நினைத்துக் கலங்கினான். தான் சிறையில் இருந்த காலத்தில் சங்கர் எழுதிய கடிதங்களை பல தடவைகள் வாசித்துத் திளைப்பான்.

இருவரும் இணைந்து சுற்றிய தெருவை மிதித்து சந்தோஷிப்பான்.

★ ★ ★

ஆதவனின் விடுதலை சங்கருக்கு நிம்மதியைக் கொடுத்திருக்க வேண்டும். பழைய வேதனைகளையெல்லாம் மறந்தவன் போல-

ஜேர்மனியின் எழிலையும் கலகலப்பையும் தன் கடிதங்களில் விபரிப்பான். தன் சொந்த மண்ணைப் பற்றி அவன் குறிப்பிடாமல் விடுவதில்லை.

பிள்ளையார் கோவில் திருவிழா பற்றியும், முதற்கோழி கூவும்வரை ஆறுதலாக அமர்ந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கும் குடியிருப்புச் சந்தி பற்றியும் கடிதங்களில் சங்கர் விசாரிப்பான்.

ஆதவனின் உள்ளம் பூரிக்கும். புதிய உணர்வு மேலீட்டால் கண்கள் கலங்கும்.

இந்த மண்ணில் அவன் இல்லாதுவிடினும் எங்கோ ஓர் இடத்தில் அவன் வாழ்ந்து வருவதே ஆதவனிற்கு திருப்தியைக் கொடுக்கும்.

'மச்சான் .. இப்போதும் நீ திருவிழாக் காலங்களில் திருக்கேதீஸ்வரம், வற்றாப்பளை, புதூர் ஆலயங்களுக்குச் செல்வதுண்டா?'

- என்று சங்கர் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபோது அவன் நெஞ்சு ஓலமிடத் தொடங்கியது. இந்த தேசத்தின் மீது அவனுக்கு ஏற்பட்டுள்ள பிடிப்பு அடர்த்தியானது என அபிப்பிராயப்படுவான்.

'என் தோட்டத்தில்
துளிர்த்த-
புற்கள் சுமக்கும்
பனித்துளிகளை
என்றென்றும் -
என் கால்கள் துடைக்க வேண்டும்!

(23ஆம் பக்கம் பார்க்க)

5ஆம் ஆண்டில் ஈழநாதம் வீறு நடை போடுகிறது

காரிருள் அகற்றி ஒளி ஊட்டும் கதிரவனைப்போல்
எமது ஈழத்திரு நாட்டின் இருள் அகற்றி ஒளி ஊட்ட முன்னிற்கும்
ஈழநாதம் தன் 5-ம் அகவையில் கால் எடுத்து வைப்பதைக்கண்டு
எம்மண்ணின் மைந்தர்களுடன் நாமும்சேர்ந்து பூரிப்படைகின்றோம்.
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
பாரெல்லாம் ஒளி பரப்பவேண்டுமென எல்லாம்வல்ல
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப்பெருமானை
வேண்டிக்கொள்கின்றோம்.

§

★ பிரசுர வேலைகளுக்கு ★
அபிமானம்பெற்ற

ஸ்ரீ லங்கா அச்சகம்

(ராஜா தியேட்டர் அருகாமை)

ஸ்ரீ காந்தா அச்சக லேனிலேயே நடைபெறுகின்றது.

(சி. 8550)

நாலு தேசமும் நடக்கும் நிகழ்வினை
நாட்டில் அனைவரும் சுவைக்கும் வகையிலே
நுட்ப திட்பமாய் நினைத்து வழங்கிடும்
ஈழநாதமே நீயென்றும் நீளநாதமாய் வாழியவே!

யாழ் நகரில்
(★) பிடவை, ஆடைத்தினிசுகளுக்கு (★)
ஓர் ஒப்பற்ற வரப்பிரசாதம்!

லலிதா பிடவை மாளிகை

தங்களின்
திருமண வைபவங்களுக்கேற்ற ஆடைகளுக்கும், பள்ளிச் சிறார்களுக்கேற்ற
பளிச்சிடும் உடைகளுக்கும், வீரர் வீராங்கனைகள்
விரும்பி அணியும் ஆடைகளுக்கும்

நீங்கள் கண்டவுடன் சொக்கிப் போகும்
கண்கவரும் வர்ண ஆடைகளை தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்! உங்கள் கைராசி நிறுவனம்!!

லலிதா பிடவை மாளிகை

5 - 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி. 8542)

# தொண்டர் நிறுவனங்களின் மறுபக்கம்

## இது ஒரு செய்தியாளரின் பார்வை

கணேசலிங்கம்

மூன்றாம் உலகநாடுகளில் இன்று மக்கள் மத்தியில் அதிகளவு செல்வாக்குப்பெற்று வரும் சக்திகளில் அரச சார்பற்ற, தொண்டர் நிறுவனங்களும் ஒன்று. இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் குறிப்பிட்ட நாடுகளில் வாழும் மக்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொள்கின்ற விடயத்தில் மேற்படி நாடுகளின் அரசியல் சக்திகளுடன் போட்டியிடுமளவுக்கு வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், அவற்றின் செயற்பாட்டு விரிவாக்கத்திற்கும் மேற்படி நாடுகளில் நிலவும் சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகளும் சிலசமயம் சாதகமாக அமைந்து விடுகின்றது. இவ்வாறான தமக்குச் சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி இந்த நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையிலும் இவ்வாறான சூழ்நிலைகளிலேயே அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கெதிராக கடந்த பல ஆண்டுகளாக சிறிலங்காஅரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளும், அதனால் ஏற்பட்ட விளைவுளும் தான் இன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கிய மூலதனம் என்று கூறுமளவுக்கு நிலைமை மாறி விட்டது. அத்துடன் தென்பகுதி அரசியல் சூழ்நிலைகளால் ஓரம் கட்டப்பட்ட அடிமட்ட மக்களின் அவல நிலையும் இந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அவ்வப்போது தீனிபோட்டுக் கொண்டிருக்கின்றன.

வடகிழக்குப் பகுதி மீது சிறிலங்கா அரசு கடுமையான பொருளாதாரத் தடையை விதித்துவிட்டு பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக மேற்படி பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் மிக அதிகம். சமூக, பொருளாதார, கல்வித்துறை ரீதியாகவும் மற்றும், சுகாதார, மருத்துவத் துறை சார்ந்தும் ஏகப்பட்ட பாதிப்புக்களை இப்பகுதி மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான பாதிப்புக்களுக்கு முழுமையான நிவாரணம் வழங்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வளிக்கவும் சிறிலங்கா அரசு இதுவரை தயாராக இல்லை. எதிர்காலத்திலும் அது சாத்தியமாகப் போவதில்லை. இவ்வாறான சூழலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய சில அத்தியாவசிய சேவைகளையும், உடனடி நிவாரண வேலைகளையும் கணிசமான அளவில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த வேலைகளை வடகிழக்கில் இயங்கி வரும் நிறுவனங்கள் உட்பட இப்பகுதியில் இயங்காத சில நிறுவனங்களும் உள்ளூர் நிறுவனங்களினூடாக உதவித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றன, இதே போன்று ஏனைய பகுதிகளிலும் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இந்த நிறுவனங்கள் தமது உதவிக்கரங்களை நீட்டி வருகின்றன. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மேற்படி நிறுவனங்களினூடாக உதவி பெற்று வரும் மக்களின் அபிமானம் இந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் பக்கம் செல்வதற்கு நியாயமுண்டு.

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டையும், அவற்றின் வளர்ச்சியையும் கண்டு சிறிலங்கா அரசு அச்சமடையுமளவுக்கு தற்போது நிலைமைஉருவாகியிருப்பதாக அவதானிகள் பலர் கூறுகின்றனர். இதனாலேயே அவற்றின் நடவடிக்கைளைக்கட்டுப் படுத்தவும் அந்த நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும் அரசு முயற்சித்து வருகிறது.

பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்களின் இலக்குகள் இரண்டு வகையாகக் காணப்படுகின்றன. ஒன்று வெளிப்படையாக புலப்படக் கூடியவையாகவும், குறிப்பிட்ட நிறுவனத்தின் யாப்பு விதிகளில் தெளிவாக வரையறுத்து கூறப்பட்டவையாகவும் இருக்கும். இது எப்பொழுதும் இந்த நிறுவனத்தின் செயற்பாட்டு எல்லைக்குட்பட்ட மக்களின் நலன் பேணுபவையாக தோற்றமளிக்கும். மற்றையது மறைமுக இலக்காக இருக்கும். இது குறிப்பிட்ட நிறுவனத்தின் யாப்பு விதிகளில் குறிப்பிடப்பட்ட மக்கள் நலன்பேணும் இலக்குகளையுடைய செயற்பாடுகளினூடாக அடையப்படுபவையாக இருக்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளித்தல் என்ற போர்வைக்குள் அனேகரது கண்களுக்கு புலப்படாத வகையில் புதைந்து கிடக்கும். இந்த இலக்குகள் பொதுவாக குறிப்பிட்ட சமூகத்துக்கு நீண்டகால அடிப்படையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாகவே உள்ளன. பெரும்பாலும் அரசியல் மற்றும் பொருளாதார இலக்குகளாகவே இவை இருக்கும்.

பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்களின் பொருளாதார பலம் பெரும்பாலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதி உதவியாகத்தான் இருந்து வருகின்றது. குறிப்பிட்ட நாட்டில் வாழும் மக்களுக்கு இராணுவ அரசியல் ரீதியாக ஏற்படும் பாதிப்புக்களுக்கு அல்லது சூறாவளி, வெள்ளப்பெருக்குப் போன்ற இயற்கையான பாதிப்புக்களுக்கு நிவாரணமளிக்கப் போவதாகவும் கூறி பெறக்கூடிய அனைத்து வகையான நிதிஉதவிகளையும் பெற்றுக் கொள்வதில் அரசசார்பற்ற நிறுவனங்கள் எப்பொழுதும் பின்நிற்பதில்லை. இந்த நிறுவனங்கள் இவ்வாறானநிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தமது கொள்கைத்திட்டங்களிலும் வேலைத்திட்டங்களிலும் கூட அடிக்கடி மாற்றங்களைச் செய்வதற்கும் இந்த நிறுவனங்கள் தயங்குவதில்லை.

1992 ஆம் ஆண்டு பிறேசில் நாட்டின் தலைநகரான ''றியோடி ஜெனேரோ'' வில் நடைபெற்ற அகிலஉலக சூழல் பாதுகாப்பு மகாநாட்டின் சில தீர்மானங்களுக்கமைய ஐரோப்பிய நாடுகள் சூழல்பாதுகாப்பு திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தன. இதைத்தொடர்ந்து பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது கொள்கைத்திட்டங்களின் வரம்புகளையும் கடந்து சென்று சூழல் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதிகளவு நிதி உதவிகளையும் பெற்றுக் கொண்டுள்ளன.

மேலும் மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்கள் தமது நாட்டுக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை நாட்டு மக்களின் நலனுக்கு செலவிடுவதற்குப் பதிலாக தமது அரசியல், இராணுவ நோக்கங்களுக்காக செலவிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இதனைத் தடுப்பதற்காக மேற்படி நாடுகளுக்கு உதவி வழங்க முன்வரும்வெளி நாடுகள் தமது உதவிகளை அந்த நாட்டில் செயற்படும் அரசசார்பற்றநிறுவனங்களின் ஊடாகவே வழங்குவதில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றன.

இவ்வாறான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளக்கூடிய அதி உச்ச நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் காட்டும் அதீத ஆர்வம் போன்று மேற்படி நிதிஉதவிகளை முழுமையாகப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதில் காட்டப்படுகிறதா என்ற கேள்விக்கு விடைதேடுவது சிரமமாகவே உள்ளது. இந்த விடயத்தில்தான் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் கோரமான முகத்தை அவதானிக்க முடிகிறது. வடக்கு கிழக்குப் பகுதிகள் மீது சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதியில் வாழும் மக்கள் தினசரி சிந்தும் இரத்தத்தையும் கண்ணீரையும் முக்கிய மூலதனமாகக் கொண்டு பெற்றுக் கொள்ளப்படும் நிதி உதவிகளைக் கொண்டு அந்த மக்களது துன்ப துயரங்களை துடைக்க முயற்சிக்கும் போதுதான் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மோசடியின் அத்தியாயங்களைப் படைக்க ஆரம்பிக்கின்றன ஒரு தடவை இந்த மோசடியின் அத்தியாயங்களைப் புரட்டிப்பார்த்தாலே போதும், ஊழலின் உச்சக்கட்டத்தை உணர்ந்து கொண்டு விடலாம். உலகில் உள்ள மோசடியின் வகைகளைத் துல்லியமாகத் தெரிந்து கொள்வதற்கு இவைபோன்ற ஒரு சில நிறுவனங்கள்போதும்

''யாழ்ப்பாணத்தின் காலைப்பொழுது ஒரு நாள் அமைதியாகப் புலர்ந்தது. வான்பரப்பில் யுத்த விமானங்களின் இரைச்சல் எதுவும் கேட்கவில்லை. யாழ். நகரம் வழமையான சுறுசுறுப்புடன் இயங்க ஆரம்பித்தது. வேகமாக வந்த மோட்டோர் சைக்கிள் ஒன்று நகரின் மத்தியில் நின்று கொண்டது. மோட்டோர் சைக்கிளில் இருந்து இருவர் இறங்கிக் கொண்டனர். அதில் ஒருவரின் கையில் இருந்த வீடியோக்கமரா உடனடியாகவே தொழிற்பட ஆரம்பித்தது. நகரமத்தியிலும் நகரத்தின்வீதியோரங்களிலும் பனைமட்டைகளால் அமைக்கப்பட்ட கூண்டுகளில் நாட்டப்பட்டிருந்தமரக்கன்றுகளை நோக்கி அந்த கமரா திரும்பியது. மரக்கன்றுகள் நாட்டப்பட்டிருந்த காட்சி வெவ்வேறு கோணங்களில் அந்தக் கமராவுக்குள் கச்சிதமாகப் புகுத்தப்பட்டது மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்த யாழ். மாநகர சபையின்தொழிலாளர்களை நோக்கியும் இக்கமரா தனது முகத்தை திருப்பிக் கொண்டது. இது யாழ்நகரத்தில் கடந்த கோடைகாலத்தின் போது ஒரு குறுகிய நேரத்தில் நடைபெற்ற சம்பவம் இச்சம்பவம் குறித்தும் இந்தச்சம்பவத்தின் பின்னணி குறித்தும் எவரும் அப்போதுஆராயவில்லை. இச்சம்பவத்தை அவதானித்தபடி நகரத்தின் வீதியால் நூற்றுக் கணக்கானோர் சென்றனர். அவர்களில் ஒருவரின்சிந்தனை கூட இச்சம்பவத்தையிட்டு சற்றுவித்தியாசமான பாதைக்குச்செல்லத்தவறிவிட்டது. அத்தனைகண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு மிகவும் சாதுரியமாக மேற்கொள்ளப்பட்ட மோசடி ஒன்றின் முதற்கட்டமே இது

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்று என்று தம்மைக் கூறிக் கொண்டு கொழும்பில் தங்கியிருக்கும் ஒரு சில மோசடிப் பேர்வழிகள் இவ்வாறுஎடுக்கப்பட்ட வீடியோ பிரதியை தமது மோசடிக்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்றசெய்தி தற்போது பலருக்கு அதிர்ச்சி தருவதாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் சூழல் பாதுகாப்புத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாக சமர்ப்பிக்கப்பட்ட தமது போலியான செயற்திட்டத்துக்கு ஆதாரம் கூறுவதற்காக இவர்கள் இவ்வீடியோப் பிரதியை சமர்ப்பித்துள்ளனர். இதன் மூலம் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிடம் இருந்து கணிசமான தொகைப்பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்ற தகவல்கள் எமக்கு வந்து சேருவதற்கு சற்றுக் காலதாமதமாகி விட்டது. மரக்கன்றுகள் நாட்டப்பட்ட கூண்டுகளுக்கு முன்னால் நின்று வீடியோ எடுத்ததைத்தவிர இந்த மரக்கன்றுகளுக்கும் இந்த மோசடிப் பேர்வளிகளுக்கும் இடையில் எந்த உறவும் இல்லை என்பது மட்டும் உண்மையாகும்.

இதுபோன்ற பல போலியான திட்டங்களைச் சமர்ப்பித்து உதவிவழங்கும் கரங்களைத் தம் பக்கம் இழுத்துக் கொள்வதற்கென்று கொழும்பில் ஒரு மோசடிக் கும்பல் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இவர்கள் யாழ்ப்பாணத்தில் தமது அலுவலகம் செயற்படுவதாகக் கூறி போலியான முகவரி ஒன்றையும் வெளியிடுவார்கள். ஆனால் உண்மையில் இந்நிறுவனங்கள் வடக்குக்கிழக்குபோன்ற பகுதிகள் எங்கேயும் செயற்படுவதில்லை.

இவற்றைவிட வடக்குக்கிழக்குப் பகுதிகளின் நிவாரண, புனர்வாழ்வுத் திட்டங்களுக்கெனக் கூறப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் நிதி உதவியில் ஒரு பகுதியை மேற்படி பகுதிகளில் செலவிடுவதும் மிகுதியை இவைகளின்ஏனைய பகுதிகளில் செலவிடுவதும் கடந்தகாலத்தில் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான நடவடிக்கையிலும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

மேலும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்படி பகுதிகளின் நிவாரணத்திட்டங்களுக்கெனக் கூறிப் பெற்றுக் கொள்ளப்படும் நிதியைப் பயன்படுத்தியே தமது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

வடக்குகிழக்கில் செயற்படும் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களைத்தவிர ஏனைய நிறுவனங்கள் ஏதோ ஒருவகையான மோசடியில் ஈடுபட்டுவருவதை உறுதிப் படுத்த அதிகம் சிரமப்படத் தேவையில்லை.

இவற்றைவிட மேற்படி நிறுவனங்களின் செயற்திட்டங்களை ஆழமாக அவதானித்தால் அவற்றில் உள்ள பல்வேறு குறைபாடுகளைப் புரிந்துகொள்ளமுடியும்.

பொதுவாக இந்த நிறுவனங்கள் மேற்கொள்ளும் திட்டங்கள் எதுவும் குறிப்பிட்ட சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துபவையாக இருப்பதில்லை. அத்துடன் நீண்டகால நோக்கில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துபவையாகவோ அல்லது சமூக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவோ இருப்பதில்லை.

மேலும் இந்த நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் எதுவும் குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் ஆலோசனைகளின்றித் தீட்டப்பட்டவையாகவே உள்ளது. குறிப்பிட்ட நிறுவனம் தனக்குக் கிடைக்கின்ற நிதி உதவியின் உச்ச எல்லையை மட்டும் கருத்தில் எடுத்து தன்னிச்சையாகத் தயாரிக்கும் திட்டத்தை பாதிக்கப்பட்ட மக்களின் மீது திணிக்கும் நிலைமையைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

இவற்றைவிட சில நிறுவனங்கள் தமது திட்டங்களின் ஊடாக பல வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக நிறுவனங்களின் முகவர்களாகவும் செயற்படுவதுண்டு.

அரசின் அராஜகச் செயல்களால் அவலவாழ்வுக்கு அடித்துச் செல்லப்பட்ட மீன்பிடித் தொழிலாளி ஒருவனுக்கு மீன்பிடி வலையைக் கொடுப்பதற்குப் பதிலாக பிடிக்கப்பட்ட மீனை நிவாரணமாக வழங்கும் கொள்கையுடையதொண்டர் நிறுவனங்கள் தமது கொள்கையை மறு சீரமைப்புச் செய்யவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்தின் எதிர்கால நலன்களை அடிப்படையாக வைத்து சமூகவிழிப்

(2ஆம் பக்கம் பார்க்க)

# வடக்குப் போர்முனையும், வானிலை

## ஓர் அறிமுகம்

ஜெயராஜ்

போர் முனையில், தந்திரோபாயங்களும். ஆயுதபலமும் ஆட்பலமும் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றனவோ, அதேபோன்று புவியியற் காரணிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இதில், பிரதேசத்தின் தரையமைப்பில் இருந்து வானிலை மூலக் கூறுகள் வரையான பௌதீகப் புவியியல் அம்சங்கள் தாக்கம் விளைவிக்கின்றன. இவற்றைப் புறக்கணித்து எவரும் யுத்தத்தை நடத்தி வெற்றி பெறுவதென்பது கடினமானதாகும்.

இப் பௌதீக அம்சங்களான தரைத் தோற்றம், மண்வகை, இயற்கைத்தாவரம், வானிலை மூலக்கூறுகள் எனப் பல தரப்பட்டவை யுத்தத்தில் தாக்கத்தை ஏற்படுத்துபவை மட்டுமல்ல, சிலவேளை முற்றுமுழுதாகக் சமரின் போக்கையே தீர்மானிக்கக் கூடியவையாகவும் மாறி விடுவதுண்டு. ரஷ்சியாவின் பனிகொட்டும் குளிர்காலமே சக்கரவர்த்தி நெப்போலியனின் வீழ்ச்சிக்கும், சர்வாதிகாரி ஹிட்லரின் தோல்விக்கும் அத்திவாரமிட்ட காரணமாகியது என்பது வரலாற்றுப் பாடம்.

இந்த வகையில், பௌதீக புவியியல் காரணிகள் யுத்தத்தின் போக்கைத் தீர்மானிப்பவையாக இருப்பினும். இக் கட்டுரையின் நோக்கம் இலங்கையில், குறிப்பாக யுத்தம் இடம்பெறும் வடக்கு-கிழக்கில் அதிலும் குறிப்பாக வடக்குப் போர் முனையில் வானிலை மூலக் கூறுகளின் தாக்கம் பற்றி ஓர் அறிமுகம் கொடுத்தலேயாகும், இது ஆய்வு என்பதைவிட அவதானிப்பின் அடிப்படையில் ஆனதாகும் என்பதே பொருந்தும்.

இலங்கையின் காலநிலையில், குறிப்பாக வடக்கு - கிழக்கு காலநிலையில் ஏற்படும் பருவகால வேறுபாடானது, ஒப்பீட்டு ரீதியில் இடைவெப்பவலய பிரதேசங்கள் போன்றோ, அன்றி முனைவுப் பிரதேசங்கள் போன்றோ பெரும் வேறுபாடு கொண்டவையல்ல. வருடம் பூராகவும் ஏற்படும் பருவ வேறுபாடு பெரும்பாலும் மழை வீழ்ச்சியுடனும், அதனுடனிணைந்த வானிலை மூலக்கூறுகளுடனுமே தொடர்புடையதாகவுள்ளது அவையும் ஒரு சில மாதங்கள் மட்டும் நிகழும் குறுகிய பருவ கால வேறுபாடு என்றே கொள்ள முடியும்.

இந்தவகையில் நீண்டதும், வரட்சியுமான பருவங்களையும் கொண்டதான வடக்கு - கிழக்கு வானிலையானது விமானப்படை, கடற்படை என்பன வற்றுடன் போர் நடவடிக்கையில் ஈடுபடும் சிறிலங்கா இராணுவம் போன்ற மரபு வழி இராணுவத்தினருக்கு சாதகமான நிலையை கொண்டது என்றே பொதுவாகக் கூறமுடியும்,

இருப்பினும் வடக்கு-கிழக்கு வானிலையில், சிறு தாக்கங்கள் ஏற்படும் பருவகால வேறுபாடு போர் முனையிலும், போர் நடவடிக்கைகளிலும் தாக்கத்தை விளைவிக்கின்றது. இலங்கையின் காலநிலைபொதுவான பாகுபாட்டின்படி நான்கு பருவங்களைக் கொண்டதாகும்.

1. முதலாவது இடப்பருவக்காற்றுக் காலம். (ஒருங்கல் -மேற்காவுகை காலம்) மார்ச் - ஏப்ரல் மாதம் வரை.

2. தென்மேல் பருவக்காற்றுக் காலம் மே - செப்டெம்பர் வரை.

3. இரண்டாம் இடைப்பருவக்காற்றுக் காலம். (ஒருங்கல் - சூறாவளி காலம்) ஒக்டோபர் - நவம்பர்வரை.

4. வடகீழ் பருவக்காற்றுக் காலம், டிசம்பர் - பெப்ரவரி வரை

இந்நான்கு பருவங்களில் வடக்கு - கிழக்கைப் பொறுத்து முதலாம் இடப் பருவக்காற்றுக் காலமான ஒருங்கல் - மேற்காவுகைக் காலமும், தென்மேற் பருவக்காற்று காலமும் வரட்சியான நீண்டபருவங்களாகும். இதனை கோடை காலம் என்று குறிப்பிடலாம். இரண்டாம் இடைப் பருவக்காற்றுக் காலமும், வடகீழ்பருவக்காற்றுக்காலமும்உள்ளடங்கிய பருவத்தை மாரிகாலம் எனக் குறிப்பிடலாம். அதிலும் வடகீழ் பருவக் காற்றுக் காலத்தில் அடங்கும் பெப்ரவரி மாதத்தை கோடைப்பருவத்துடன் இணைத்துக்கொள்வதே இவ் விடயத்தில் பொருத்தமானதாகும். வடகீழ்ப் பருவக்காற்றுப் பருவகாலம் என அதைக் குறிப்பிடினும் மிகவும் வரட்சி பொருந்திய மாதங்களில் அதுவும் ஒன்று என்பது இதற்குக் காரணமாகும். சுருக்கமாகக் கூறுவதானால் பெப்ரவரி தொடக்கம் செப்டெம்பர் வரையுள்ள நீண்ட வரட்சியான காலநிலையும், ஒக்டோபர் - ஜனவரி வரையான ஈரலிப்பான பருவத்தினையும் வடக்கு - கிழக்கு கொண்டிருக்கின்றது எனலாம்.

### வெப்பநிலை

இலங்கை அயனவலயப் பிரதேசமாக இருப்பதன் காரணமாக வானிலை மூலக்கூறுகளில் முக்கியமானதொன்றான வெப்பநிலையில்பருவகாலங்களுக்கிடையிலானதும், நாளாந்த வேறுபாடும் மிகவும் குறைவாகும். அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசம் பெருமளவு சமதரைப்பிரதேசமாக இருப்பதினால் பிரதேசத்திற்கிடையிலான வெப்பநிலை வேறுபாடும் குறைவாகும். சாரசரியாக வடக்கு – கிழக்குப்பிரதேசம் 27 பாகை சென்ரிக்கிரெட்டிற்கும் 28 பாகை சென்ரிக்கிரெட்டிற்கும் இடைப்பட்ட வெப்பநிலை பெறுகின்றது. மாரி கோடை வேறுபாடும் பெரியளவில் குறிப்பிடக் கூடியதாக இருப்பதில்லை.

இந்நிலையில், போர்முனையில், வெப்பநிலையின் பாதிப்பு மழை வீழ்ச்சி, முகில்மூட்டம் போன்றவற்றுடன் ஒப்பிடும் இடத்து குறைவென்றே கூறுதல் வேண்டும். இருப்பினும், போர் நடைபெறும் தரையைப் பொறுத்து வெப்பநிலை கடந்தகாலத்தில் சில பிரச்சினைகளை ஏற்படுத்தியதுண்டு. ஒப்பரேசன் பலவேகய 1 (1991 யூலை) மிகவும் உயர்ந்தளவு வெப்பநிலை நிலவும் மாதத்தில் ஒன்றான யூலையில்இடம் பெற்ற போது சூடான, மணற்பாங்கான தரையில் போரிட வேண்டி ஏற்பட்டதினால்பெரும் சிரமங்கள் உருவாகின. 'பாலைவனப் போர்' என வர்ணிக்கப்பட்ட இச்சமரின் போது வெப்பத்தின் காரணமாக சூடு ஏறிய தரைப்பரப்பில் நீண்ட நேரம் படுத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டதோடு, அதிக தாகத்திற்கும், உடல் களைப்பிற்கும் ஆளாக வேண்டிய நிலையை போரிடுவோருக்கு ஏற்படுத்தியது. இது பகல் வேளைகளில் யுத்தத்தில் கணிசமான தாக்கத்தை விளைவிப்பதாக இருந்தது,

ஆனால், கோடைகாலத்தில், வெப்பத்தினால் ஏற்படுகின்ற மேற்சொன்ன பாதிப்புக்களைத்தவிர வேறு பாதிப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. இக்கோடைப் பருவத்தில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஏற்படும் இரவுநேரப் பனிக்குளிரும்,அதிகாலைப் பனிமூட்டமும் குறிப்பிடத்தக்க காலநிலை அம்சங்களாக இருப்பினும் அவற்றின் பாதிப்புக்கள் யுத்தத்தில் பெரும் தாக்கங்களை விளைவிக்கக்கூடியவை என்று சொல்வதற்கில்லை.

### மழை வீழ்ச்சி

ஆனால், நீண்ட கோடையைவிட குறுகிய மழைக்காலம் யுத்த நிலையில் கணிசமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இதற்கு இக் குறுகிய மழைக்காலம் - மாரிகாலம் - தனியாக கூடுதலான மழைவீழ்ச்சி கொண்ட பருவம் என்பது மட்டுமல்ல, ஒரு மோசமான வானிலை அடிக்கடி குறுக்கிடும் பருவகாலமும் என்பதினால் ஆகும்.

வடக்கு கிழக்கு பகுதி சராசரியாக 1000 மில்லி மீற்றருக்கும் 2000 மில். மீற். இடையில் மழைவீழ்ச்சியைப் பெறினும், இம்மூன்று மாதங்களிலும் பெறப்படும் மழை வீழ்ச்சியானது முக்காற்பங்கிற்கும் அதிகமானதாகும். அதிலும், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் பெரும்பாலும் மொத்த மழை வீழ்ச்சியில் 50 வீதத்திற்குமேல் பெறுகின்றது என்றால், கிழக்கு மாகாணம் டிசம்பர்-சனவரி மாதங்களை உள்ளடக்கிய வடகீழ் பருவக்காற்று காலத்தில் 50 வீதத்திற்கு மேற்பட்ட மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்கின்றது.

ஆனால், இம் மழைவீழ்ச்சி அளவானது ஓர் அயனவலய பிரதேசத்திற்குரிய மழைவீழ்ச்சியுடன் ஒப்பிடும் இடத்து மிகவும் குறைவானதென்றே கூறமுடியும், இந்நிலையில் இம் மழைவீழ்ச்சியின் அளவானது பெரியளவில் மாதாந்த ரீதியிலோ அன்றி பருவகால ரீதியிலோ பார்க்கும்போது பெரிய தாக்கம் விளைவிக்க கூடியதாகவோ அன்றி, தெரிவதாகவோ இல்லை,

ஆனால், இம்மழைவீழ்ச்சி வடக்கு-கிழக்கில் கிடைக்கப் பெறும் முறையே வடக்கு - கிழக்கு போர் முறையில் தாக்கத்தை விளைவிக்கக்கூடியதாவுள்ளதுஅதாவது வடக்கு கிழக்குப் பிரதேசம் இம் மாரிகாலத்தில் பெறும் மழையானது பெரும்பாலும் அயனக் குழப்பங்களில் இருந்து உருவாகும் தாழமுக்கம், புயல்கள், சூறாவளிகள் என்பவற்றாலேயே கிடைக்கப் பெறுகின்றது.

இதேவேளை, வட கீழ்ப்பருவக்காற்றாலும், இப் பருவத்தில் வடக்கு - கிழக்கு பகுதி மழைபெறினும், அவை மிதமானமழையாகஇருப்பதால் தாக்கத்தை விளைவிக்க கூடியதாக இருப்பதில்லை.

அதாவது இலங்கையின் வானிலையில் குறுக்கிடும் தாழமுக்கங்களினாலேயே கனமான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுகின்றது. இத் தாழமுக்கங்களின் பொதுவான பண்பினை சராசரியாக இரண்டு மூன்று தினங்கள் நீடிக்கும் மோசமான வானிலை, முழுமையான முகில் மூட்டம், கன மழை என்பன போர் நடவடிக்கைகளைத் தீர்மானிப்பவையாக உள்ளன.

தாழமுக்கங்களின் தோற்றம் ஏனைய வானிலை தோற்றப்பாடுகள் போன்று பொதுவானதல்ல. ஆயினும் மாரிகாலத்தில் வடக்கு - கிழக்கு வானிலையில் அவை அடிக்கடி குறுக்கிடுகின்றன. வருடத்தில் சராசரியாக 5-6 அயனக் குழப்பங்கள் குறிப்பிடுவதாக வானிலை அவதான நிலையங்களின் அவதானிப்புக்கள் காட்டுகின்றன.

இவை சிலவேளை தனித்தனியாக சில தினங்களிற்கு வானிலையைத் தாக்கக்கூடும். சில வருடங்களில் ஒரே மாதத்தில் தொடர்ச்சியாக பல வானிலையைத் தாக்கக்கூடும். இதனால் சில வாரங்கள் தொடர்சியான மழைப் பொழிவால் பாதிப்படையக் கூடும்.

இவ் அமுக்க இறக்கங்கள் வானிலையில் குறுக்கிடும்காலமே அனேகமாகஉயர்ந்தளவுமழைவீழ்ச்சியை வடக்கு கிழக்குப் பாகங்கள் பெறுகின்றன. இவ்வானிலைத் தோற்றப்பாட்டின் பிரதான பண்புகளில் ஒன்றே குறுகிய நேரத்தில் கிடைக்கப்பெறும் பலமான மழைவீழ்ச்சியாகும்.

வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட உயர்வான மழைவீழ்ச்சி வெள்ளப்பெருக்கு என்பவற்றை எடுத்துப் பார்த்தால், அவை பொதுவாக அமுக்க இறக்கத் தோற்றப்பாட்டுடனேயே தொடர்புடையதை அவதானிக்கமுடியும். எடுத்துக்காட்டாக, இலங்கை முழுவதிலும் 24 மணிநேரத்தில் பதிவாகியமிகஉயர்ந்தளவு மழைவீழ்ச்சியான 806 மில். மீற்றர் 1887 ஆம் ஆண்டு நெடுங்கேணியில் பதிவாகியது. அடுத்த உயர்ந்தளவு மழைவீழ்ச்சி 792 மில். மீற்றர் முல்லைத்தீவில் பதிவாகியது. இவை இரண்டும் அமுக்க இறக்கத் தோற்றப்பாடுகளாலேயே கிடைக்கப்பெற்றவையாகும். இதேபோன்றே வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட பெரு வெள்ளப்பெருக்குகளுக்கும் இவ் அமுக்க, இறக்கத் தோற்றப்பாடுகளே காரணமாகும். 1911, 1956, 1964, 1978 போன்ற ஆண்டுகள் இதற்குச் சிறப்பான உதாரணங்கள் ஆகும்.

ஆனால் எல்லாவேளைகளிலும் இவ்வாறான உயர்ந்தளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாது விட்டாலும் பொதுவாக தாழமுக்கங்களில் கனமான மழை கிடைக்கப்பெறுகிறது. இது சராசரியாக 100 மி. மீற்றர் இருந்து 250 மி. மீற்றருக்குஇடைப்பட்ட் அளவில் கிடைக்கப் பெறுவதுண்டுஇக்கனதியானமழைவீழ்ச்சி அளவே போர்நடவடிக்கைகளை சில தினங்களுக்கு பாதிப்படையச் செய்யக் கூடியவை, ஆனால் இது, இராணுவ ரீதியாகப் பெரியளவில் பாதிப்படையச் செய்யக் கூடியவையாகும்.

அதாவது பலத்த மழைவீழ்ச்சி ஏற்படும் போது இராணுவத்தின் நகர்ச்சியும் இராணுவத்திற்கான விநியோகமும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகக் கூடும், எடுத்துக்காட்டாக 1987 இல் இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை மாரிகாலத்தில் ஆரம்பித்தபோது தமது கவச வாகனங்கள், டாங்கிகள் என்பவற்றை தமது விருப்பத்திற்கு ஏற்ப நகர்த்தமுற்பட்டு அவர்கள் சிரமத்திற்கு உள்ளாகவேண்டி வந்தது, சில இடங்களில் கவச வாகனங்கள், டாங்கிகள் புதையுண்டு போனதனால் அவற்றை மீட்பதற்கு பெரும் பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது. இதற்குக் குறுகியநேரத்தில் பெய்த கடும் மழை காரணமாக சில மண்வகைகள் கூடுதலாக ஈரலிப்பைப் பெற்றதே காரணமாகும்.

இதேவேளை, கடும் மழை காரணமாக ஏற்படும் வெள்ளப் பெருக்கும் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன. கடந்த வருட இறுதியில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை இராணுவ முகாம்களுக்கும், காவலரண்களுக்கும் புகுந்து கொண்டமையால் பெரிதும் பாதிப்புக்கள் ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அத்தோடு, இவ் வானிலையில் ஒரு இராணுவ நடவடிக்கைமேற்கொள்வதா

நான்காம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

(இணைப்புப் பக்கம் I)

ஈழநாதம் 19-02-1994

# சுவருக்குள் கசிவில்லை

இழுத்து வரப்பட்டவன் தூக்கி வீசப்பட்டான். மனித உடல் நிலத்தில் விழும் சுரத்தில்லாத சத்தம், முனகல், இலக்கில்லாத, தெளிவில்லாத சிதைந்த சில வார்த்தைகள். அவன் உயிரோடு இருக்கிறான்.

''நல்லா அடிச்சுப் போட்டாங்களோ'' சுவருக்கு மறுபுறத்திலிருந்து கரகரத்த குரல் ஒன்று கேட்டது. பதிலில்லை. பின்பு ஆழ்ந்த பெருமூச்சு. அதன் பின்பு அமைதி.

அசைந்தான். அசையவேண்டும் போலிருந்தது. முடியவில்லை. உடலெங்கும் வேதனை வதைத்தது. அங்கங்கு இரத்தக் கசிவு. கடவாயிலிருந்து எச்சிலும் இரத்தமும் நிலத்தில் படிந்தது.

அவன் உயிரோடு இருக்கிறான் என்பதற்கான அறிகுறி அந்த முனகல் மட்டும்தான், மற்றும்படி எதுவுமில்லை.

முன்பு ஒரு தடவையும் மாமரத்தால் விழுந்தபொழுது அவனுக்கு இப்படியொரு நிலைமை ஏற்பட்டது. அன்றும் இப்படித்தான், இரவிரவாக முனகினான். அம்மா, கவலைபடிந்த முகத்துடன் விழித்திருந்தாள். அடிக்கடி தலையைக் கோதினாள்; தடவிவிட்டாள்.

''அம்...மா அ... ம்மா ... ''அவனது வாயசைந்தது. சத்தம் வெளிவரவில்லை. இதயத்தின் அடி ஆழத்தில் வேதனைத் திரள் ஒன்று எழுந்தது. அழுகை விம்மலுடன் கன்னங்களில் தோன்றி மறைந்தது.

'இன்னும் சில மணிகளில் இறந்துவிடுவேன்' என நினைத்தான். சாவு. சாவு என்றால் என்ன? இருப்புக்கும் சாவுக்கும் இடையிலான வேறுபாடுதான் எவ்வளவு?

அவன் இப்போது இறந்துவிட்டான். சாகடிக்கப்பட்டு விட்டான். வெறும் 'மூச்சு' வெளிவருவதால் ஒரு மனிதன் உயிருடன் இருப்பதாக அர்த்தப்படுத்துவதா? அப்படியெனில் அவன் உயிரோடு இருக்கிறான். இன்னும் சாகவில்லை.

சாதுவாகத் தலையை நிமிர்த்தினான். கல்லால் அழுத்தியமாதிரி கனத்தது. எதிரில் கதவுகளின் கம்பிகள் அசைந்தன. அதைக் கடந்து கரிய அழுக்குப் படிந்த சுவர்.

ஊரிலேயே இருந்திருக்கலாம். அர்த்தமற்ற செயல்; வீணான கனவுகளின் விளைவு. இப்படி 'மாட்டுப்பட்டு' துன்பப்பட வேண்டி வந்துவிட்டது.

கிராமத்து வாழ்க்கையில் என்ன குறை? மனதிற்கு இதமான சனசஞ்சாரமற்ற அமைதி. பட்டினி போடாமல் வாழவைக்கும் வயல். அதோடு ஒன்றிய வாழ்வு. சந்தோசத்திற்கு குறையிருக்கவில்லையே!

சாவை விட வேதனை இதுதான். நினைவில் வரும் பழைய வாழ்க்கை. உறவுகளின், பிணைப்புகளின் உயிரை வதைக்கும் நினைவுகள்.

காற்றில் சல்லாபிக்கும் கதிர்விடக் காத்திருக்கும் பயிர்களைப்பார்த்தபடி வயல்வரம்பில் இருக்கும் சுகம்; நிம்மதி எங்குதான் இருக்க முடியும். கட்டுச்சோறு கொண்டு வயலுக்கு வருகிற சின்னக்காவோட கதைக்காமல், சண்டைபிடிக்காமல் எப்படித்தான் இருக்க முடியும்.

அவனுக்கு காட்டோடு ஒட்டிய வயல்; அவனது தாத்தா காலத்துச் சொத்து. யானைக் காவல்தான்

**வசந்தன்**

படாதபாடு படுத்தும். அந்த 'அலியன்' ஒன்று சனியன் இப்ப பத்து வருடமா — சில நேரம் பகலில்கூட வயலில் நிற்கும்.

என்னத்தைத்தான் சொன்னாலும் வயலைத் தடவிவரும் காற்று நெஞ்சில் தடவும் சுகம் அம்மாவின் மெல்லிய வருடல் போல...

நெஞ்சு ஒரு தரம் ஏறி இறங்கியது. தலைக்குள் விண்விண் என்று தெறித்தது. நினைவுள்ள நினைவற்ற நிலை. எதென்று பிரித்தறிய முடியவில்லை.

தூரத்தில் 'பூட்ஸ்' காலடிகளின் ஓசை, தலைக்குள் அதிர்ந்தது. கிட்ட நெருங்க நெருங்க நெஞ்சு தவித்தது.

''கடவுளே, காப்பாற்று காப்பாற்று''

அவனை நினைக்க அவனுக்கே வெறுத்தது. இவ்வளவும் நடந்தபிறகும் கடவுளை நினைப்பதை நினைத்து



சிறுகதை

வேதனையாகவும் இருந்தது. அது பிறவியின் பழக்கம்; முடிவற்ற தொடர்...

பூட்ஸ் அடிகள் நெருங்கின; அவன் நினைவிழந்து போனான்.

நனவு மனம் உறங்கும்போது, ஆழ்மனதில் நடமாட்டம். நிறைவேறாத, நிறைவேறமுடியாத ஆசைகளில் சஞ்சரிப்பதற்கென்றே இருக்கும் கனவுலகில் அவனும் ..

ஓடினான், தப்பி அல்லது விடுபட்டு ஓடினான். அறியாத முகங்கள். புரிபடாத மொழி. பார்ப்பவர்களெல்லாம் இவனைச் சந்தேகத்தோடு பார்ப்பதுபோல்—

புகையிரத வண்டி இரைச்சலுடன் முரட்டுத்தனமாக ஓடியது. அவன் உள்ளே இருந்தான். மரங்களும், வெளிகளும் பாய்ந்து கடந்தன. கையில் பெட்டி; வெளிநாட்டிலிருந்து வருகின்றான் போல் ஒரு தோற்றம்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழத்தின் கல்வி எதிர்பார்ப்பு

ஒரு நாட்டின் விடுதலைக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. கல்வி அறிவு பெற்ற ஒரு சமுதாயமானது, தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தனது அறிவாற்றலாலும் சுயமுயற்சியினாலும் விடுவித்துக் கொள்ளும். பொதுவாக கல்வியின் இலக்கு, சமுதாயத்திற்குப் பொருத்தமான பூரண மனிதனை உருவாக்குவது என கொள்ளப்படுகிறது. இவ் இலக்கானது எமது நாட்டுக்கு மட்டுமல்ல அனைத்து நாடுகளுக்கும் பொருத்தமானது என்பதுடன் ஐக்கிய நாடுகள் சாசனத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழீழமானது சுயாதிபத்தியமுடையதாக - தனது தேவைகளைத் தானே பூர்த்திசெய்து கொள்ளும் தன்மையுள்ளதாகத்தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. 15ஆம் நூற்றாண்டின் பின் தொடர்ச்சியாகப் பிறநாட்டவரினதும் சிங்கள அரசினதும் ஆதிக்கத்தினால் கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக சுயாதிபத்தியத்தை இழந்துள்ளது. இதனால் எமது கல்வி முறைமையிலும் ஆதிக்க சக்திகளின் தாக்கம் இருந்து வந்துள்ளது.

1948இல் இலங்கை 'சுதந்திரம்' அடைந்த பின்னரும் கூட அந்நியரினால் புகுத்தப்பட்ட கல்வி முறைமையும் பாடத்திட்டங்களும் பரீட்சை முறைகளும் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகவில்லை. இலவசக் கல்வித் திட்டம், 1971இல்கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தம், 1977இல் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள், சுதேசியத்திற்கான கல்வி மாற்றங்கள் எனக் கூறப்பட்ட போதும் அவை நிலைக்கவில்லை. காலத்திற்கு காலம் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் யாவரும் தமது கட்சி நலனையும் வர்க்க நலனையும் மட்டும் மனதில் கொண்டு கல்வியில் அடிக்கடி மாற்றங்களை விருப்பம் போல் மேற்கொண்டு வந்துள்ளனர்.

பிறநாடுகளில் தேசிய கல்விக் கொள்கையமைப்புக்கு என சுதந்திர அமைப்புகள் உள்ளன. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை ஆட்சிபீடத்திலுள்ளோர் தமது கைப்பொம்மையாக கல்விக் குழுக்கள் அல்லது தேசிய கல்வி நிர்வாகத்தை வைத்துக் கொண்டு கல்வி முறைமையை தலைகீழாகக் கூட மாற்றி வருகின்றனர். இதன் விளைவாக நாட்டுக்குப் பொருந்தாத முறையில் கல்வி வழி தவறிச் செல்கிறது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரை இன்று பல பிரச்சினைகளை விடுவிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

> ''நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எமது சமூகத்தை வழிநடத்தக்கூடிய கல்வியே இன்றைய தேவையாகும்''

1. தமது அரசியல் விடுதலை மூலம் தமது நில உரிமையையும் ஆட்சி உரிமையையும் மீட்டெடுத்தல்.

2. அரசியல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் காலத்திலேயே தமது பொருளாதார சமூக விடுதலையை வென்றெடுத்தல்.

3. அரசியல் பொருளாதார சமூக விடுதலையை விரைவாகவும் இருக்கும் வளங்களைக் கொண்டும் வென்றெடுப்பதற்கான வல்லமையை பெற்றுக் கொள்ளுதல்.

இம் மூன்று குறிக்கோள்களையும் எய்துவதற்கு உரிய முறையில் சமுதாயத்தை வளர்த்தெடுப்பதில் கல்வி பெரும் பங்காற்ற முடியும். எமது அரசியற் போராட்டத்திற்கான காரணங்களை விளங்கிக் கொள்வதற்கும், போராட்ட மூலம் விடுதலையை வென்றெடுப்பதற்கான உடல், உள ஆற்றல், பயிற்சி என்பவற்றை வளர்த்தெடுக்கவும் கல்வி அத்திவாரமாக அமைய முடியும்.

எமது பொருண்மியத்தைத் தற்சார்புள்ள தாக்கிக் கொள்ளவும் எமது வளங்களைக் கொண்டு எமது நாட்டிற்கான தேவைகளை பூர்த்தி செய்யவும் கூடிய ஆற்றலை பாடசாலை மாணவர்களிடமும் ஏனையோரிடமும் உருவாக்க வேண்டியுள்ளது. சமூகத்தில் பண்பாடு, ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளை விடுவிக்கவும் சமூக நீதியுணர்வு மிக்க சமூகத்தை வளர்த்தெடுக்கவும் நாட்டுப்பற்றுள்ள சமூகத்தை உருவாக்கவும் வேண்டிய தேவை உள்ளது.

இந் நிலையில் இன்று சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய கல்விமுறையில் இவை சாத்தியமானவை தானா என்ற கேள்வி எழுகிறது.

இரு தசாப்தங்களாகநடைபெற்று வரும் விடுதலைக்கான எமது ஆயுதப் போராட்டம் இன்று பலமடங்கு விரிவு பெற்றுள்ள அதேவேளை நாம் இன்னமும் எமது அரசியல் அபிலாசைகளை அடைந்துவிடவில்லை என்பதையும் மனதில்கொள்ள வேண்டும்,

எனவே ஆக்கிரமிப்பாளனின் கொடுமையிலிருந்து விடுபடவும், பொருளாதார, கல்வி தடைகளிலிருந்து விரைவாக விடுதலை பெற மட்டுமன்றி பெற்ற விடுதலையைப் பேணுவதற்கும் ஏற்றவகையில் கல்வி முறைமையையும் சமாந்தரமாக முன்னெடுத்துச் செல்லவேண்டியுள்ளது.

இன்றைய கல்வி முறைமையை அமுல்செய்பவர்கள் சிறிலங்கா அரசின் கீழ் இன்றிருக்கக்கூடிய கல்வி முறைமையையோ, பாடத்திட்டங்களையோ, கல்வி நூல்களையோ கற்பித்தற் தொழில்நுட்பங்களையோ, பரீட்சை முறைகளையோ எவ் விதத்திலும் பிழையின்றி அமுல்படுத்துவதிலேயே அக்கறையாக உள்ளனர். இதன் மூலம் தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கின்றனர். இதனால் எமது பிரதேசத்திற்கு ஏற்ற வகையில் கல்வியில் மாற்றம் செய்ய இவர்கள் முயலவில்லை. இந் நிலையில் காலத்தின் தேவையை உணர்ந்து கல்விமான்களும், கல்வி நிருவாகிகளும், ஆசிரியர் சமுதாயமும் மாற்றங்களை ஏற்படுத்த முன்வர வேண்டியுள்ளது.

இதேவேளை இவ்வாறான மாற்றங்கள் செய்யப்படும்போது பெருமளவு கல்வியறிவு உடையவர்களிடமிருந்தே எதிர்ப்புக்கள் முதலில் எழுவதை அவதானிக்கிறோம். அதற்கு காரணம் இல்லாமலும் இல்லை. இவர்கள் எதிர்பார்க்கும் உயர் கல்வி முறையை அவதானித்தால் அது பிறநாட்டில் கல்வியைத் தொடரவும், பிறநாட்டில் தொழில் புரியவும், பிறநாட்டுச் சான்றிதழ்களுடன் சமப்படுத்தவும் முனைவதை அவதானிக்கலாம். மிகச் சிறுதொகையினராகிய இவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முயல்வதே பெறுபேற்றில் வீழ்ச்சி ஏற்பட காரணமாகிறது.

எனவே தமிழீழத்தின் நிகழ்கால, எதிர்கால தேவைகளையறிந்து பாடவிதானங்களை மீளமைப்புச் செய்வதிலும், பாடநூல்களை உருவாக்குவதிலும், பொருத்தமான உயர், தொழில்நுட்பக்கல்விகளை கண்டறிதலிலும் உடனடிக்கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எமது சமுதாயத்தை வழிநடத்தக்கூடிய கல்வியே இன்றைய தேவையாகும்.

★ **பார்த்தீபன்** ★

# வழித்துணை

கோளங்கள் நெஞ்சின் படபடப்பை அதிகரிக்கச் செய்தன.

பல்கலைக் கழக மாணவர்கள் என்ற சலுகையால் கோகுலனின் நண்பர்கள் குழாமுக்கு மூன்றாவது படகிலேயே இடம் கிடைத்து விட்டது. பயணப் பொதிகளைத் தூக்கி படகினுள் போட்டுவிட்டு படகின் விளிம்புகளைப்பற்றி உள்ளே ஏறினார்கள். கோகுலனின் நண்பர்கள் பத்துப்பேருடன் சேர்த்து இருபத்தைந்து பேர் படகில் இருந்தனர்.

சிறிது தூரம் சென்ற பின்னர்படகின் வெளியிணைப்பு இயந்திரங்கள் இயங்கத் தொடங்கின. அலைகளில் ஆடி ஆடி படகு பயணம் செய்தது. கடல் நீர் படகினுள் தெறித்து ஆட்களை நனைத்தது. முகத்தில் பட்ட உப்பு நீரைத் துடைத்தபடி கோகுலன் இருளை ஊடுருவிப் பார்த்தான். தூரத்தில் பூநகரியின் வெளிச்சமும் இடையில் கடலில் கடற்புலிகளின் படகுகளும் தெரிந்தன.

படகில் இருந்தவர்கள் தங்கள் தங்கள் கடவுள்களை வேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். படகு ஒரு கோயில்போல பக்தி மயமாக இருந்தது. முருகன், சிவன், யேசு, பிள்ளையார், ஆண்டவர், மாதா, அம்மன் அந்தோனியார் என அனைத்துக் கடவுள்களையும் கடற்காவலுக்கு வரவேண்டும் என அவர்கள் அழைத்துக் கொண்டிருந்தனர். கோகுலனும் தனக்குத் தெரிந்த நான்கு. ஐந்து தேவாரங்களை முணு முணுத்துக் கொண்டிருந்தான். நண்பர்களுக்குத் தெரியாமல் இருப்பதற்காகத் தலையை குனிந்து கொண்டான்.

கோகுலனின் நண்பர்களில் ஒரு சிலர் ஓட்டிகளுடன் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஓட்டி ஒருவர் சில நாட்களுக்கு முன் சிறிலங்காக் கடற்படைகள் கிளாலிக் கடலில் நடாத்திய ஒரு பலி எடுப்பை விளக்கமாகக் கூறிக்கொண்டிருந்தார். தான் அப்படகிலிருந்து தப்பிய விதத்தைக் கூறிய அவர் அதுதான் தப்பச் சிறந்தவழி எனக் கூறினார். இவற்றைக் கேட்ட பயணிகளுக்கு வயிற்றைக் கலக்கியது. ஓட்டியின் வாயைக் கிளறிய கோகுலனின் நண்பர்களை ஏனைய பயணிகள் கோபமாகவும் எரிச்சலாகவும் பார்த்தனர்.

பூநகரியிலிருந்து இடையிடையே தேடுதல் வெளிச்சம் இருளைத் துளைத்துக்கொண்டு சென்றது. சிறிலங்கா கடற்படை தங்களைக் கண்டு விட்டதோ என பயணிகள் பயந்தனர்.

பயந்து கொண்டிருந்த பயணிகளுக்கு தெம்பூட்டுவதுபோல் கடற்புலிகளின் படகுகள் பயணிகளின் படகுகளைக் கடந்து போயின. பயணிகள் நெஞ்சம் நிறைந்த பயத்துடன் கடற்புலிகளின் படகுகளை பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

வோக்கி சீலனை அழைத்தது. எதிரியின் படகுகள் நாகதேவன் துறையிலிருந்து புறப்பட்டு வருவதாக செய்தி வந்தது. 'போட்டை மேற்கிலை திருப்பு'' என சீலன் தனது படகை ஓட்டிய தோழனுக்குக் கூறினான். ஏனைய கடற்புலிகளின் படகுகளை தான் போகும் திசையில் வரச் சொல்லி வோக்கி மூலம் உத்தரவிட்டான். ''இண்டைக்கு சிங்களவனுக்கு பாடம் படிப்பிக்க வேணும். எங்கட உயிர் இருக்கிறவரைக்கும் எங்கடை சனத்திலை சிங்களவன் கை வைக்க விடக் கூடாது. இண்டைக்கு நல்லா அடிக்கோணும். கவனமாக அடிபடவேணும்'' என்று தனது படகிலிருந்த போராளிகளுக்கு சீலன் கூறினான்

பயணிகளின் படகுகள் போகும் பாதைக்கு ஒன்று ஒன்றரை மைல் மேற்கில் கடற்புலிகளின் படகுகள் சிங்களக் கடற்படையின் படகுகளை வழி மறித்தன. தமிழ் மக்களின் குருதியை சுவைக்க எண்ணிப் புறப்பட்ட சிங்களக் கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நடுக்கடலில் ஒரு மோதல் தொடங்கியது.

வெடிச்சத்தங்களும் ஒளிப் பொறிகளும் கடலில் நடக்கும் சண்டையின் பரிமாணத்தை பயணிகளுக்கு உணர்த்தின. ஓட்டிகள் சண்டை தொடங்கிவிட்டது என்றும் ஒரு மைல் தூரத்தில் சண்டை நடக்கிறதுபோல் உள்ளது எனவும் கூறினார்கள்.

கோகுலன் இருந்த படகின் பயணிகள் அனைவரும் படகைத் திருப்புமாறு ஓட்டிகளிடம் மன்றாடினார்கள். ''பயப்பிடாதையுங்கோ இன்னும் கொஞ்சத் தூரம் போனா பிறகு நேவி வரமாட்டான். திரும்பிப்போற தெண்டாகூட நேரம் பிடிக்கும்'' என்று ஓட்டிகள் விளக்கினார்கள். ''பெடியள் நேவியை மறிச்சிட்டாங்கள். இனி விடமாட்டாங்கள். இண்டைக்கு நேவிக்காரர் நல்லா மாட்டியிட்டினம். நீங்கள் பயப்பிடாதையுங்கோ'' என்று பயணிகளுக்கு துணிவூட்ட முயன்றார்கள். படகு தொடர்ந்து போய்க்கொண்டிருந்தது.

நேரம் ஆக ஆக சண்டையின் உக்கிரம் அதிகரித்துக்கொண்டே வந்தது வீசுகின்ற காற்றிலும் உடலை நனைக்கின்ற கடல் நீரிலும் மரணத்தின் சேதி கலந்திருப்பதாக கோகுலன் உணர்ந்தான். இருளினூடு தெரிந்த சன்னங்களின நெருப்பு திகிலை ஊட்டியது.

பயணிகள் தேவாரம், திருவாசகம், செபம் எல்லாவற்றையும் உரத்த குரலில் கூறத் தொடங்கினார்கள். வரவரப் பிரார்த்தனைகள் அழுகையாக மாறத் தொடங்கின கோகுலனுக்கு தேவாரங்கள் மறந்துபோய் விட்டன. ''பிள்ளையாரே...பிள்ளையாரே'' என்று வாய்விட்டுப் புலம்பிக்கொண்டிருந்தான்.

கடற்புலிகளின் சகல படகுகளிலும் இருந்த வோக்கிகளில் சீலனின் குரல் ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தது. படகுகள் நீரைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தன. துப்பாக்கி ரவைகளின் பரிமாற்றம் கனமாக இருந்தது. ''மக்களைக் காப்பாற்ற வேணும். எப்படியெண்டாலும் இண்டைக்கு இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேணும்'' என்ற சிந்தனை சீலனின் மனதில் நிறைந்திருந்தது. 'மச்சான் இண்டையோட இந்தச் சிங்களவன் எங்கடை கடலிலை இறங்கக்கூடாது. பார்த்து அடியுங்கோடா. ஒருத்தனைக்கூட சனத்துக்குக் கிட்ட போகவிடக்கூடாது'' என்று கூறிக்கொண்டிருந்த சீலனின் கண்களில் தொலைவில் ஒரு சிங்களக் கடற்படைப் படகு களத்திலிருந்து நழுவி பயணிகள் படகுகளை நோக்கிப் போவது தெரிந்தது. ''போட்டை இடப்பக்கம் திருப்பு ஒருத்தன் நழுவிக் கொண்டு சனத்திட்டப் போறான். விடக்கூடாது துரத்து'' என்று ஆணையிட்டான். சீலனின் படகு அந்த சிங்களக் கடற்படையின் படகை நெருங்கியது.

'கிளாலியில் புலிகள் கடற்படை மோதல்; நான்கு பயணிகள் படகுகளைக் காணவில்லை; ஏனைய படகுகள் திரும்பின' என்ற செய்தி நாளிதழ்களில் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது. நாளிதழ்ச் செய்திகள் கோகுலனின் வீட்டில் மரணச் செய்தியாக வந்து சேர்ந்தது.

செய்தியைக் கேட்டதும் பர்வதம் மகனை நினைத்துக் குழறத் தொடங்கிவிட்டார். வாத்தியார் வீட்டில் கேட்ட அழுகை ஒலியால் அயலவர் வாத்தியார் வீட்டில் கூடிவிட்டார்கள். பக்கத்து வீட்டு இராசாத்தி ''பர்வதம் மாமி? கோகுலன் திரும்பி வர இல்லையே, கடைக்காரச் சின்னையாவும் ஆலடியில் நல்லதம்பியும் ராத்திரி ஒருமணிக்கே திரும்பி வந்திட்டினம்'' என்று கூறி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றினர்.

நல்லதம்பி வீட்டிற்கும் சின்னையா வீட்டுக்கும் வாத்தியார் உடனே போனார். அவர்கள் நாலு படகுகளைக் காணவில்லைத்தான் என்று கூறினார்கள். வீட்டிற்குத் திரும்பி வந்த வாத்தியாருக்கு நெஞ்சடைப்பதுபோல் இருந்தது. மகனை நினைத்து கண்ணீர் வடிக்கலானார் வாத்தியார்.

மாலினி தகப்பனுக்குநெஞ்சுநோ மருந்தைக் கொடுத்தாள் சைக்கிளை எடுத்துக்கொண்டு கோகுலனுடன் பயணம் சென்ற நண்பர்களின் வீட்டிற்கு மாலினி போனபோது அவ் வீடுகளில் ஒலித்த அழுகை மாலினியை வரவேற்றது.

வாத்தியாரின் வீட்டில் சோகம் தனது கால்களை பதித்துக் கொண்டது. தாயும் தகப்பனும் மகளுமாக அழுவதும் தேறுதல் சொல்வதுமாக அன்றையபொழுது கழிந்தது பர்வதம் எல்லாக் கடவுள்களையும் திட்டினார் ''எல்லாரும் என்னைக் கைவிட்டிட்டியளே என்ரை குஞ்சை என்ன செய்தியள் என்ரை கோகுலனை என்னட்டை இருந்து பிரிச்சுப் போடாதையுங்கோ'' என்று அழுதாள். வாத்தியார் சாமியறைக்குள் போய்'' பிள்ளையாரே என்ரை பிள்ளை சுகமா இருக்கோணும் அவன்ரை சுகத்துக்கு பதில் வந்தால் உனக்குப் பலகாரப் பூசை செய்யிறன்'' என்று நேர்த்தி வைத்தார். மாலினி தாய்க்குஅருகில் இருந்து கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தாள். சண்டை பிடித்து, அன்பு பாராட்டி. பகிர்ந்துண்டு தன்னுடன் வாழ்ந்த தனது தம்பிக்கு ஒன்றும் நடக்காது என்று அவளுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது.

✲ ✲ ✲

வாத்தியாரும், பர்வதமும் மாலினியும் கோயிலுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள் கைகளில் பெரிய தட்டங்களில் பிள்ளையாருக்குப் படைக்க பலகாரங்கள் இருந்தன. மகிழ்வுடன் கதைத்துக்கொண்டு மூவரும் கோயிலுக்குப்போய்க்கொண்டிருந்தார்கள்.

கோகுலன் பயணம் புறப்பட்டு ஐந்தாம் நாள் அவனிடமிருந்து கடிதம் வந்தது. கடலில் சண்டை நடந்தாலும் தானும் தனது நண்பர்களும் பிரச்சினை இல்லாமல் கரை சேர்ந்ததாகவும் ஒரு படகு கூட ஆபத்தில் சிக்கவில்லையென்றும் கோகுலன் எழுதியிருந்தான்.கடிதம் கண்டபிறகு தான் வாத்தியாரின் வீட்டில் மீண்டும் உயிர்க்களை தோன்றியது கவலையின் முடிச்சுகள் அவிழ மகிழ்ச்சி மீண்டும் குடியேறியது பர்வதம் உடனேயே தான் திட்டிய கோயில்களுக்கெல்லாம் போய் மன்னிப்புக்கேட்டு மகனின் பேரில் அருச்சனை செய்துவிட்டு வந்தார்-

இன்று வாத்தியாரின் நேர்த்திப்படி பிள்ளையாருக்குப் பலகாரப் பூசை தட்டங்களை மூடியிருந்த நாளிதழ்களை எடுத்துக் கொண்டு தட்டங்களை ஐயரிடம் கொடுத்தார்கள். மனமுருகி ஆனந்தக கண்ணீருடன் பூசையை மூவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கோகுலனைக் காப்பாற்றிய பிள்ளையாரின் அருள் மூவரினதும் நெஞ்சையும் நிறைத்தது.

ஐயர் கொடுத்த திருநீறை பொதி செய்ய கையிலிருந்த நாளிதழில் ஒரு துண்டை வாத்தியார் கிழித்தார். திருநீறை அத்துண்டில் கொட்டிய வாத்தியாரின் கண்களில் ஒரு படத்துடன் வெளியாகியிருந்த அந்தச் செய்திபட்டது.

'கிளாலிக்கடலில் மக்களைக் காக்கும் பணியில் மேஜர் சீலன் வீரச்சாவு' என்று அந்தச் செய்தி தொடங்கியிருந்தது.

நான்காண்டை பூர்த்தி செய்யும் ஈழநாதத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்
வளரும் ஆண்டுகளிலும் அதன் இலட்சியம் ஈடேற வாழ்த்துகிறோம்.

**சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்.**

**(General Hardware Merchants)**

சகல விதமான தராசுகள், பெயின்ற் வகைகள் மற்றும் ஹாட்வெயர் (Hardware) விற்பனைக்கு உண்டு.

சகல விதமான தராசுகள் பழுதுபார்த்தல், முத்திரை இடல் ஆகியவற்றுக்கும் தொடர்பு கொள்ளவும்.

விற்பனை நிலையம்:
206, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
17, செம்மணி வீதி,
நல்லூர்.

(சி-8591)

ஈழநாதம் 5ஆம் ஆண்டில் வளர
எமது நல்வாழ்த்துக்கள்

**Jaffna Technical Institute**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை, மேல்மாடி)

(சி8527)

# …லையின் பாதிப்பும்

இதனால் சில
மழைப் பொழி
ும்.
கள் வானிலை
னேகமாக உயர்
டக்கு கிழக்குப்
இவ்வானிலைத்
தான பண்பு
த்தில் கிடைக்
வீழ்ச்சியாகும்.
ற்பட்ட உயர்
ள்ளப்பெருக்கு
ார்த்தால்,
க்க இறக்கத்
தொடர்புடை
யும். எடுத்
முழுவதிலும் 24
கஉயர்ந்தளவு
மில். மீற்றர்
ங்கேணியில்
யர்ந்தளவு

…ற்றர் முல்லைத்
வ இரண்டும்
ற்றப்பாடுகளா
வையாகும்.
கிழக்கில் ஏற்
ருக்குகளுக்கும்
தோற்றப்பாடு
1911, 1956,
ண்டுகள் இதற்
கள் ஆகும்.

ாகளிலும் இவ்
மழைவீழ்ச்சி
ாலும் பொது
னமான மழை
ு சராசரியாக
250 மி. மீற்ற
ல் கிடைக்கப்
னமழைவீழ்ச்சி
களை சில தின
செய்யக் கூடி
ாணுவ ரீதியா
டயச் செய்யக்

ழவீழ்ச்சி ஏற்
தின் நகர்ச்சி
விநியோகமும்
ளாகக் கூடும்.
இல் இந்திய
ிகளுக்கு எதி
லத்தில் ஆரம்
வாகனங்கள்,
தமது விருப்ப
ட்டு அவர்கள்
ண்டி வந்தது,
கனங்கள்,
போனதனால்
ரும் பிரயத்
து. இதற்குக்
கடும் மழை
ககள் கூடுத
றதே காரண

மழை காரண
பெருக்கும்
ஏற்படுத்தக்
கடந்த
டர்ச்சியாகப்
ாணுவ முகாம்
க்கும் புகுந்து
ம் பாதிப்புக்
ல்கள் வெளி

னிலையில் ஒரு
ற்கொள்வதா

னால் அதற்கு வெள்ளப்பெருக்கும் தடையாக இருக்கக்கூடும்.

மேலும் கடும் மழை இரைச்சலுடன் கூடியதாக இருக்குமானால், இரவு வேளையில், எதிர்த்தரப்பினரின் நடமாட்டத்தினை கண்டறிவதும் மிகவும் கடினமானதாகும். இது இராணுவ நிலைகளின் பாதுகாப்பையே கேள்விக்குரியவை ஆக்கிவிடக் கூடியவை ஆகும்.

ஆனால், வடக்குப் போர்முனையைப் பொறுத்து இக் கடும் மழையானது இரு சந்தர்ப்பங்களில் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது தப்பி ஓடிய இராணுவத்தினர் உயிர் வாழ்வதற்கு சாதகமாக அமைந்ததும் உண்டு. அதாவது காடுகளில் பெய்த கடும் மழை அவர்களின் நீர் தேவையைப் போக்குவதற்குப் பெரிதும் உதவியாக இருந்துள்ளது. இதனை மாங்குளம், பூநகரி ஆகிய முகாம்களில் இருந்து தப்பிஓடிய இராணுவத்தினரின் பின்னைய வாக்கு மூலங்களே தெரிவித்துள்ளன.

## முகில் மூட்டம்

அத்தோடு, மாரிகாலத்தில், இலங்கையைத் தாக்கும் தாழமுக்கங்களின் போது உருவாகும் மோசமான வானிலையானது, விமானப்படை, கடற்படை போன்றவற்றின் செயற்பாடுகளுக்குக் கணிசமான இடையூறுகளைச் செய்யக்கூடியன. இதில் வானத்தை மூடும் முகில் மூட்டமும், கடும் காற்றால் உருவாகும் கடல் கொந்தளிப்பும் முக்கியமானவையாகும்,

கோடைகாலத்தில், வடக்கு-கிழக்கில் காணப்படும் முகில் மூட்டமானது பொதுவாகவே கீற்று முகில்களைக் கொண்ட உயர் முகில்களையும், உயர் படை முகில்களை கொண்ட மத்திய முகில்களாகவும் காணப்படுகின்றன. அவைபெரும்பாலும்15,000அடிக்குமேற்பட்ட உயரத்திலேயே காணப்படுகின்றன. ஆனால், மாரிகாலத்தில், குறிப்பாகமோசமானவானிலையையும்,மழைப் பொழிவும் இடம் பெறும் வேளைகளில் 6000 அடிக்கு கீழ்ப்பட்ட திரண்படை முகில், கார்படை முகில், படைமுகில் ஆகிய தாழ்ந்த முகில்களையும், திரண் முகில், திரண் கார் முகில் ஆகிய செங்குத்தான முகில்களும் காணப்படுகின்றன இதில் தாழ்ந்த முகில் வகைகளைச் சேர்ந்த படைமுகில் சராசரியாக 2000அடிக்கும் கீழே காணப்படும். அதேவேளை, ஏனையமுகில்கள் யாவும் 3000அடிக்கும் 6000அடிக்கும் இடையில் காணப்படுகின்றன.

இவ்வாறாக உருவாகும் முகில் மூட்டமானது, வடக்குப் போர் முறையில், விமானப்படையின் செயற்பாட்டை கணிசமான அளவில் பாதிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. 1990 ஆம் ஆண்டில் புலிகள் மேற்கொண்ட மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல், 1993இல் புலிகள் மேற்கொண்ட ஒப்பரேசன் தவளை ஆகிய தாக்குதலின் போது இவ்வாறான காரணம் ஒன்றை சிறிலங்கா இராணுவத்தரப்பு கூறிக்கொண்டதும் சுட்டிக்காட்டக் கூடியதே.

அதாவது வானவெளியில் ஒரு விமானியின் நீண்ட தூரப் பார்வைக்கு அதிகளவில் தடை ஏதும் இருப்பதானால் அவை முகில்களாகவே இருக்க முடியும். இந் நிலையில் முகில் மூட்டங்கள் மிகக் குறைவான உயரத்தில் இருக்கும் போது அதற்கு மேல் நின்று தரைப் பகுதியைப் பார்ப்பது மிகவும் கடினமானதே ஆகும்.

இதில், தாழ்ந்த உயரங்களில் பெரும்பாலும் ஒரே சீரான படுக்கை போன்று காணப்படும் கார்படை முகிலானது (சராசரி உயரம் 3000 அடி) சூரியன்சந்திரன் ஆகியவற்றை மறைத்து விடும் அளவிற்கு ஒளியை உட்புக விடாத தன்மை கொண்டதாகும். இந் நிலையில் இம் முகிலுக்குமேல் பறக்கும் விமானிக்கு தரைப்பகுதியைப் பார்வையிடுவது என்பது முற்றிலும் சாத்தியமற்றதொன்றே.

இதேவேளை, செங்குத்தாக வியாபிக்கும் திரண் முகிலானதுபொதுவாக இடியுடன் சூறாவளியின் தோற்றத்தை காட்டுகின்றது. இம் முகில் பொதுவாகக் காணப்படும் தன்மை குறைவாக இருப்பினும் இம்முகிலிலிருந்து உருமாறித் தோன்றும் திரண் கார் முகிலானது விமானஓட்டிகளுக்கு பெரும்அச்சுறுத்தல் கொடுக்கக் கூடியதாகும். பொதுவாக இம் முகிலின் போது பொதுவாக வீசும் காற்றோட்டங்களுடனும், மழையுடனும் வேகமான, சுழற்சியான காற்றுடன் கூடியிருப்பதே இவ் ஆபத்திற்குரிய காரணமாகும்.

இவ்வாறான முகிலின் தன்மை வடக்கில் பொதுவான பண்பாகக் காணப்படாது விட்டாலும் வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கத்தைத் தொடர்ந்தும் அவற்றில் இருந்து உருவாகும் புயல்கள், சூறாவளிகள் என்பவற்றின் போதும் ஏற்படக் கூடியவை ஆகும்.

இந் நிலையானது விமானப்படையின் கணிசமான செயற்பாட்டை மட்டுப்படுத்துகின்றது. இந் நிலையானது மாரிகாலத்தில் போர்நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவத் தரப்பு மட்டுப்படுத்தக் காரணமாகின்றது.


## கடற்கொந்தளிப்பு

மாரிகால மோசமான வானிலைகளால் உருவாகும் மற்றுமொரு முக்கியமான அம்சம் கடற்பரப்பில் ஏற்படும் கொந்தளிப்பாகும். இது கடல் அலையின் எழுச்சிக்கும், குடாக் கடல்களில் நீர்மட்ட உயர்ச்சிக்கும் வழிவகை செய்கின்றது.

வங்காள விரிகுடாவில், ஒரு சூறாவளியின் போதுசராசரியாக 5மீ - 6மீற். இடையில் கடல்அலை எழுச்சி பெறுகின்றது. வடக்கு - கிழக்கு கரை ஓரங்களில் அந்தளவிற்கு கடல் எழுச்சி காணப்படாது விட்டாலும் 04மீற். - 05மீற். இடையில் ஏற்படுவது அறியப்பட்டுள்ளது. இந் நிலையானது பொதுவாகக் கடல் கொந்தளிப்பிற்கு வழிவகுக்கக் கூடியவையாகும்.

ஆனால் சூறாவளி அரிதாக நிகழ்வதினாலும் புயல்கள் தாழமுக்கங்கள் என்பன வருடத்தில் ஓரிரு நிகழ்வுகள் சராசரியாக நிகழ்கின்றன. சில வருடங்களில் மூன்று நான்கும் நிகழ்கின்றன. இந்நிலையில் இக்கடல் கொந்தளிப்பு சூறாவளிநிலையில் இல்லாது விடினும் பயணங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் இன்னல் விளைவிக்கக் கூடிய மோசமான நிலை உருவாகலாம். இத்துடன் வேகமான காற்றோட்டமும் மழைபொழிவும் ஏற்படுமானால் பெரும் நெருக்கடிகளை அவை உருவாக்கக் கூடும் இவை போர் முறைகளில் பெரும் தாக்கத்தைவிளைவிக்க கூடியவையாகவும் உள்ளன.

மேலே விபரிக்கப்பட்ட அம்சங்கள் மாரிகாலத்திற்குரிய போர் நடவடிக்கையில் வானிலையை எவ்வளவிற்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதை ஓரளவிற்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் உள்ளது ஆனால் மேல் குறிப்பிட்ட வானிலை ஒழுங்கானது மாரிகாலம் முழுவதையும் ஆக்கிரமிக்கவில்லை ஆயினும் அது எப்பொழுதும் நிகழலாம் என்பதற்கான நிகழ்தகவுகள் அதிகம் உள்ளதாகவே கருதப்படுகின்றது இதன் காரணமாகவே சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மாரி காலத்தில் பெரும் தாக்குதல்களை பெரும்பாலும் திட்டமிடுவதில்லை.




### ஈழநாதம்

நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டி
முதற்பரிசு பெற்ற கவிதை

## வாருங்கள் நிலத்தை வளமாக்க....!

பூகம்பத்திற்குப் புதுப்பெயர் தான் புலிப்படை
போர்க்கலையின் புதிய கலாசாலைதான் தலைவர்
பிரபா
ஈழத்தில் இல்லையென்று யார் சொன்னது......
எரிமலைகள்?
இங்கு ஏராளமாய் இருக்கின்றார்கள் கரும்புலிகள்!
ஈகத்திற்கும் வீரத்திற்கும் இப்போ இங்குதான் இருப்பிடம்
தமிழீழ வேங்கைகளின் உள்ளந்தான்
இரண்டினதும் தரிப்பிடம் !
எதிரியின் எந்தத் தடையும் இங்கு தடையல்ல ....
தடைக்கற்கள் எல்லாமே தமிழினத்திற்குப்
படிக்கற்கள் தான்.
வெடிகுண்டும், எறிகணையும், விமானக் குண்டுகளும்
எங்கள் வீரமக்களின் விளையாட்டுப்பொருட்கள்.
சாவுகள் இங்கு சாதாரண நிகழ்ச்சி!
அவைகளுக்குச் சரித்திர அந்தஸ்தும் இங்குதான்
கிடைக்கும்!
புறநானூற்று வீரம் இங்கே புறங்காணப்பட்டுவிட்டது.
புலிபோற்றும் வீரம் நிலைநிறுத்தப்படுகின்றது!
உருவாகப் போகும் உன்னத
உலக இலக்கியங்களுக்கான —
கருப்பொருட்கள், கடலளவு இங்கே காத்துக்
கிடக்கின்றன!
அநீதியின் வடிவமே எமது எதிரி
அழிப்புத்தான் அவனது செயற்பாடு
நீதியும் உண்மையும் நெருப்புக்கு நிகரானவை.
அவை இரண்டுமே எமது ஆயுதங்கள்
ஆகவே நாம் நெருப்பு அவன் (எதிரி) சருகு !
நாம் புயல் அவன் புழுதி !
இனி எங்கள் உவர் நிலங்களிலும்
கனி மரங்கள் காய்த்துக் குலுங்கும்
எப்படியெனில் அநியாயங்களின் சின்னமான
எதிரியின் உடல்கள் அந்த நிலங்களில் உரமாகப்
போகின்றன
ம்.... வாருங்கள் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு
நிலத்தை வளமாக்க ....

அ. எழில்மாறன்

## கல்லுக்குள்...

'போனவுடன் அக்காவை ரெண்டு பேருக்கும் கலியாணம் செய்துவைக்க வேணும். அதற்குப் பிறகு வயல் கரையிலேயே கொட்டிலொன்றைப் போட்டுக்கொண்டு அம்மாவோட இருந்திரலாம்'

புகையிரதத்தால் இறங்கி நடந்தான். மக்கள் வரிசையில் நகர்ந்தனர். அவனும் வரிசையில்; அடையாளம்கண்டு விடுவார்களோ என்ற தவிப்பு. தேகம் நடுங்கியது.

எதிரில் அவர்கள் நின்றனர். பச்சை உடைகள்; தோள்களில் ஆயுதங்கள். முகங்களைப் பார்த்தான். தெரியவில்லை. நன்றாக உற்றுப் பார்த்தான். கடவுளே! அவை இருந்த இடத்தில் மண்டை ஓடுகள் மட்டும் அசிங்கமாக... கோரமாக...

அவன் ஓடினான். அவர்கள் துரத்தினர். பயங்கரமான கூச்சல்.

''இன்னும் கொஞ்சநேரம் அங்கால எங்கட இடம்'' ஓடினான். சேறுசகதியும் வழுக்கின. கால்கள் மறுத்தன முடியவில்லை. துப்பாக்கி ரவைகள் திரத்திவந்தன. அவன் விழித்துக் கொண்டான்.

வியர்த்தது. உடல் நடுங்கிப்படபடத்தது. இருள் எங்கும் அப்பி அழுத்தியது. கண்களை திரும்பவும் மூடபயமாக இருந்தது. கனவு கொடுமையானது. இருளின் நிசப்தம் இதயத்தை வதைத்தது. அருகில் யாரோ மெலிதாக அழுதான். அவனுக்கும் அழ வேண்டும் போலிருந்தது.

அழுதான்; கேவிக்கேவி சத்தமிட்டு அழுதான், சிறைகளுக்குரிய வழமையான சோகம்; உறங்கிப்போனான்.

அந்தஅறைக்குள்ளும்மங்கிய ஒளியொன்று விழுந்துவிடியலைச்சொல்லியது. அவன் உறக்கத்தில்தான். விழித்தபோது நால்வர் சுற்றி நின்றனர். கனவில் வந்த முகமற்ற பேய்கள்; நன்றாக உற்றுப் பார்த்தான். இப்போது முகங்கள் இருந்தன. நிஜம்.

''எழும்படா நாயே'' ஒருவன் காலால் உதைந்தான். இழுத்து நிமிர்த்தினார்கள்.

''நடவடா'' இழுத்துச் சென்றனர். கால்கள் தயங்கின; தள்ளாடின.

மேசையில் ஒரு பக்கமாக இருந்தனர். மறுபக்கம். அவனை இருத்தினார்கள். அவர்கள் அதிகாரிகளாக இருக்க வேண்டும்.

அவனுக்குள் ஓர் நம்பிக்கை. 'ஒருவேளை அவர்கள் இரங்கக் கூடும்' விழிகள் நம்பிக்கையுடன் அவர்களைப் பார்த்தன.

விசாரணைகள் ஆரம்பித்தன; அர்த்தமில்லாத, அவனுக்கு பதில் தெரியாத கேள்விகள். திரும்பத் திரும்ப வந்தன. அவன் பதில் சொன்னான். நடுங்கித்தடுமாறி பதில் சொன்னான்.

அவர்களை அவனால் திருப்திப் படுத்த முடியவில்லை என்பது அவனுக்கு விளங்கியது. முடிவு பயங்கரம் தான். மனம் அழுதது. கைகளைக் கூப்பினான். விரித்தான்.

''ஐயா, அக்காவைக்கு கல்யாணம்... நான் வெளிநாட்டுக்குப் போய்... அதற்குத் தானய்யா கொழும்புக்கு வந்தனான்'' அவன் சத்தமிட்டு அழுதான். இறுகிய முகங்கள் இழகவில்லை.

பழையபடி அதே நால்வர். அவனைத் தாக்கினர். அருகில் இன்னொரு அறை. அவனுக்கு அதைத் தெரியும். அங்குதான் இதற்கு முதல் அவன்...

கால்கள் நகர மறுத்தன. முரண்டு பிடித்தான். அவர்கள் விடவில்லை. ஒருவன் தள்ளினான்.

இருள், முதலாவது உதை வயிற்றில் விழுந்தது. 'ஐயோ' அவன் கத்தமுயன்றான். குரல் வெளிவரவில்லை. திரும்பவும் அதே கேள்விகள். அவனுக்கு பதில் தெரியாத கேள்விகள்.

இருளுக்குள் மிருகங்களின் குதறல்.

இழுத்துவரப்பட்டவன் தூக்கி வீசப்பட்டான். அதே பழைய அறை, அழுக்குப்படிந்த, கரிய சுவர்கள், துருப்பிடித்த இரும்புக் கம்பிகள்.

அவனுக்குள் உயிரில்லை. உயிரோடு இருந்தாலும் இன்னும் சிலமணிநேரங்களில் இறந்துவிடுவான். அவன் சாகடிக்கப் பட்டுவிட்டான்.

இறுதியாக அவனது வேதனையை அறிந்து கொள்ள அங்குயாரும் இல்லை. எதுவுமே இல்லை. அந்தஅழுக்குப் படிந்த கரிய சுவர் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தது.

அது கல்லு; அதற்குள் கசிவு இல்லை; அதற்கு மட்டும்தான் அவனது கதையும் முடிவும் தெரியும்; அவனது மட்டுமல்ல அவனைப் போன்ற பலரது கதையும் முடிவும் அதற்குத் தெரியும்.

எமது நல்வாழ்த்துக்கள்

**வீடியோ விமல்**

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-8547)

## போராட்டத்திற்கான

இவை பற்றிய பூரண அறிவும் தெளிவும் இருப்பின், எமது மாணவ சமுதாயம், இன்று நாம் இழந்துள்ள சுபீட்சமான வாழ்வை நிலைநிறுத்துவதற்குத்தான் ஆற்ற வேண்டியுள்ள கடமைகளைத் தானே உணர்ந்து கொள்ளும் என்பதும், இதன் மூலமே எமது போராட்டத்தின் தாற்பரியமும், அதன் தேவையும் அவசியமும் இயல்பாகவே மாணவர்களுக்குத் தெளிவாகும் என்பதும் வெளிப்படையாகும்.

இன்று எமது மண் அந்நியனால் கபளீகரம் செய்யப்பட்டும் ஆண்டாண்டு காலமாக உழைத்து வாழ்ந்து வந்த எமது பாரம்பரியப் பிரதேசத்திலிருந்து எமது மக்கள் துரத்தி விரட்டப்பட்டு அகதியாக அல்லலுறும் நிலைக்கும், எடுத்ததெற்கெல்லாம் அடுத்தவர்களை நம்பியிருக்கின்ற மனப்பாங்கு மேலோங்குகின்ற நிலைக்கும் தமது பிரச்சினைகளுக்குத் தாமே ஆராய்ந்து தீர்வு காண்கின்ற பண்பு குன்றியுள்ளமைக்கும் சுய நம்பிக்கையின்மையும் அச்சவுணர்வுமே காரணம் எனலாம்.

இத்தகைய பயவுணர்வற்ற தன்னம்பிக்கையுடன் கூடிய மனப்பாங்கை வளர்க்கக் கூடிய க்ல்வி வழிகாட்டல் நீண்ட காலமாகவே எமது மக்களுக்குக் கிடைக்காமையே இன்றுள்ள இந்நிலைமைக்கு - தட்டிக் கேட்கின்ற, உரிமைகளைப் பெறப் போராடுகின்ற நிலை இல்லாமைக்கு - காரணம் ஆகும்.

இன்று எமது விடுதலைக்காக நாமே உழைக்க வேண்டும் என்பதும் நாமே இரத்தம் சிந்திப் போராடி எமது தேசத்தை மீட்டெடுக்க வேண்டும் என்பதும் வெளிப்படையான உண்மை ஆகும். ஓரிருவர் என்றல்லாது ஒட்டுமொத்தமாக நாம் அனைவருமே வயது, பால், வேறுபாடின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டளையுமாகும். ஆனால், இவற்றை அறிந்து, புரிந்திருப்பினும், எமது தேசத்தின் தேவை எதுவென்பதையுணர்ந்து எமது ஆற்றலைப் பயன்படுத்தி நம் நாட்டிற்காக உழைக்கும் மனப்பாங்கை இன்றைய கல்வி எமக்கு ஊட்டுவதில்லை.

மேலும், ஒவ்வொருவரும் தத்தமக்கேயுரிய தனியாற்றல், மூளை வளம் என்பவற்றின் உச்ச பலனைப் பெறும் வகையில் தம் சுய விருப்பு வெறுப்புக்கிணங்கத் தத்தம் துறைகளைத் தெரிவு செய்து, அவ்வத்துறைகளில்முன்னேறி, சிறப்புப்பயிற்சியும்தேர்ச்சியும் பெற்றுத்தமக்கும் தம் சமுதாயத்துக்கும் பயன்படும் வண்ணம்வாழ எமது கல்வி எமது மாணவர்களுக்கு வழிகாட்டுவதுமில்லை.

இந்த வகையில், தேசிய நலன்களுக்காக தம்மையும் தம் திறமைகளையும் அர்ப்பணித்து அல்லது பகிர்ந்தளித்துப் பங்களிக்கின்ற- நாட்டுக்கு உழைக்கின்ற - மாணவர்களைத் தயாரிப்பதிலுள்ள தன் பங்கை, உரிய முறையில் ஆற்றுவதில் இன்றைய கல்வி தவறியே வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

மாறாகச் சுயநலத்துக்காகப் பொது நலத்தையே பலியிடுகின்ற, தியாகசிந்தையற்ற மண்இனப்பற்றற்ற மாணவர்களை உருவாக்குவதிலேயே நடைமுறையிலுள்ள கல்வியமைப்பு 'வெற்றி' பெற்று வருகின்றது

மேலும், எதிர் காலத்தில் இந்த நாட்டை ஆளப் போகின்றதலைவர்கள் உருவாகின்ற இன்றைய தலைமுறையினருக்கு - மாணவர்களுக்கு - உரிய விதத்தில் தலைமைத்துவப் பண்புகள் பற்றி அறிவூட்டுவதிலும் இன்றைய கல்வித்திட்டம் பெரிதும் தவறிழைத்து வருகின்றது. இவ்வாறு செய்வதன் காரணமாக, எதிர்காலத்தில், சமூகப் பொருத்தப்பாடற்றவர்களும் தான்தோன்றித்தனமுள்ளவர்களும் சர்வாதிகாரிகளும் சுயநலமுடையசமூக, நீதியுணர்வற்றவர்களும் தலைவர்களாகத் தோற்றம் பெறவும், தொடர்ந்தும் அடிமைப்புத்தியும் குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கின்ற - தட்டிக்கேட்கும் ஆற்றலற்ற நிர்வாகத் திறனற்ற, தமது வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்தியற்ற பின்தங்கிய சமுதாயத்தையும், உடல், உள விருத்தி குன்றிய புரிந்துணர்வு அற்ற மக்களையும் தோற்றவுமே இன்றைய கல்வி துணைசெய்து (ம்) வருகின்றது.

மேலும், நாம் வாழ்வதற்குரிய பௌதீகச் சூழலையும் உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வழிகளையும் நாம் தனித்தன்றி சமுதாயமாக வாழும் இயற்கைச் சூழலையும் ஏற்படுத்தியளித்துள்ள இந்த மண்ணை வாழ வைக்கவும், எமது உரிமைகளை நிலைநாட்டி, எமது மக்களின் சுதந்திரம், பாதுகாப்பு, கௌரவம் ஆகியவற்றை உறுதிப்படுத்தவும் இன்று தம்முயிர், உடல் அனைத்தையும் அளித்துப் போராடிக் கொண்டிருக்கின்ற இந்த மண்ணின் மைந்தர்களை நேசிக்கவும் மாவீரரைப் போற்றிப் பின்பற்றவும், தோளொடு தோள் கொடுத்துப் போராடவும் நாம் முன்வர வேண்டியது எமது தார்மீகக் கடமை என்பதை உணர்த்தி மாணவர் மத்தியில், விடுதலைக்கு முதற்படியான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இன்றைய கல்வித்திட்டம் வழி சமைக்கவில்லை.

இவ்வாறாக, மொத்தத்தில் எவ்வகையில் எடுத்து நோக்கினும், எதிர்காலத் தேச நிர்மாணிகளான எமது இளம் தலைமுறையினரை - சிந்தனைச் சிற்பிகளான எமது மாணவர்களை உரிய முறையில் செதுக்க வேண்டிய இன்றைய கல்வி, நிகழ்காலத்தின் அத்தியாவசியத் தேவையான போராட்டத்திற்கான உணர்வையோ அன்றி போராட்டத்துக்கான சிந்தனையையோ ஊட்டவில்லை என்பதே நிதர்சனமான மறுக்கவோ மறைக்வோ முடியாத பேருண்மையாக அமைகின்றது.

திக்கெட்டும் திகழும் செய்திகளை திரட்டி
தீஞ்சுவையுடன் அள்ளித்தரும்
மக்கள் தினசரி ஈழநாதமே பல்லாண்டு
காலம் பணிதொடர வாழ்த்துக்கள்

**விக்னா**

கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(சி-8526)

எமது நல்வாழ்த்துக்கள்

**குணம்**

வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-8546)

# யாழ் மாவட்டத்தில் விளையாட்டுத்துறை

பந்து விரைந்து கொண்டிருக்கிறது. மைதானத்தில் தேங்கி நின்ற வெள்ளம், அழுது வடியும் வானம், எதுவும் இடையூறில்லை. கொட்டும் மழையிலும், மைதானப் பார்வையாளர்களின் உற்சாகக் கூச்சல்கள், விளையாட்டின் தீவிரம் மழையையும் குளிரையும் உதறித் தள்ள வைத்தது. இக்காட்சியை, அண்மையில் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் காண முடிந்தது. இது விளையாட்டுத் துறையில் எமது மக்களின் ஆர்வத்தை புலப்படுத்துவதாக அமைந்தது.

சமூக வாழ்வில் ஆரோக்கியம், சகிப்புத் தன்மை, சமூக செயற்பாட்டில் ஒருங்கிணைப்பை வலியுறுத்தும் ஊடகம், சமூக ரீதியான தனிப்பட்டவரின் பங்களிப்பு என்று நீண்டு சென்று, கடந்த சில தசாப்தங்களாக தொழில்மயப்படுத்தலுடன் இணைந்து செல்லும் விளையாட்டுத் துறையில் எமது மக்களின் நிலைப்பாடு, எதிர்நோக்கும் பிரச்சனைகளை, குறிப்பாக யாழ் மாவட்ட அளவில் ஆராய்ந்தபோது ஒன்று மட்டும் தெளிவாக இருந்தது. இங்கு திறமை இருக்கிறது. ஆனால் தகுந்த தரத்தை அடைய வைக்கும் வழிநடத்தல்களும், ஊக்கல்களும் குறைவாயிருப்பதை உணர முடிந்தது.

விளையாட்டுத் துறையின் ஆரம்ப களமாக அமையக் கூடிய பாடசாலைகளைக் கருதின், தகுந்த மைதானம் இல்லாதது முதல், கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பயிற்சிக்கான நிதி ஒதுக்கீடு வரை பிரச்சனைகள் எதிர்நோக்கப்படுகின்றன. யாழ் குடாநாட்டைப் பொறுத்த வரையில், தகுந்த விளையாட்டு மைதானத்தை கொண்டிருக்கும் பாடசாலைகளின், எண்ணிக்கை, குறைவாகவே காணப்படுகின்றது. கல்வித் திணைக்கள ஆலோசனையின் பிரகாரம் ஒவ்வொரு கொத்தணியும் நூறுமீற்றர் மைதானம், கோட்டம் இருநூறு மீற்றர் மைதானம், மாவட்ட அளவில் நானூறு மீற்றர் மைதானம் என்பவற்றையாவது கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் இந்த ஆகக் குறைந்த தேவையானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது கேள்விக் குறியே, இன்றுள்ள நிலையில், இராணுவ நடவடிக்கைகளினால் ஒரே பாடசாலையில் பல பாடசாலைகள் இடம்பெயர்ந்து இயங்கிவரும் நிலையில்; உள்ளதும் சரியான முறையில் பாவனையிலுள்ளதா என்பது ஆராயப்படவேண்டிய விடயம். பாடசாலைகள் எதிர்நோக்கும் இன்னொரு முக்கிய இடர்ப்பாடு, விளையாட்டுத் துறைப் பயிற்சிக்கென ஆசிரியர்கள் பற்றாக்குறையாகும். யாழ்மாவட்டத்திற்கு 300 உடற்கல்வி ஆசிரியர்கள் வெற்றிடங்கள் இருப்பதாக உடற்கல்விக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. அருணகிரிராஜா கூறுகிறார். ஆனால், தற்போது. பாடசாலைகளில் கடமையிலீடுபடும் உடற்கல்வி ஆசிரியர்கள், பூரணமான பயிற்சிகளுக்குப் பின் கற்பித்தலில் ஈடுபடுகின்றனரா? இவர்களில் உண்மையில் மைதானத்தில் ஆர்வமுடன் செயலாற்றக் கூடியவர்கள் எத்தனைபேர்? எனக் கேள்வி எழுப்புகின்றார், ஓய்வுபெற்ற உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளரான திரு. நாகமணி. இவரது ஆதங்கத்திலும் நியாயம் உண்டு. இவர் கடமையிலிருந்தபோது, உடற்கல்விப் பயிலுனர் ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை ஒன்று நடைபெற்றது. அப்போது 600 பேரளவில் சமூகமளித்திருந்தும், தகுதியுள்ளவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவரே என இவர் கூறுகிறார். ஆனால் இந்நேர்முகப்பரீட்சையில், தகுதியற்றோராக கணிக்கப்பட்ட பலர், பின்கதவால் உள் நுழைந்து உடற்கல்வி ஆசிரியர்களாக இன்று பணியாற்றுகின்றனர். இவர்கள் எப்படித் தரமான போட்டியாளர்களை உருவாக்கப் போகின்றனர் என அவர் வினா எழுப்புகின்றார்.

ஒப்புக்குச் சப்பாணியாக, ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து, உடற்கல்வி போதனை பெற்று வெளிவருபவரெல்லாம் தரமான ஆசிரியர்களாக மிளிர முடியுமா என்பது இன்னொரு கேள்வி. பயிற்சிக் காலத்தில் உடற்கல்விக்கென ஒதுக்கப்படும் காலம் போதுமானதா? பயிற்சி முறைகள் திருப்திகரமானதா என்பவற்றுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.

கல்வி அமைச்சினால் யாழ் மாவட்டத்துக்கென ஒதுக்கீடு செய்யப்படும் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா, ஏறத்தாழ ஐந்நூறு பாடசாலைகளுக்கிடையில் விளையாட்டுத் துறைக்கென பங்கிடப்படுகின்றது. ஒரு பாடசாலைக்கு வருடாந்தம் இருநூற்றெழுபது ரூபா, விளையாட்டுத் துறையை வளர்க்க எவ்வகையிலும் போதுமானதல்ல என்பது வெளிப்படை. இதே நிலையே உபகரணங்கள் வழங்கலிலும் காணப்படுகின்றது. பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் எடுத்து வரப்படும்போது, பலம் வாய்ந்த, பாடசாலை அபிவிருத்திச்சபைகளைக் கொண்ட பாடசாலைகள் முந்திக்கொண்டு அவற்றுக்கான பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்கின்றன. சிறிய பாடசாலைகளும் கிராமப்புறப் பாடசாலைகளும் இவ்விடயத்தில் செயலற்றுப் போகின்றன.

யாழ். கல்வித் திணைக்களத்தினால், பல விளையாட்டுக்கள் அண்மைக் காலங்களில் பாடசாலைகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. மைதான விளையாட்டுக்களோடு, உள்ளக விளையாட்டுக்களும் ஆரம்பிக்கப்பட்டிருப்பது

## இன்றைய நிலை ஓர் நோக்கு

வரவேற்கப்படக் கூடிய விடயமாகும், இதே போலவே, பாரம்பரிய விளையாட்டுக்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவை, விடுதலைப் புலிகள் மாணவரமைப்பு என்பவற்றின் உதவியுடன் புத்தூட்டம் பெறுகின்றன. இவ் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில், 15 வயதிற்குட்பட்ட ஆண்கள், பெண்களுக்கான தாச்சிப் போட்டிகள் நடாத்தப்பட உள்ளன. இவ் அறிமுகம் போலவே, தமிழரின் ஏனைய பாரம்பரிய விளையாட்டுக்களும் பரந்த அளவில் மாணவர்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டியதும் முக்கியமாகும்

இவ்வாண்டு, உடற்கல்வித்துறைக்கென ஆறு ஆசிரிய ஆலோசகர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. யாழ். கல்வித் திணைக்களம் இந்த நிலையிலாவது விழித்தெழுந்து செயலாற்றுவது மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதாக அமையலாம்.

> விளையாட்டு ஓர் சர்வதேச மொழி. சிலருக்கு வாழ்வில் பொழுதுபோக்கு, பலருக்கு ஆரோக்கியம். சகிப்புத்தன்மையை கற்றுத்தருகிறது. சமூக இணைப்பை வலியுறுத்தும் இவ்வூடகம், எமது மண்ணில் இன்னும் வளர வேண்டும். நாளை மலரப் போகும் எம்தேசத்தின் விளையாட்டுத் துறை கதவுகளினூடு, நவீன உலகின் சவால்களை சமாளிக்க தயாராக வேண்டும்,

அனேகமான பாடசாலைகளுக்கு போட்டிகள் ஆரம்பிக்கப்படும் அண்மைக் காலங்கள் தான் பயிற்சிக் காலங்களாகின்றன. போட்டிகள் மாணவரது திறனை இனங்காண பயன்படுவதிலும், இப்போட்டிகளே பயிற்சிக்காக ஒதுக்கப்படுவதும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல. பயிற்சித் தளங்கள் ஆரம்பத்தில் தொடங்கப்பட்டு போட்டிகளில் உச்ச நிலையை அடைய வேண்டியதே வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும்,

குடாநாட்டிலுள்ள சில பாடசாலைகள் போட்டிகளுக்கென அணிகளைத் தயார் செய்வதிலும் குறிப்பிட்ட அணி வீரர்களை மட்டும் பயிற்சிக்கு எடுத்துக் கொள்வதிலும் மட்டுமே கவனம் செலுத்துகின்றன: சகல மாணவர்களுக்கும் உடற்கல்வியை போதியளவு அளிப்பதில் பின்நின்று பாடசாலைப் பெயரை மட்டும் வளர்க்குமுகமாக அணிவீரர்களுக்கு மட்டும் ஊக்கல் அளிப்பதும் ஆரோக்கியமானதல்ல என்பதை இப்பாட சாலைகள் உணர வேண்டும்.

விளையாட்டு உபகரணங்களில் பற்றாக்குறை சில விளையாட்டுத் துறைகளை அருகிப் போகவும் செய்துள்ளது முன்பு இலங்கை ரீதியாக யாழ் மாவட்ட வீரர்கள் பங்குபற்றிய ஹொக்கி போன்ற விளையாட்டுக்களே இன்று இந்நிலையை அடைந்துள்ளன. இந்நிலை தொடருமானால் வருங்காலத்தில் இது போன்ற விளையாட்டுக்களைப் பயிற்சியளிக்கக் கூடியவர்களையே தேடியலைய வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறுபவர்களில் விளையாட்டுத் துறையில் ஆர்வமும் திறமையுமுள்ளவர்கள் தொழிலொன்றைத் தேடுவதிலோ உயர் கல்வியைத் தொடருவதாலோ தங்கள் ஆர்வத்தை இழந்து விடுகிறார்கள். இருப்பினும் குடாநாட்டைப் பொறுத்தவரையில் உயர்கல்வியை பல்கலைக் கழகங்களில் பெறுவோருக்கு பல்கலைக்கழக விளையாட்டுத் துறையும், ஏனையவர்களுக்கு விளையாட்டுக் கழகங்களும் உதவி வருவதை மறுக்கமுடியாது.

யாழ் பல்கலைக்கழகம் உடற்கல்வித் துறைக்கென தனியான பிரிவொன்றை அமைந்திருப்பதன் மூலம் விளையாட்டுப் பயிற்சிகளை அளித்து வருகின்றது. 16 விளையாட்டுக்களை உடற்கல்வித் துறை மாணவர்களுக்கு போதித்து வருகின்றது. உடற்கல்வித் துறையினரதும், மாணவர்களினதும் விடா முயற்சிகளினால் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பல்துறையிலும் வல்லுனர் பட்டங்களை யாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்து பெற்று வருகிறது.

யாழ் பல்கலைக் கழக மட்டத்தில் விளையாட்டுத் துறையிலான ஆர்வநிலை பற்றி பல்கலைக் கழக உடற்கல்வித் துறை இயக்குனர் திரு. தியாகராஜா கூறுகையில் திறமை இருக்கிறது. ஆனால் இன்னும் தரத்தை விருத்தி செய்ய இன்றைய சூழ்நிலைகள், உணவு வசதிகள், மனநெருக்குதல்கள் தடைக் கற்களாகின்றன. பல்கலைக் கழகத்தில் திறமை இருந்தும் பொருளாதார நிலையால் பின்தங்கிய மாணவர்களுக்கு உப வேந்தர் நிதியம் உதவி வருகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் முக்கிய குறிக்கோளாக கல்வியைக் கொள்வதால் விளையாட்டுத் துறையை இரண்டாம் பட்சமாக கருதிக் கொள்வது தவிர்க்க முடியாததாகிறது என அவர் கூறினார்.

பல்கலைக் கழகம் நீச்சற் தடாகம் ஒன்றையும், உடற்பயிற்சிகளுக்கென ஜிம்னாசியம் ஒன்றையும் அமைக்க உத்தேசித்து வருகிறது. யாழ் மாவட்டத்திற்கென இது காலவரை நீச்சற் தடாகமொன்று அமைக்கப்படாதது இங்கு குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுக் கழகங்கள் கூடியவரை தம் சொந்த முயற்சிகளிலே தங்கியுள்ளன. விளையாட்டுக் கழகங்களுக்கான செயலகத்தினால் ஒதுக்கப்படும் வருடாந்த நிதி ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் மூவாயிரம் ரூபாயாக அமைகின்றது. இந்நிதியிலிருந்து ஒவ்வொரு பிரிவிலுமுள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் பூரண பயனைப் பெறமுடியாது. இதேபோலவே ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் ஆகக் குறைந்தது இரண்டு பயிற்சி நிலையங்களாவது அமைக்கப்பட வேண்டும். ஆனால் விளையாட்டுத்துறை அதிகாரிகள் நியமிப்பில் அரசின் அசமந்தப் போக்கு காரணமாக சரியான முறையில் இவற்றைச் செயற்படுத்த முடியாதிருப்பதாக தெரிவிக்கின்றார் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திரு. கனகராஜா. அரசிடம் பலமுறை சுட்டிக்காட்டியும் பயனில்லாமல் இருப்பதாக இவர் மேலும் கூறுகிறார். இன்று யாழ் மாவட்டத்திலுள்ள பதினாறு உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குமாக நான்கு விளையாட்டுத்துறை அதிகாரிகளே கடமையிலுள்ளனர். ஒவ்வொரு அதிகாரியும் குறைந்தது இரண்டு முதல் நான்கு பிரிவுகளைக் கவனிக்க வேண்டிய நிலையில் முழுமையான பயிற்றுவித்தலையோ நிர்வாக ஒருங்கமைப்பையோ எதிர்பார்க்க முடியாததாகின்றது. அரச அதிபரும் விளையாட்டு ஆர்வலர்களும், எடுத்த முயற்சிகளினால் இம்முறை, இரண்டு லட்ச ரூபா யாழ்மாவட்ட விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

**ரகுராம்**

(23 - ஆம் பக்கம் பார்க்க)

# சேரன்
## பல்பொருள் வாணிபம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

கண்டி வீதி,
கொடிகாமம்.

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

5 ஆம் ஆண்டில் ஈழநாதம் மலர எங்கள் வாழ்த்துக்கள்

# சேரன்
விவசாய இரசாயன வாணிபம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

# விக்ரர்
இயந்திர உதிரிப்பாக வாணிபம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

# எழினி
புடவை வாணிபம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணன்
விற்பனை நிலையம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8570)

நான்காம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

ஈழநாதம் 19-02-1994



# கலை இன்பம்

இளையவன்

கலையின்பமே நிலையின்பமாம் என்பது தமிழ் மக்களிடையே நிலவும் ஒரு வழக்கு மொழியாகும். வாழ்க்கையில் இயல்பாகவே பிணிப்புற்று நின்று இன்பம் தருவது கலை. இயற்கையைக் கூர்ந்து ஆய்ந்து அறியும் மக்களிடையே கலை உணர்வு மிகுதியாய்வளர்வது இயல்பு. கலைகளும் தொழில்களும் ஒன்றோடொன்று தழுவியுள்ளவை என்பதும், கலைகள்உயிரறிவின் செயல்களுக்கு ஊற்று மூலம்என்பதும், கலைகள்சிறப்புற்று விளங்கும்ஒரு நாட்டில் தொழில்களும் மாட்சிமைப்படும் என்பதும், இங்கு குறிப்பிடத்தக்கதே. இயற்கையின் இயல்புகள் கலைகளின் மூலம் வெளிப்பட, அக்கலைகளில் காட்டப்படும் குறிப்புகளின் அடிப்படையில் மக்கள் கலை நுட்பம் பொருந்திய தொழில்களில் ஈடுபடுவார்கள் எனலாம்.

கலைகளைப் பொதுவாக இரண்டு வகையிற் பிரிக்கலாம். அறிவினாலேயே தெரிந்து பழகி உணர்ந்து இன்புறத்தக்கவை ஒரு வகை அறிவினால் உணர்ந்து இன்புறத்தக்கவையாக இருப்பதுடன், உடம்பு முயற்சியினாலும் தொழில் செய்யத்தக்கவை இன்னொருவகை. இவ்வாறு அறிவின் பத்துக்கு மட்டும் ஏதுவான கலைகளை உணர்வுக் கலை என்றும் (Arts) தொழிலுக்கும் ஏதுவான கலைகளை பொருட்கலை என்றும் (Science) கூறுவார்கள். இலக்கியம், இசை போன்றன உணர்வுக் கலைக்கு உதாரணமாகலாம். அதேபோல் நிலம், நீர், காற்று, தீ, வானம் எனவரும் ஐந்து முதற் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் செய்கின்ற தொழில்களும் பொருட்கலைக்கு உதாரணமாக லாம்.

இனி இவ் இருவகைக் கலைகளும் கூட தமக்குள்ளே மேலும் இரு உபபிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். முற்றிலும் உணர்வு நிலையிலேயே உணரப்படும் ஆத்மீகம் மற்றும் மெய்ப்பொருள் பற்றிய கலைகள் மெய்யுணர்வுக் கலைகள் எனவும், ஓவியம், சிற்பம், இசை போன்ற உணர்வின்பம் தரும் கலைகள் இன்ப உணர்வுக் கலைகள் எனவும் கூறப்படுகின்றது. அதேபோல பொருட்கலையும் கூட ஐந்து முதற் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிகள் என்றும், அவற்றை வாழ்க்கைக்கு பயன்படுத்தும் முறைகள் என்றும் இரு வகையாகப் பாகுபடுத்தப்படும். இவ்வாறாக கலைகள் நான்கு பெரும் பிரிவுகளாக பகுக்கப்பட்டாலும் கூட பின்னும் கூர்மையாகப் பகுக்கப்பட்டு அறுபத்து நான்கு கலைகளாக முன்னோரால் காணப்பட்டன. இந்த அறுபத்து நான்கு கலைகளிலும்கூட ஒவ்வொன்றும் தனித் தனி அறுபத்து நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருப்பது இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது. ஆக கலையின் ஆழம் என்பதும் கணக்கிடற்பாலது.

கலை வெளிப்பாடுகளுக்கு மொழி ஒரு துணையாகும். மொழி என்பது வெறுமனே உணர்ச்சிகளின் வெளிப்பாடு மட்டுமன்று. மொழி என்பது கருத்தைப் பிறருக்கு விளக்குவது மட்டுமன்றி அக் கருத்துடன் கூடிய உணர்ச்சியையும் அது நன்கு விளக்கக்கூடியதாக - ஆற்றலுடையதாக - இருக்க வேண்டும். அப்போதுதான் மொழியானது அழகு பெறுகின்றது. தமிழ் மொழியை பொறுத்தவரையில், நம் முன்னோர்களுடைய உணர்வுகளை எல்லாம் பிரதிபலிக்கக்கூடிய வகையில் அது செழுமைப் படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். உணர்ச்சியுடன் கூடிய கருத்தை சொல் வாயிலாக இயக்குவதை இயற்றமிழ் என்றும், இசை வாயிலாக வெளியிடுவதை இசைத் தமிழ் என்றும், நடிப்பு வாயிலாக இயக்குவதை நாடகத் தமிழ் என்றும் கூறப்படும். இவ்வாறாக சொல்லும், இசையும் நடிப்பும் இணைந்ததே முத்தமிழ் எனப்படுகின்றது. அதாவது ஓசையோடு இசைந்து செல்லும் கருத்தின் இயக்கம் என்பதே மொழியாகின்றது. ''மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பி கருத்தால் இயக்கி'' என்று சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரை எழுதிய அடியாருக்கு நல்லார் குறிப்பிடுவது இதனையே எனலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்து குழந்தைப் பருவத்தின் தாலாட்டுக்களிலிருந்து மரண வீட்டின் ஒப்பாரி வரையில் பல்வேறு பாட்டுக்கள் இருப்பது தெரிந்ததே. குழந்தைகள் பாடும் ஊஞ்சற்பாட்டு தொட்டு பந்து விளையாடுதல் முதல் அனைத்து விளையாட்டுக்களுக்கும் பாடல்கள் இருந்திருக்கின்றன. கந்துக வரிஎன இவை முன்னாளில் அழைக்கப்பட்டுள்ளன. இவை தவிர திருமணம், போர் முதலிய ஒவ்வொரு சிறப்புச் செய்கைக்கும் பாட்டுக்கள் அவர்களிடையே புழக்கத்தில் இருந்திருக்கின்றன. மங்கல வாழ்த்துப் பாடல், போருக்கு மக்களைக் கூவி அழைக்கும் செருப்பறை, உலக்கை கொண்டு குற்றும் தொழிலின்போது பாடப்படும் வள்ளைப்பாட்டு என்பன மட்டுமன்றி ஆறுகள், கடற்கரைகள், முதலிய இயற்கை இடங்களைப் பார்த்து மகிழ்ச்சி உந்த அவைபற்றிப் பாடும் 'ஆற்று வரி' 'கானல்வரி' எனப் பலவாறான பாட்டுகள் தமிழ் மக்களிடையே சங்ககாலம் தொட்டு வழக்கத்தில் இருந்துள்ளன. இதனையே ''பாடலோர்ந்ததும் நாடக வியந்தும்'' என்று பட்டினப்பாலை என்னும் நூல் எடுத்தியம்புகின்றது. இதன் மூலம் பண்டைய தமிழ் மக்களிடையே இருந்த ஆடல், பாடல் முதலாம் கலை உணர்வுகள் வெளிப்படுவதுடன் அவர்களது வாழ்க்கை மகிழ்ச்சியும், மாட்சியும் வாய்ந்ததாய் அமைந்திருந்ததையும் உணர முடிகின்றது.

மேலும் இசை வெறும் உள்ளக் கிளர்ச்சிக்காக மட்டும் பயன்படுத்தப் படவில்லை என்பதையும் சங்ககாலப் பாடல்களின் அடிகள் மூலம் அறியக் கிடக்கிறது. இசை என்னும் சொல்க்கு வசப்படுத்துவது அல்லது இசைவிப்பது என்றும் பொருள் கொள்ளப் படலாம். மரம், செடி, கொடி முதலாம் ஓரறிவு உயிர்கள் கூட இசையால் வசப்படும் என்பது... ''புதலும் வரிவண்டு ஊத வாய் நெகிழ்ந்தனவே'' என்னும் குறுந்தொகைதொடரின் மூலம் உணர்த்தப்படுகின்றது. அதாவது வரிவண்டுகளின் ரீங்காரம் கேட்டு பற்றைப் புதர்களில் இருந்து மொட்டுகள்கட்டு நெகிழ்ந்துமலர்ந்தன என்றுசங்ககால நூலான குறுந்தொகை செப்புகின்றது. இன்னும் அகத்திய முனிவர் ஒரு சமயம் இசை பாடியபோது பொதிய மலையில் கல் உருகியதாக தொல்காப்பியப் பாயிரவுரையில் வரும் குறிப்பு ஒன்றின் மூலம் தெரியவருகின்றது.

இவ்வாறு அஃறிணைப் பொருட்களையும்கூட இசையச் செய்யும் இசைக்கலையின் துணை கொண்டு மனிதன் எவ்வாறு இயற்கையை வென்றான் என்பதற்கு திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலில் வரும் ஒரு குறிப்பு சான்று பகரும். மலைப் புறங்களில் விளையும் தினைப் பயிருக்கு காவல் இருக்கும் பெண்கள் இசைக்கும் இசையில் மயங்கி கதிருண்ண வந்த கிளிகளும், குருவிகளும் செயலிழந்து போகுமாம் என்று அக் குறிப்புக் கூறியது.

> "சாந்தம் எறிந்தழுத சாரற் சிறுதினைச்
> சாந்தம் எறிந்த இதண் மிசைச் — சாந்தம்
> கமழக் கிளிகடியும் காரிமயிலன்னாள்
> இமிழக் கிளி எழா ஆர்த்து''

என்பது திணைமாலை நூற்றம்பதில் வரும் அப்பாடல் ஆகும்.

யானைகள்கூட இவ்வாறு இசைக்கு மயங்கும் என்பதை அகநானூற்று செய்யுளில் வரும்''பாடுபெற்றெய்யென மறம்புகல் மழகளிறு உறங்கும்'' என்னும் வரிகள் தெரிவிக்கின்றன. மேலும் முல்லை நிலங்களில் மாடு மேய்க்கும் இடையர்கள் தமது குழலிசையினாலேயே தமது ஆனினங்களை அழைத்துக் கொள்வதை முல்லைக்கலி என்னும் நூலில் வரும்.

> ''ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்
> வழூஉச் சொற் கோவலர் தத்தமது இனநிரை
> பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்
> புலத்தார்''

என்னும் அடிகள் தெளிவு படுத்துகின்றன. இவ்வாறாக அனைத்து உயிர்களையும் வசைப்படுத்தும் இசையானது வழிப்பறியில் ஈடுபடும் கொலைக்கும் அஞ்சாத கொடுமனம் கொண்ட பாலைநிலக் கள்வர்களையும் கூட மயங்க வைத்துவிடும் வலிமை பெற்றது. இது

> ''ஆறலை கள்வர் படைவிட அருளின்
> மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை''

(24 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் இலக்கியத்தில் ஈழத்து தனித்துவம்

## - சிலகுறிப்புகள்

**20-ம்** நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இலக்கியத்தில் வசனநடை முன் கொண்டு வரப்பட்டது. கவிதா ஆக்கங்கள் குறையலாயின.

1942-ல் அ. செ. முருகானந்தம் மாமூல் காதல் கதைகளை விலக்கி எழுத்தாளர்கள் வறுமையையும் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கும் இலக்கியத்தை படைக்க முன்வர வேண்டும் என்று வெளிப்படையாகவே கூறினார். இக் கருத்தை வலியுறுத்துமாப் போல், தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது மறுமலர்ச்சி எழுத்தாளர்களை உண்மை நிலையை எடுத்தியம்பும் எழுத்தை முன்வைக்கும்படி கேட்டுக்கொண்டார். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதற் தமிழ் பேராசிரியரான விபுலானந்த அடிகள். 1945-ல் எமது எழுத்தாளர்களுக்கு போதிய கள வசதிகள் இல்லாமல் இருந்ததால் 'மறுமலர்ச்சி' எனும் இதழ் வெளிவரத் தொடங்கி மூன்று ஆண்டுகளுள் நிறுத்தப்பட்டது.

'இலங்கை சுதந்திர' நாடான பின் உள்ளுக்குள்ளேயே கனன்று கொண்டிருந்த சக்திகள் வெளியாகப் பரிணமிக்க தொடங்கின. இதன் விளைவே 1956 -ல்நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டம். இதனால் இலங்கை வரலாற்றில் முன்னெப்பொழுதும் ஏற்பட்டிராத நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டார்கள். இவர்கள் தாங்களும் அனைத்து இலங்கை சமுதாயத்தின் புறந்தள்ளமுடியாத மற்றைய சமூகங்களை போன்ற ஓர் அங்கம் என்பதை நிரூபிக்க வேண்டியிருந்தது. இதனால் இந் நாட்டின் அரசியல் பொருளாதார வாழ்க்கையில் தங்கள் சமூகத்தின் நிலைப்பாட்டை மேலும், மேலும் உணரத் தொடங்கினர்.

ஈழத்து சமுதாயத்தில் தாம் புறந்தள்ளப்பட்ட நிலையில் இருப்பதை இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் சகித்துக் கொள்ளவில்லை. கிளர்ந்தெழுந்தார்கள் அரசியல்வாதிகள் தவறியதை போலல்லாது தாம் வென்று கொள்ள முயற்சித்தார்கள். பொதுவான சந்தேகங்களை நீக்கி சமுதாயத்தின் சகல பிரிவுகளிலும் புரிந்துணர்வை ஏற்படுத்த முன்வந்தார்கள். இலங்கைச் சாதாரண மனிதனின் நிலைப்பாட்டினை

முக்கிய அடித்தளமாக வைத்து, பாகுபாட்டை, சுரண்டலை, வறுமையை, இவற்றின் வேர்களை மக்களுக்கு விளக்க முற்பட்டார்கள். இம் முயற்சியில் எம் எழுத்தாளர்கள் வெற்றிகரமாகவே தமதுதனித்துவத்தை பேணிக் கொண்டார்கள் எனலாம்.

இலக்கியத்தில் ஈழத்து தனித்துவத்தை சிந்திக்கும் போது, எமது இலக்கிய கர்த்தாக்கள் தென்னகத்து எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது தமிழ்ச் சிறுகதைகளில் ஒரு தசாப்தம் பின் தங்கி உள்ளார்கள் என அங்கிருந்து வந்திருந்த ஒரு பத்திரிகையாளர் (பகீரதன்) கருத்து ஏற்படுத்திய சர்ச்சையை நினைவு கூர்வது பொருத்தமே. இக்கருத்தினால்ஈழத்து எழுத்தாளர்கள் கோபமடைந்தது மட்டுமல்லாமல் வேறு பலரின் கவனமும் இலங்கைத் தமிழ் எழுத்துக்கள் பக்கம் திரும்பியது.

எமது பேச்சுநடையை கையாளும்போது அவ்எழுத்துக்களை புரிந்து கொள்வது சிரமம் என தென்னகத்தில் உணரப்பட்டது உண்மையே. எனினும் யதார்த்த பூர்வமான பாத்திர சித்திரிப்புக்கு இவ்வுரையாடல்களை அப்படியே எழுதினால் மட்டுமே, உள்ளார்த்தங்களையும் பொருத்தப்பாட்டையும் பரிணமிக்க வைத்து பல்வகை பழக்கவழக்கங்களை வெளிக் கொண்டு வரலாம் என தமது தனித்துவத்தை பெருமளவில் பேணிவந்தனர் எமது எழுத்தாளர்கள்.

இப்படியான சவால்கள், தேடுதல்கள், குத்துக்கரணங்கள் எல்லாம் தற்கால இலங்கைத்தமிழ் இலக்கியத்தை எல்லோரும் சிரத்தையுடன் அணுகியதை உணர்த்தியது.

சமீப காலத்திய புத்துணர்ச்சியும், இலங்கை தமிழ் பேசும் மக்களிடையே பண்பாடு மற்றும் வரலாறுகளில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சியும் சேர்ந்து, தேசிய இலக்கியம்மண்வாசனையுடன்திகழ்வதற்குவழிகோலியுள்ளது.

**க. சி. சந்திரன்**

தமிழ் திறனாய்வைப் பொறுத்தவரைஅதற்கு தென்னகத்தைவிட இலங்கையில் கூடிய கருத்துச்செறிவும் பண்புநலனும்- dignity-உண்டு

இலங்கை தமிழ் எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை பிரசுரிப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். எனினும் அவர்கள் தமது சாதனைகளை- தனித்துவமான ஈழத்து தமிழ் இலக்கியத்தை யிட்டு திருப்தி ஏன் பெருமையே கொள்ளலாம். தேசிய பண்பாட்டில் இதை ஏற்றுக் கொண்டுள்ளது நியாயமே.

தமிழ் இலக்கியத்தில் தென்னகத்தாரின் முன்னைய மேன்நிலைமை கருத்துத் பதிவாகஈழத்துஇலக்கியம்நன்கு மதிக்கப்படுவதோடு புகழ் பெறவும் முடிகிறது.

ஊர்க்கோடியிலிருந்து உலகின் முடுக்கெல்லாம் நிகழும்
புதினங்களை சிறப்பாக நீ எடுத்து இயம்புவாய்!

இனியும் உன்சேவை **5-ம்** ஆண்டில் சிறக்க

வாழ்த்துகின்றோம்.

## ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

## ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்

யாழ்ப்பாணம்.

(சி - 8552)

திக்கெட்டும் செய்திகளை சுவையாக நல்கிடுவாய்
ஈழம்எனும்தேசத்திலேதேசியமாய்வளர்ந்திடுவாய்!

என வாழ்த்துகின்றார்கள்

## நியூ விமாகி

உங்கள் சகல கட்டிடங்களையும் அலங்கரிக்கத் தேவையான சகல வகை பெயின்ட் அயிட்டங்களையும் (Paint items) பெற்றிட விரைந்து

நாடுங்கள்!

★ டியூலக்ஸ் எமெல்சன் (Dulux Emulsion Water Paint)
★ டியூலக்ஸ் எனாமல் (Dulux Enamel Oil Paint)
★ டியூக்கோ — ஸ்பிறேபெயின்ட் (Duco Spray Paint)
★ வானிஸ் (Varnish)

மற்றும் காட்போட் சீட், பேபி ஸ்பொன்ஞ், பொமிக்கா சீட், சைக்கிள் உதிரிப்பாகங்களை நீங்கள்

தெரிவு செய்ய நாடும் இடம்

## நியூ விமாகி
## NEW VEMAKI

27/8 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8590)

வைகறையில் துயில் எழுப்பும்
சேவலென

தாயகத்தின் விடியலுக்காய்
குரல் கொடுக்கும்

## "ஈழநாதமே"

உன் பணி தொடர
வாழ்த்துகின்றோம்.

## பொஸ்கோ

இல. 3, மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்.

(சி-8619)




# தாகம்

## கே.ஆர்.டேவிட்

அதிகாலை நாலரைமணி-

கடுமையான பனி. திரள்திரளான பனிப்புகார், உடலைச் சுருட்டிப் பற்களை மோதவைக்கின்ற குளிர். புல் பூண்டுகள் பனித்துளியில் நனைந்து வளைந்து போய் நிற்கின்றன.

இந்தக் குளிருக்குள், எருக்கலை மரத்தடியில் புல்பூண்டுக்குள் தனது உடலைமறைத்து முகம்குப்புறப்படுத்திருக்கின்றான் சுரேஷ்.

வலது முழங்காலில் கடுமையாக எரிவதிலிருந்து தனது முழங்காலில் சூடுபட்டுவிட்டதென்பதைச் சுரேஷ் உணர்கிறான். ஆனால், தொடர்ந்தும் இராணுவத்தினர் தாக்குதல் செய்யக்கூடும் என்ற எண்ணத்தில் ஆடாமல் அசையாமல் படுத்திருக்கின்றான்.

கிட்டத்தட்ட பதினைந்து ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட முட்டை வடிவிலான இராணுவமுகாம். இராணுவ முகாமின் தென்மேற்கு மூலைப்பக்கமாக இருநூறடி தூரத்தில் சுரேஷ் படுத்திருக்கின்றான். வடக்குப் பக்கமாக ஒரு காவலரணும், மேற்குப் பக்கமாக ஒரு காவலரணும், தென்மேற்குப் பக்கமாக ஒரு காவலரணும் அமைந்திருக்கின்றன. இராணுவமுகாமைச் சுற்றி எத்தனையோ இராணுவக் காவலரண்கள் இருக்கின்றன. ஆனால் அந்த மூன்று காவலரண்களில் ஒன்றிலிருந்துதான் சூடுவந்திருக்க வேண்டுமென்பதை அவன் உணர்கிறான்.

முழங்காலில் எரிவும், வலிப்பும் அதிகரித்துக் கொண்டு வருகின்றது... சுரேஷால் அசைய முடியவில்லை...

இந்த நேரத்தில் கூட காவலரணில் இருந்த இராணுவத்தினன் மிகவும் அவதானமாகவே இருந்திருக்கின்றான்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது... பத்து நிமிடங்கள் சென்றிருக்கும், தலையை மெதுவாக உயர்த்தி, வலது பக்கம் திரும்பி இராணுவ முகாமைப் பார்க்கின்றான் சுரேஷ். இராணுவ முகாமிலோ, காவலரண்களிலோ எந்தக் கலவரமும் இல்லை.

இராணுவத்தினரும் தந்திரம் புரிந்தவர்கள். தாக்குதல் நடத்திவிட்டுப் பொறுத்திருந்துபார்ப்பார்கள், சுரேஷ் இராணுவ நடவடிக்கைகளை நன்கு புரிந்தவன்.

மெதுவாக நகர முயற்சிக்கின்றான். இடதுகால் மட்டும் இயங்குகின்றது... வலது காலை நகர்த்த முடியாமல் இருக்கின்றது.

எரிவு .. வலிப்பு... நோவு..

வலது கையால் சூடுபட்ட இடத்தைத் தடவுகின்றான். நுங்குக் கண்தசைக்குள் விரல் புதைவது போன்று குண்டுபட்ட முழங்கால் பகுதியில் அவனது சுட்டுவிரல் புதைகின்றது .. காயப்பட்ட பகுதியைத் தடவுகின்றான்... கசாப்புக்கடை மரக்குற்றிமீது நொருங்கியிருக்கும் எலும்புத்துண்டுகள் போல நொருங்கிய எலும்புகள் கைகளில் தட்டுப்படுவதைச் சுரேஷ் உணர்கின்றான்...

இப்படியொரு பெரியபாதிப்புத் தனக்கு ஏற்படுமென்று சுரேஷ் எதிர்பார்க்கவில்லை .. பறிக்குள் நண்டு துடிப்பதைப்போல் சுரேஷின் சிந்தனை துடிக்கின்றது.

கடும்குளிர்... இருந்தும் அவனது குரல்வளை காய்ந்து வரண்டுவிட்டது. முகம் குப்புறப்படுக்கின்றான்.

காயம்பட்ட முழங்கால் பகுதி, புதிய பிளேட்டினால் கீறி மிளகாய்த்தூள் அடைந்ததுபோல் எரிகின்றது... அதைமீறிய வலிப்பு .. நோவு ..

வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்தது போல் கடந்த நான்கு நாட்களாக மிகவும் கஷ்டப்பட்டு இராணுவ முகாமை வேவு பார்த்துச் சேகரித்த விடயங்கள்... கடந்த நான்கு நாட்களையும் விட இன்று சுரேஷ் மிகவும் உற்சாகமாகவும், சந்தோஷமாகவும் இருந்தான். ஏனென்றால் இன்றுதான் அவன் பூரணமான தகவல்களைப் பெற்றிருந்தான்... எதிர்பாராத சம்பவம் நடந்துவிட்டது.

சுரேஷ்,

இந்த இராணுவ முகாமை வேவு பார்க்க வந்தவொரு போராளி!

'வேவு பார்த்துச் சேகரித்த விபரங்களை எப்படியாவது உரிய இடத்தில் சேர்த்துவிட வேண்டும் .' அவனது மனம் இப்படி எண்ணுகின்றது.

தலையை நிமிர்த்தி, இடதுகாலால் நிலத்தை உதைந்து, புற்களையும் செடிகளையும் பற்றிப்பிடித்து அங்குலமங்குலமாக முன்னேறுகின்றான்... சிதறிப்போன முழங்கால் பகுதித் தோல்புரையினுள் புற்கள் கொழுவி இழுக்கின்றன...

எரிவு வலிப்பு நோவு இவைகளுக்கு மேலால் விடுதலை உணர்வால் ஏற்பட்ட ஆத்மாவின் தாகம்! .. ஆன்மீக பலம் ..

இன்னும் இருநூற்றைம்பது யார் வரை புழுவைப் போல் ஊர்ந்து... அரைமைல் வரை நடந்தால்த்தான் குடிமனையை வந்தடையலாம்... சென்றுவிடமுடியுமென்றுதான் சுரேஷ் நம்புகிறான்,

சென்றவருடம்-

இ த போன்று ஒரு இராணுவ முகாமுக்கு வேவு பார்ப்பதற்காகச் சுரேஷ் சென்றிருந்தான். மிதிவெடியில் இதே கால் காயப்பட்டது. வலது காலை மடித்து, வலதுகையால் தூக்கிப் பிடித்தபடி... இடதுகாலால் தத்தித் தத்தி இருப்பிடத்தை வந்தடைந்தான். கிட்டத்தட்ட முக்கால் மைல் வரை இரத்தம் சொட்டச் சொட்ட துணிவோடு முன்னேறியவன் சுரேஷ் !

அதே மனப்பலம்... இப்போதும்... அங்குலமங்குலமாக முன்னேறுகின்றான்.

இப்போது நாலரை மணி.

அரைமணித்தியாலத்துக்கு முன்பு சுரேஷ் இராணுவ முகாமுக்குள் படுத்திருந்தான்.

கடந்த மார்கழி மாதம் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தை அகற்றுவதற்காக இராணுவத்தினர் ஒரு வாய்க்கால் வெட்டியிருந்தனர். இராணுவ முகாமுக்குள் ஆரம்பிக்கப்பட்ட வாய்க்கால் வெளியேயும் நீண்டிருந்தது இந்த வாய்க்காலுக்குள்தான் சுரேஷ் படுத்திருந்தான்.

சூரிய அஸ்தமனத்தின் பின் தன் இருப்பிடத்திலிருந்து சுரேஷ் புறப்படுவான். இராணுவ முகாம் எல்லையிலிருந்து கிட்டத்தட்ட இரண்டரை மைல்கள்வரை மனித சஞ்சாரமற்ற சூனியப் பிரதேசமாக அமைந்திருந்தது. இப்பகுதியில் குறிப்பிட்ட இடம் வரை நடந்து வந்து இராணுவத்தினரின் பார்வைக்கு எட்டக்கூடிய தூரத்தில் நிலத்தில் முகம் குப்புறப்படுத்து, சிறுகச் சிறுக ஊர்ந்துதான் முகாமுக்குள் வருவான். ஒவ்வொரு அங்குலத்தையும் மிகவும் அவதானத்துடனேயே தாண்டவேண்டும்...ஏனென்றால் இராணுவத்தினர், தங்கள் முகாம்களைச் சுற்றி மிதிவெடிகள் புதைத்து வைத்திருப்பார்கள்.

அதிகாலை நான்கு மணிவரை முகாமுக்குள் இருந்து சகல நடவடிக்கைகளையும் அவதானிப்பான். அவதானிப்பதென்பது சாதாரண விஷயமல்ல! 'கமறா'வை விட நுணுக்கமாக-உள்ளார்த்தமாகச் சகலதையும் மனப்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மனத்துணிவு வேண்டும்...

ஆரோக்கியமான உடல்நிலை வேண்டும்.

புத்தி நுணுக்கம் வேண்டும்...

கிரகித்து - மனப்பதிவு செய்யும் திறன் வேண்டும்.

இரவு முழுவதும் ஊர்ந்தூர்ந்து சகல விஷயங்களையும் அவதானித்துக்கொண்டு அதிகாலை நான்குமணிக்கு முகாமைவிட்டுப் புறப்படுவான்.

இன்றும் வழமைபோல நான்கு மணிக்குமுகாமிலிருந்து புறப்பட்டான்.

இன்று ஐந்தாவது நாள், அதுவும் இறுதிநாள்.

முதல்நாள் இராணுவ முகாமின் எல்லைவரை வந்து இராணுவ முகாமுக்குள் நுழையக் கூடிய பொருத்தமான இடத்தைத் தேடினான் அரை அடி இடைவெளி கொண்ட பதினைந்து பட்டு முட்கம்பிவேலி, அதையடுத்து முட்கம்பிச் சுருள், அதையடுத்து இன்னொரு முட்கம்பி வேலி. மூன்றையும் தாண்டவேண்டும் சிறுகச் சிறுக இராணுவ முகாமைச் சுற்றி வந்த சுரேஷ் வாய்க்காலைக் கண்டான். முட்கம்பி வேலியின் கீழ் வரி, நிலத்திலிருந்து நாலங்குல இடைவெளியில் அமைந்திருந்தது; வாய்க்கால் கம்பிவேலிக்கும் கீழால் ஒரு அடி ஆழத்தில் அமைந்திருந்தது. உள்நுழைவதற்கு அந்த இடத்தைச் சுரேஷ் தெரிவு செய்து கொண்டான். வாய்க்கால் அமைந்திருக்கும் இடத்தை மனப்பதிவு செய்து கொண்டு சுரேஷ் திரும்பி விட்டான்.

இரண்டாம் நாள் இராணுவ முகாமுக்குள் நுழைந்து இராணுவத்தினரின் முக்கிய நடவடிக்கைகளை அவதானித்தான். காவலரண்களில் உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை அவர்கள் மாறிக் கொள்ளும் நேரம், சாப்பாட்டு நேரம், படுக்கை நேரம்... என்பன.

மூன்றாம் நாள் விபரம் சேகரிக்கத் தொடங்கினான்...

முகாமுக்குள் சகலமண்டபங்களுக்கும் செல்லக் கூடியதான அரைவட்ட வடிவிலானதொரு பாதை, கிழக்குப் பக்கமாகவுள்ள பிரதான வீதியிலிருந்து ஆரம்பிக்கும் இந்தப்பாதை தென்மேற்கு பக்கமாக இருக்கும் இராணுவ முகாம் பொறுப்பாளரின் காரியாலயத்தோடு முடிவடைகின்றது.

பிரதான வாசலில் நான்கடி அகலமான, இரண்டடி ஆழமான, கிட்டத்தட்ட பதினைந்தடி நீளமானதொரு வாய்க்கால், அதை அடுத்து ஒரு காவல் அரண், அதைத் தொடர்ந்து மூன்று காரியாலயங்கள், அடுத்து நீளமான மூன்றுமண்டபங்கள், இந்த மண்டபங்களிலிருந்து கிட்டத்தட்ட முப்பதடி தூரத்தில் சாப்பாட்டு மண்டமும், சமையலறையும்... சகலதுக்கும் எல்லையில் பொறுப்பாளரின் காரியாலயம் .. பகுதிபகுதியாக இன்னும் பல மண்டபங்கள்...

மிகவும் மன நிறைவோடு சுரேஷ் இராணுவமுகாமை விட்டுப் புறப்பட்டான்... கடந்த நான்கு நாட்களும் ஏற்படாத ஆபத்து... இப்போது ஏற்பட்டு விட்டது!

காவலரணில் இருந்த இராணுவத்தினன் ஏதோவொரு அசுகையில் சுட்டான். 'பற்றைக்கெறிய முயலுக்குப் பட்டதுபோல்' இராணுவத்தினனின் சூடு சுரேஷின் முழங்காலில் பட்டு .. முழங்கால் சில்லும், அதோடு சேர்ந்த எலும்புகளும் நொருங்கி... முழங்காலின் கீழ்ப்பகுதி தோலில் தொங்கிக் கொண்டிருக்கின்றது.

'சேகரித்த விடயங்களை உரிய இடத்தில் சேர்த்துவிட வேண்டும்' என்ற மனவைராக்கியத்தோடு புழுவைப்போல் அங்குலமங்குலமாக ஊர்ந்து கொண்டிருந்த சுரேஷினால் பதினைந்து யார்களுக்கு மேலால் ஊர முடியவில்லை!

முகம் குப்புறப் படுக்கிறான்.

எரிவு... நோவு... வலிப்பு... அவனது உடலில் பனித்துளிகளும், வியர்வைத்துளிகளும் சங்கமித்து வழிகின்றது!

முகம் குப்புறப்படுத்திருந்தவன் உடலைப்பக்கவாட்டில் சரித்து... வலது காலை உயர்த்த முயற்சிக்கிறான்... தூக்கமுடியவில்லை... வலது கையால், வலது காலின் தொடைப் பகுதியைப் பிடித்துத் தூக்குகின்றான்...

முழங்காலின் கீழ்ப்பகுதி தோலில் தொங்கி தோல் றப்பராய் இழுபடுகின்றது ..

மனச் சோர்வோடு திரும்பவும் முகம் குப்புறப்படுக்கின்றான். அவனது சிந்தனைச் சிறகுகள் முறிந்து... துடிக்கின்றன!

இந்த இராணுவ முகாம் தகர்க்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டபோது அதன் முதற்படியாக வேவுபார்க்க நால்வர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் சுரேசும் ஒருவன்.

சுரேஷ் வேவு பார்ப்பதில் மிகவும் வல்லவன், பல இராணுவ முகாம்களை வேவுபார்த்திருக்கின்றான். பல ஆபத்துக்களைச் சந்தித்து வெற்றி கண்டிருக்கின்றான்.

சுரேஷ்

இவனது சொந்தப் பெயர் அன்ரனிதாஸ் யாழ்ப்பாண எல்லைக் கடற்கரைப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். வசதியானதுஎன்று கூற முடியாவிட்டாலும் 'வறுமை' இல்லாத குடும்பம். நகரப் பாடசாலை ஒன்றில் பதினோராம் ஆண்டுவரை படித்தவன். கால்பந்து விளையாடுவதில் மிகவும் வல்லவன்.

(24 ம் பக்கம் பார்க்க)

"இக்கதையில் வரும் நாயகனான சுரேஷ் ஒரு கற்பனைப் பாத்திரம். கற்பனைகள் வெறும் சூனியத்திலிருந்து பிறப்பதில்லை. கற்பனையான சுரேஷின் பாத்திரத்தினுள் எத்தனையோ உண்மைப் பாத்திரங்கள் நிறைந்திருக்கின்றன.

போராடுவதும் போராட்டத்தில் மரணத்தை ஏற்றுக் கொள்வதும் போராளிகளுக்குரிய பொதுப்பண்பு. விடுதலைக்காக மகிழ்வுடன் மரணத்தைப் பற்றிக் கொள்வதும், மரணத்தின் பின்பு தனது பிணத்தையும் எதிரிக்கெதிராகத் தயார் செய்வதும் தமிழீழப் போராளிகளுக்கே உரிய தனிப் பண்பு."

# 5-ம் ஆண்டில் ஈழநாதம் வளர வாழ்த்துகிறோம்

கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்

## சீமாட்டி

**ஜவுளி சமுத்திரம்**

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8612)

சாந்தி பிடைவை மாளிகை

DEALERS IN TEXTILES & FANCY GOODS

**157, Modern Market,**
**JAFFNA.**

(சி-8540)

சகல விதமான பிடைவைகளுக்கு
பெயர்பெற்ற ஸ்தாபனம்

சிவநாதன்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

159, நவீன சந்தை,
**யாழ்ப்பாணம்.**

(சி-8537)

**சிறந்த ரகம்!** **நிதான விலை!**

வண்ண வண்ண
டிசைன்களில்

ஜவுளித் தினிசுகளைப் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

## சோதி பிடைவை மாளிகை

14, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
**யாழ்ப்பாணம்.**

கிளை: **இணுவில்** (சி-8535)
சோதி பிடைவை மாளிகை

நதியா ஜுவல்லறி

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
2, கஸ்தூரியார் வீதி,
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு: [illegible] ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லை என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். (சி-8533)

## HAPPY TEXT

TEXTILES & FANCY GOODS

**149, Model Market,**
**JAFFNA.**

(சி-8539)

முகூர்த்தப் பட்டுப் பிடைவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

## ராசி சில்க்ஸ்

70-71, நவீன சந்தை,
**யாழ்ப்பாணம்.**

(சி-8538)

## சோபிதா

**பாடசாலை, அலுவலக உபகரண
விற்பனையாளர்**

363, காங்கேசன்துறை வீதி,
**யாழ்ப்பாணம்.**

(சி-8551)

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

## ராதிகா ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

222, கஸ்தூரியார் வீதி,
**யாழ்ப்பாணம்.**

(சி-8531)

# போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?

ஈழநாதம்

நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டி
முதற்பரிசு பெற்ற கட்டுரை

செல்வி-தேவிகா நவரத்தினம்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வியே மூலாதாரமானது; ஆணிவேர் போன்றது. இந்தக் கல்வியின் பிரதான நோக்கம், ஒரு தனி மனிதனின் ஆளுமைகளை வெளிக் கொணர்ந்து அவனைச் சமூகத் தேசப்பற்றுள்ளவனாகவும் சிந்தனை செய்யும் திறன் மிக்கவனாகவும் தன்னம்பிக்கையுள்ள நற்பண்பாளனாகவும் சமூக நீதியுணர்வு மிக்கவனாகவும் வளர்ப்பதும் அதன் மூலம் தனக்கும் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்துக்கும் தன் தேசத்துக்கும் பயன்பெறச் செய்வதுமாகும்.

ஓரினத்தின் அல்லது ஒரு சமூகத்தின் அல்லது ஒரு நாட்டின் முன்னேற்றம் பிரதானமாக மக்களின் கல்வியறிவிலேயே பெரிதும் தங்கியிருப்பதால் அக்கல்வியறிவு உயர்வதற்கும், உ(ய)ரிய பயனை அளிப்பதற்கும், கல்வி முறையும் சிறப்பானதாக அமையவேண்டியது அத்தியாவசியமாகின்றது.

ஆனால், இன்று நாம் நடைமுறையிற் காண்பதுதான் என்ன?

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுத் தூங்கிக் கிடந்த தமிழினம் படிப்படியாகத் தனதுரிமைகளை இழந்து வந்தபோதிலும் 'தரப்படுத்தல் முறை' கல்வியிற் புகுத்தப்பட்ட பொழுதே விழித்தெழுந்தது. காலம் காலமாகத் தான் ஏமாற்றப்பட்டதையும் ஏமாறிவந்ததையும், நம்பி நம்பி நாசமாகிப்போனதையும் உணர்ந்துகொண்டது. உயர்கல்வி வாய்ப்புக்கும் வேலை வாய்ப்புக்கும் கதவுகளடைக்கப்பட்டதால் தமிழ் இனம் பரம்பரை ஆவேசம் கொண்டது. இதன் உச்ச விளைவாக உரிமைப் போராட்டம் முனைப்புற்று (தேசிய) விடுதலைப் போராட்டமாகப் பரிணமித்தது.

இவ்வாறாக, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பிரதானதோற்றுவாய், மாணவர் தொடர்பான விடயங்களாக அமைந்த போதிலும், நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற போராட்டத்திற்கான சிந்தனையை, இன்று நடைமுறையிலுள்ள கல்வி ஊட்டுகின்றதா என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

இலங்கைத் தீவானது ஐரோப்பியரிடமிருந்து) சுதந்திரமடைந்ததாகக் கொள்ளப்பட்ட காலம் முதலாக இன்றுவரை கல்வியும் அவை தொடர்பான சகல விடயங்களுமே மாறி மாறி, ஆட்சி செய்கின்ற சிங்கள அரசுகளாலேயே கையாளப்பட்டு வருகின்றன. ஆயினும் பிரதானமாக, 1980 ஆம் ஆண்டில் சிறிலங்கா அரசு பாடநூல்களை அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கத் தொடங்கியது முதலாக, எம்மால் புரிந்துகொள்ளவோ அன்றி உணர்ந்துகொள்ளவோ முடியாத வகையிலும் மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டும் மறைமுகமாகவும் தமிழின அழிப்பு முயற்சி தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றமையை எவருமே மறுக்க முடியாது.

நாளைய தமிழீழ தேசத்தைக் கட்டி வளர்த்து தலைவர்களாகப் போகின்ற இன்றைய இளம் பரம்பரையினரை குறிப்பாக மாணவர்களைக் குறிவைத்து இராணுவத்தாக்குதல்கள், படுகொலைகள், பொருளாதார, கல்வித் தடைகளுடன் கூடவே எமது தேசிய, போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்யும் வகையில் பாடப்பரப்புகளும் அமைந்துள்ளன. அத்துடன் தன்னம்பிக்கையற்ற, மொழி, இனப்பற்றற்ற சமுதாயத்தை உருவாக்கியும், வரலாற்றையே திரிவுபடுத்திப்போலித் தகவல்களை வழங்கியும், உளவியல் ரீதியாகவும் பாதிப்புறும்வண்ணம்மறைமுக(மான) யுத்தமொன்றையும் தமிழ் மாணவ சமுதாயம் இன்று தன்னையுமறியாமலேயே எதிர்கொண்டு வருகின்றது.

இன்றைய யதார்த்தநிலைமை இவ்வாறாகவெல்லாம் இருக்கின்ற பொழுது, போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகின்றதா என வினவின் அதற்கு, 'இல்லை' என்பதே விடையாக அமைவது தவிர்க்க முடியாதது ஆகும்.

இன்று நாம் எமது தாயக விடுதலைப் போராட்டத்தை அளவற்ற அர்ப்பணிப்புக்கள் ஒப்பற்ற தியாகங்கள் மூலம் ஆயிரமாயிரம்இன்னுயிர்களை ஈந்து முன்னெடுத்து வருகின்றோம். அத்துடன் இந்தப் புனிதமான தேசிய பணிக்கு எம்மையொத்த இளைஞர் யுவதியரை எமது சமுதாயத்திலிருந்தே அணிதிரட்டிக் கொள்கிறோம். ஆனால் இவர்களில் கணிசமானவர்கள், இந்த இளம் வயதில் -கல்வி கற்கின்ற பராயத்தில் நேரடியாகவோ அன்றிமறை-முகமாகவோ இப்பணிக்கு தம்மைப் பங்காளிகளாக அர்ப்பணிக்கும் தெரிவுக்குப் பிரதான காரணமாக அமைவது இன்றைய காலத்தின் தேவையின் அவசியமும் நடைமுறைப் பாதிப்புகளூடாகப் பெற்ற அனுபவ உணர்வுகளின் உந்துதலுமே அன்றி, இன்றைய கல்வி ஊட்டுகின்ற போராட்டத்துக்கான சிந்தனை அல்ல என்பது கண்கூடாகும்.

எமது மக்கள் சக்தியின் கணிசமானவீதமான மாணவ சக்தியினை எமது போராட்டத்துக்குச் சாதகமான - பயனுள்ள - வகையில் உபயோகிக்கக் கூடிய நிலை இன்று அரிதாக உள்ளமைக்கும் மாணவர்கள் தமது பங்களிப்பை நல்குவதிலிருந்து ஒதுங்குவதற்கும் காரணம் இன்றைய கல்வி அமைப்பே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

எமது விடுதலைப் போராட்டம் எமது கல்விக்குக கவசமாக இருப்பது போன்று, எமது கல்வி, எமது போராட்டத்துககுரிய சிந்தனையை ஊட்டி வளர்த்து எமது விடுதலைப் போராட்டத்துக்குக் காப்பரணாக அமைவதில் தனது பங்கைச் சரிவரச் செய்வதில்லை என்பதே நிதர்சனமாகவுள்ளது.

தாயக மீட்புக்கான போரொன்று இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மாணவராகிய எமது பங்களிப்பு காலத்தின் தேவை - நேரத்தின் நிர்ப்பந்தம் - வரலாற்றுக்கடமைஎன்கின்ற உணர்வை இன்றைய கல்வி அமைப்பு எமக்கு எடுத்துக் கூறுவதில்லை. அத்துடன் எமது இனத்தின் சுதந்திரம், கலை, கலாசாரம், பொருளாதாரம், நிலம், மொழி, பாரம்பரியம், பண்பாடு போன்றன உயிர்ப்புடன் இருந்தாலேயே எமது எதிர்காலமும் நிச்சயமானது என்பதையும் எமது இனத்தின் எதிர்காலமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போராட்டத்தின் முடிவில்தான் - வெற்றியில்தான் - தங்கியுள்ளது என்கின்ற மறுக்க முடியாத உண்மையையும், எதிர்காலத்தின் விலையே நிகழ்காலம்தான் என்பதையும் இன்றைய கல்வி எமக்குப் போதிப்பதில்லை.

மாறாக, மாணவர்களைப் பரீட்சைகளுக்கும் சான்றிதழ்களுக்கும் தயார் செய்வதே இன்றைய கல்வியின் பிரதான நோக்கமாகவுள்ளமை வெளிப்படையாகும் (ஆனால், இவற்றிலும் எத்தனை வீத மானோர் உரிய பயனைப் பெறுகின்றனர் என்பது வேறு விடயம்

அத்துடன் தவணைத் தேர்வுகளுக்குத் தயாராக்கும் இன்றைய கல்வி, ''வாழ்க்கைத் தேர்விலும்'' மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு வழிகாட்டப் பெரிதும் தவறி வருகின்றது என்பதையே நிதர்சனமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் ஆண்டு ஒன்று முதல் பல்கலைக்கழகம்ஈறாக சகல படிநிலைகளிலும் மாணவர்களிடம் சுயநலப் போக்கே மேலோங்குவதற்கும், இந்த மண்ணின் வளத்தில்- மூலதனத்தில் - படித்து முடித்த பின்னர், வேலை வாய்ப்பிற்காகவும், பணம், பட்டம் பதவி என்பவற்றுக்காகவும் சுகபோக வாழ்விற்காகவும் இந்த மண்ணிற்கு அந்நியமாகும் மனநிலைக்கும் இன்றைய கல்வித்திட்டமே வழி வகுக்கின்றது.

இதற்குக் கல்விப் பணியுடன் தொடர்புடைய, தொடர்பு கொண்டிருந்த பலரும் தமது சுயநல நோக்கங்களுக்காக தமது கடமைகளை - சமூக வழிபடுத்தலைச் - சீராகச் செய்யத் தவறியமையும் முன்னுதாரணமாக வாழ்ந்து மாணவ சமுதாயத்தை உரிய முறையில் நெறிப்படுத்தாமையும் முக்கியமான துணைக் காரணிகளாக அமைந்துவிட்டமை துரதிர்ஷ்டவசமானதாகும்.

வளர்க்கும் வண்ணம் எமது கல்வித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதுமில்லை.

ஆதிகாலம் முதலே மனிதன் நெருக்கமான சமுதாய உறவுடன் பிணைக்கப்பட்டு கூட்டு வாழ்க்கையே வாழ்ந்து வருவதால், எமக்கு(ம்), எமது சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்குப் பொருத்தமான குணங்களைப் பெறும் மனப்பாங்கை எமது கல்வி ஊட்ட வேண்டியது அவசியமாகின்றது.

அவ்வாறே, ஒருவர் தனக்கும் தன் சமூகத்திக்கும்உள்ள தொடர்பை சரிவரப் புரிந்து தனதுரிமைகளைப் பற்றித் தெரிவதுடன் தன்னைப் போன்று மற்றயவர்களுக்கும் அவ்வுரிமைகளை அனுபவிக்கும் உரிமையுண்டெனும் எண்ணத்தையும்அவற்றைச் சகலரும் அனுபவிக்க இடமளிக்க உளப்பாங்கையும் வளர்க்கவேண்டிய பாரிய கடமை எமது கல்வி அமைப்புக்குண்டு அத்துடன் இம்மனிதவுரிமைகளை அனுபவிப்பதில் எவ்விதத்திலாயினும் தடைகளிருப்பின் அவற்றைப் பெற முயல்கின்ற - போராடுகிற - மனப்பாங்கையும் அப்படிப் பெறுபவற்றை நிலைநாட்டும் சக்தியும் பாதுகாக்கும் ஆற்றலும் மாணவர்களிடம் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் குன்றக் காரணமாக அமைகின்ற பிற காரணங்கள் எனலாம்.

மேலும் தேசியப்பணி பற்றித் தெரியப்படுத்துவதுடன் மாணவர்களுக்குத்தமது அடிப்படையுரிமைகள் பற்றியும் உரிய முறையில் எடுத்துக்கூறி தாம் பெறுகின்ற அறிவை அனுபவமாக்குகின்ற திறனை

மாணவர்கள் மத்தியில் போராட்டம் பற்றிய சிந்தனை ஏற்படவும் போராட்டவுணர்வு தோன்றவும் எமது மாணவர்கள் மத்தியில் தேசியவுணர்வுஏற்படுத்தப்படவேண்டியது அத்தியாவசியமாகின்றது இன்றைய கல்வியறிவு சுதேச உணர்வைச் சரிவரப் போதிக்காமை(யே) இன்று எமது மாணவர்கள் போராட்டச்சிந்தனையோ அன்றிப் போராட்டவுணர்வோ அற்றிருப்பதற்குப் பிரதானமாகவுள்ள காரணங்களில் ஒன்றெனலாம்.

அத்துடன் எமது தேசத்தின் நிலவளத்தையும் மூலவளங்களையும் எமது மக்களின் மொழி, கலை, பண்பாடு தொன்மைச் சிறப்பு போன்றவற்றையும் அழியாது பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்வதும் அதன் மூலம் சமூக மேம்பாட்டுக்கு உதவுதலும் அனைவருக்குமேயுரிய தேசியப் பணி என்பதையும் எமக்கு உரிமைகளிருப்பது போன்று கடமைகளும் உள்ளன என்பதையும் எமது கல்வி எமக்கு உணர்த்துவதில்லை என்பதும் தேசியவுணர்வு மாணவர் மத்தியில் வளரவும் வழிகாட்ட வேண்டியதும் கல்வியின் பணியே; எனினும் இன்றுள்ள கல்வியமைப்பு இவற்றைச் சரிவரச் சுட்டிக்காட்டுவதில்லை என்பதே உண்மை நிலையாகும்.

இன்று எமதினம் வாழ்கின்ற உரிமைகள் மறுக்கப்பட்ட - இழந்த - நிலையையும் தற்போதைய அரசியல் பொருளாதார நிலையையும் சீர்தூக்கி ஆராயவும் துரிதமாக மாறிக்கொண்டு வருகின்ற உலகப் போக்கினைப் புரிந்து கொள்ளவும் எமது மாணவர்களுக்கு இந்த மண்ணின் பூர்வீக வரலாறு, எமதினத்தின் தொன்மைச் சிறப்புபற்றியும் இதன் உரிமையாளர் பற்றியும் ஆதி முதல் எமது மூதாதையர் வாழ்ந்த சுதந்திரவாழ்வு, நாகரிகம் வளர்ந்த முறை, பொருளாதாரத் தன்னிறைவு போன்றன பற்றியும் தெரிய வேண்டியது அத்தியாவசியமாகின்றது. ஆனால் இவற்றைப் பற்றிச் சரியாக அறிந்து கொள்வதற்குரிய வழிவகை ஏதும் எமது கல்வித்திட்டத்தில் இல்லை என்பது பெரிய குறை ஆகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

**School Of Business Administration**

16, 3rd Cross Street
JAFFNA.

(இ- 8523)

**கலாலயா**

விக்டோரியா வீதி,
யாழ்நகர்.

(சி- 8525)

**யாழ் தொழில் நுட்பக் கல்லூரி**

வட்டுக்கோட்டை.

(இ- 8529)

**மதுரா பட்டு மகால்**

**சோபனா ஆடை அகம்**

75, 16, கிராண்ட் பஜார்,
யாழ்ப்பாணம்.

(இ- 8534)

**யோகாஸ் பிடவை அகம்**

16B, பெரியகடை பஜார்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: வெகுவிரைவில் இத்தாபனம் இல, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

(சி- 8541)

**சில்வர் லைன்ஸ்**

இல. 164, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(இ- 8583)

**சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்**

54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ- 8584)

# திக்கெட்டும் ஒலிக்கட்டும்

# ஈழநாதம்

# திசையெங்கும் பரவட்டும் தமிழர்தம் இதய கானம்

**றேடியோஸ்பதி**

யாழ்ப்பாணம்.

(இ- 8585)

**ஜெயா அழகு சாதன மாளிகை**

177A, மின்நிலைய வீதி,
160 நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(இ- 8587)

**நியூ ஸ்ரான்லிஸ்**

95/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ- 8636)

**ஜெயா வைன்டிங் வேக்ஸ்**

54, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(இ- 8637)

**கணேஷா வர்த்தக நிலையம்**

65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ- 8586)

**சிவன் ஸ்ரோர்ஸ்**

பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

(இ- 8580)

**அம்பிகா வர்த்தக நிலையம்**

சிவன் வீதி,
திருநெல்வேலி.

(இ- 8581)

## யாழ். மாவட்டத்தில் ..

மாவட்டத்தின் தேவைக்கென விளையாட்டு உபகரணங்கள் கப்பற் சேவையில் கொண்டு வரப்படும்போது அரச அதிகாரிகள் கண் முன்னேயே படையினரால் விளையாட்டு உபகரணங்கள் களவாடப்படுகின்றன. இந்நிலையில் மேலும் உபகரணங்களை கொண்டுவர அதிகாரிகள் பின் நிற்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

இந்நிலையில், விளையாட்டுத்துறையைப் புத்துயிரூட்ட முயற்சிகளும் பல வகைகளிலும் மேற்கொள்ளப்படாமலில்லை. யாழ் மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களை ஒழுங்கமைப்பதிலும், விளையாட்டுத்துறையில் வளர்ச்சிகளை முன்னெடுப்பதற்குமென, யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு செயலாற்றி வருகிறது. யாழ் மாவட்டத்தை வலிகிழக்கு, வலிமேற்கு, வடமராட்சி, தென்மராட்சியும், தீவகமும் இணைந்த வலயங்களாகப் பிரித்து, அவற்றின் மூலம் விளையாட்டுத்துறை நடவடிக்கைகளை இக்குழு தொடர்ந்து வருகிறது. கடந்த இரு வருடங்களிலும், திலீபன் ஞாபகார்த்த தடகளப் போட்டி, உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளையும் இக்குழு நடாத்தியுள்ளது. வலைப் பந்தாட்டத்துக்கென மத்தியஸ்தர்கள் போதாமையை நீக்குவதற்காக, வலைப் பந்தாட்ட நடுவர் பயிற்சி வகுப்புக்களை நடாத்தி, பரீட்சை வைத்து, எட்டுப்பேரை வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களாக நியமித்துள்ளது.

தொடர்ந்து வரும் காலங்களில், மாட்டு வண்டிச் சவாரி, தாச்சி போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு கராட்டே, வலைப் பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுக்கும் என தனித்தனியான சங்கங்கள் அமைப்பதன் மூலமும், பயிற்சி முகாம்களை வலய ரீதியாக நடாத்துவதன்மூலமும், விளையாட்டுத்துறையில் புத்துயிர்ப்பை ஊட்ட தயாராகி வருவதாக இக்குழுவின் செயலாளர் திரு. முருகநேசன் தெரிவித்தார்.

இதேபோல், தடகளப் போட்டியில் மறுமலர்ச்சியை உண்டுபண்ண, பல ஆண்டுகளாக செயலற்றிருந்த அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கம் (Amateur Athletics Association) மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது. பாடசாலையைவிட்டு விலகுபவர்களுக்கு கழகங்கள் மூலமாக, திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப்படுத்தலையும், பயிலுனர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதையும் முக்கியமாகக் கொண்டு இச்சங்கம் மீள செயலாற்ற ஆரம்பித்துள்ளதாக இதன் தலைவர் டாக்டர் ஜெயகுலராஜா தெரிவித்தார் மெய்வல்லுனர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை இச்சங்கம் தனது முயற்சிகளின் மூலம் அளிக்க முடியும் என நம்ப இடமுண்டு.

இவற்றினை விட வை. எம். சீ. ஏ, றோட்டரக்ட் கழகம், மற்றும் சங்கங்கள் சிலவும் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கென தம்மாலியன்ற பங்களிப்புகளையும் வழங்கி வருகின்றன.

இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய விடயமொன்று யாதெனில், கழகங்கள், தங்களுடைய ஒழுங்கமைப்பையும், கட்டுக்கோப்பையும் மீறி, மைதானத்தில் நடைபெறும் தவறுகளை வீதிக்கு இழுத்தலாகும். இந்நிலை இன்று பெருமளவில் காணாமற் போயிருந்தாலும் அங்கொன்றும், இங்கொன்றுமான சம்பவங்கள், விளையாட்டுத்துறையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் உதவிபுரிவனவல்ல என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்.

இறுதியாக, விளையாட்டுத்துறை ஆர்வலர்களின் ஒட்டுமொத்த கருத்தாக — ஆலோசனையாக விளையாட்டுத் துறைக்கென தனியான கல்லூரி ஒன்றினை புலமை சார்ந்தோரை ஒன்றிணைப்பதன் மூலம் உருவாக்க வேண்டும். இக் கல்லூரிக்கான பங்களிப்பினை சகலரும் வழங்கும் பட்சத்தில் எமது வளப் பிரயோகமும் வீணாகாதவாறு தடுக்கப்படும் நிலையும் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

அந்த ஆலோசனையில் மேலும், இக் கல்லூரியானது தன் அனுமதிக்கான தகுதியை கற்கக் கோருபவரின் விளையாட்டுத் திறமையை பிரதான தரநிர்ணயமாகக் கொள்ள வேண்டும். இதனால் எமது தேசத்தின் விளையாட்டுத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த இடமுண்டு எனலாம். ★

## மனப்புரட்சியும் ...

பாரம்பரியத்திலிருந்து, எனது பண்பாட்டிலிருந்து, நான் எதிர்கொள்ளும் புறவுலகத்தின் எண்ணற்ற அழுத்தங்களிலிருந்து எனது சுயம் கருவாகி உருவாகிறது. எனது சுயத்தின் எலும்பும் சதையுமாக இருப்பதெல்லாம் எனது நினைவுகளின் நிழலுருவங்களன்றி வேறொன்றுமல்ல. எனது மனம் சுவீகரித்துக்கொண்ட கோடானுகோடி படிமங்களின் மையத்திலிருந்து எனது சுயம் வெடித்தெழுகிறது. ஆகவே நான் என்பதே ஒரு படிமம். ஒரு மையப் படிமம். காலத்தால் செத்த கருத்துருவங்களிலிருந்து, நினைவுகளின் கல்லறையிலிருந்து உயிர்பெற்று இயங்கும் ஒரு எண்ணம்.

''மிகவும் விழிப்புடன், கூர்மையான கவனத்துடன் கணத்திற்குக் கணம் உனது எண்ண அசைவுகளை அவதானித்துப் பார். நீ அவதானிப்பதும் ஆராய்வதும் உனது எண்ணமாக இருந்தால் நீ எதையும் கண்டுகொள்ளப் போவதில்லை. உனது விழிப்புணர்வின் பிரகாசத்திலேயே நீ உன்னைக் கண்டு கொள்ள வேண்டும். உனது விழிப்புணர்வு கூர்மையாகி, உனது கவனம் முழுமைபெறும் பொழுது அவதானிப்பவனாக, சிந்திப்பவனாக, பிரக்ஞையின் மையமாக இருந்துவரும் உனது சுயம் செயலிழந்து விடுவதை நீ கண்டு கொள்வாய். இவ்விழிப்பு நிலையில் மனமானது எண்ணத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அமைதியடைகிறது. எண்ண இயக்கத்திலிருந்து விடுதலையடைந்து, அமைதி கொள்ளும் மனதில் தான் அன்பும், அழகும், ஆனந்தமும் சாத்தியமாகிறது'' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

வாழ்க்கை என்பதே ஒரு மாபெரும் இயக்கம்; ஒரு மாபெரும் சக்தி. நமது மனம், நமது எண்ணம், நமது உணர்வு, நமது ஆசைகள் எல்லாமே இந்த இயக்கத்தின், இந்த சக்தியின் வெளிப்பாடுகள்தான். நமது மனதில், எண்ணத்தில், உணர்வில், ஆசையில் பிணக்கும் போராட்டமும் தாண்டவமாடும்பொழுது, நமது உறவுகளில் முரண்பாடு தலை தூக்கும் பொழுது இந்த சக்தி விரயமாகிறது; வீணாகிறது. மனித மனமானது விழிப்புணர்வு கொண்டு, தனக்குள் தெளிவு கண்டு, உள்ளும் புறமும் முழுமையான, அமைதியான, ஒத்திசைவான வாழ்வைத் தழுவிக் கொள்ளும் பொழுது எல்லையற்ற சக்தியாக அங்கு ஞானோதயம் பிறக்கிறது, என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

நமது பழைய மனம், பயிற்றப்பட்டமனம் இறக்க வேண்டும். அந்த சாவிலிருந்து தான் புதிய மனம், புரட்சிகர மனம் பிறக்கமுடியும். அந்தப் புரட்சிகர மனமே முழுமனித விடுதலைக்கும், சமுதாய விடுதலைக்கும் வழிவகுக்கும். கிருஷ்ணமூர்த்தி போதிக்கும் மனப்புரட்சியின் சாராம்சம் இது தான்.

நன்றி; வெளிச்சம்

### உயிரி நிவாரணம்

பக்டீரியா மூலம் தொழிற்சாலை கழிவுகளைச் சுத்தப்படுத்தும் முறையொன்றை தற்பொழுது பல நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன. இதற்கு 'உயிரி நிவாரணம்' எனக் கூறுகின்றனர். பக்டீரியாக்களை ஆபத்தற்றவையாக மாற்றிஅவற்றைப் பழக்கப்படுத்தி தொழிற்சாலைக் கழிவுகளைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தும் போது அவைகழிவுகளிலுள்ள சயனைட் போன்ற கொடிய நஞ்சுகளைக் கூட உட் கொண்டுவிடுகின்றன.

## மூன்றாம் உலக

அடுத்துள்ள இடத்தை ஈரான் பெற்றுள்ளது என்று தெரிய வருகிறது. இத்துறை ஷா மன்னர் ஆட்சியின் போது அமெரிக்க உதவியுடன் ஈரானில் வளர்ச்சியடைந்தது. ஆனால் ஈரானில் உயரிகள் உள்நாட்டு நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கும் வெளிநாட்டுச் செய்தி மூலங்களை எதிர்பார்த்தனர். இது ஐரோப்பிய பண்பாட்டு அணுகுமுறை (Eurocentric Approach) ஆதிக்கத்தையே காட்டுகிறது. மேலும் ஐரோப்பிய செய்தித்தாபனமான அஸோசியேட்டற் பிறஸ் மூன்றாம் உலக நாடுகளின் கல்வி, சமூகம் கலாசாரம் ஆகியவற்றை முதன்மைப் படுத்துவதில்லை. மாறாக இந்த நாடுகளை ஒரு நெருக்கடிப் பிரதேசமாக அனுமானிக்கும் வகையில் செய்திகளை முதன்மைப் படுத்தி உலகம் பூராகவும் வெளியிடுகின்றன. பிரதான ஐரோப்பிய நகரங்களை மையமாகக் கொண்டியங்கும் நான்கு முக்கிய செய்தித் தாபனங்கள் மூன்றாம் உலக நாடுகளுக்குச் செய்திப் பரிவர்த்தனை செய்வதில் ஏகபோக உரிமை கொண்டுள்ளன. மக் பிறயிட் ஆணைக் குழு, மூன்றாம் உலக நாடுகள் 80 விகிதமான செய்திகளை லண்டன், பரிஸ், நியூயோர்க் வழியாகப் பெறுவதாக அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது. மலேசியா வியட்நாமின் அயல் நாடு. வியட்நாம் யுத்தச் செய்திகளைமலேசியப் பத்திரிகைத்துறை லண்டன், நியூயோர்க் செய்தி மையங்கள் ஊடாகவே பெற்றது. இதில் ஆச்சர்யம் என்னவென்றால் 1981 இல் இந்தியா பங்களாதேஷ்பற்றிய செய்திகளை ரயிட்டர் செய்தித்தாபனம் மூலமே பெறக் கூடியதாக இருந்தது. இன்றும் பிரஞ்சு மொழி பேசும் மேற்கு ஆபிரிக்கா செய்தித் தொடர்புக்கு பிரான்சு நாட்டு செய்மதியை நம்பியிருக்கும் நிலையில் உள்ளது.

மற்றும்படி, வல்லாதிக்க நாடுகள்தங்களதுவெளியுறவுக் கொள்கைக்கு எதிராக மூன்றாம் உலக நாடுகள் வெகுசனத் தொடர்புத் துறையை நடத்த அனுமதிக்கப்படாத நிலையையும் உருவாக்கி உள்ளன.

ஐரோப்பிய செய்தித் தாபனங்கள் இவ்வாறு ஐரோப்பிய நாடுகளை முதன்மைப் படுத்திச் செய்திகளை வெளியிடுவதால் மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரம்- முதலீடு மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பாதிக்கப்பட்டுள்ளது என்று மலேசியப் பிரதமர் கண்டித்துள்ளார். மூன்றாம் உலகம் முழுவதும் இந்தச் சூழ்நிலை நிலவுகிறது.

''சுதந்திரம் என்பது சுவர்க்கத்தின் ஒளிமயமான கொடை'' என்ற லிபிரியா ஹெரல்ட் இதழின் (ஸ்தாபிதம்: 1826) மகுட வாசகத்தை மேற்கோள் காட்டும் ஜெக் தூல் என்ற செய்தியாளர், பின்வரும் ஆலோசனையை இத்துறை சார்ந்தவர்களுக்கு கூறுகிறார்: ''மூன்றாம் உலக நாடுகளில் பிரதான விஷயம்-அபிவிருத்தி. இத்தலைப்பில் பல விஷயங்களை ஒன்றிணைக்கலாம். அதாவது, முதலாம் மற்றும் இரண்டாம் உலக நாடுகள் விதித்துள்ள பொருளாதார அரசியல் நிபந்தனைகளை அகற்றுதல். அத்துடன் பொருளாதார நிர்வாகம், தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்திக் கொள்வதோடு, மூன்றாம் உலக நாடுகளுக்கு மிகவும் பொருத்தமான தொடர்பு முறையையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ★

## விறகாகிப்போன ..

இந்த மண்ணில்
நிமிர்ந்து நிற்கும்
பனை மரங்களையும்
பாலை மரங்களையும்
என்றென்றும்
என் கண்கள் காணவேண்டும்
இதுவே எனக்குச் சுகம்
தரும்!''

ஆதவனை வெளிநாட்டிற்கு வரும் படி சங்கர் அழைத்த போது - இக் கவிதையை ஆதவன் அனுப்பியிருந்தான்.

இந்தக் கவிதையை தான் விரும்பி ரசித்ததாக சங்கர் தன் கடிதங்களில் தெரிவித்திருக்கிறான்.

அன்று-

சங்கரிடமிருந்து ஒரு கடிதம்.

ஆதவன் ஆர்வத்துடன் பிரித்தான்.

''சில தினங்களுக்குள் நான் உன்னைச் சந்திப்பேன். ஒருமாத விடுப்பில் அங்கு வரவுள்ளேன்'' என்றுகடிதத்தில்குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆதவன் ஆனந்தத்தில் துள்ளினான்.

சங்கர் பற்றிய ஞாபகங்களில் மூழ்கினான்.

அவனிற்கு எத்தனை எத்தனையோ இடங்கள் காண்பிக்க வேண்டும் ...... எத்தனை எத்தனையோ கதைகள் சொல்ல வேண்டும்.

விடியலின் உச்சிக்குச் சென்றுவிட்ட இத்தேசத்தின் பெருமையை, போராளிகளின்தியாகத்தைச் சொல்ல வேண்டும்,

உதிர்ந்து போன பத்து வருஷங்களில் உருவான மாற்றங்களைக் கண்டு அவன் அதிசயப் படவேண்டும்.

சில தினங்களின் பின்... சங்கரின்அம்மா ஆதவனின் வீடு வந்தடைந்தாள்.

ஒரு கையில் பொதி ஒன்றும் மறுகையில் கடிதம் ஒன்றும் வைத்திருந்தாள். ஆதவனிடம் அவற்றைக் கொடுத்தாள்.

அந்தக் கடிதத்தில்—

'ஆதவன் அறிவது!

கொழும்பிற்கு வந்த அம்மாவைச் சந்தித்தேன், உன் இடத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால்என்னால் உன்னைச் சந்திக்க முடியவில்லை. உன்னால் - கொழும்பிற்கு வர முடியாது என்பதை நான் அறிவேன்.

ஒரு சந்தோஷமான விஷயம்.

அம்மா அழைத்து வந்த பெண்ணை கொழும்பில் வைத்து திருமணம்செய்துகொண்டேன். நான் அவளையும்அழைத்துக்கொண்டு சில தினங்களில் திரும்பிவிடுவேன்

அவளின் பெயர், சுஜிதா நல்ல பெயரா?

மேலும்-

உனக்குப் பரிசுப் பொருள்கள் சில அனுப்பியிருக்கிறேன். பெற்றுக்கொள். ஜேர்மனி சென்ற பின்னர் கடிதம் எழுதுகிறேன்.

அன்புடன்

.................

ஆதவனால் அவன் பெயரை வாசிக்க முடியவில்லை. நெஞ்சை யாரோ பிய்த்தெறிந்து விட்டாற் போலிருந்தது.

பரிசுப் பொருள் அடங்கிய பொதியையும், பிரிக்கப்பட்டிருக்கும் கடிதத்தையும் அலட்சியமாகப் பார்த்தான். ★

## கலை இன்பம் ...

என்னும் அடிகளின் மூலம் இது தெளிவாகின்றது. அதாவது பாலைப் பண் என்னும் இசையைமிக அழகாகப் பாணர்கள் என்போர் பாடிச்செல்ல அந்த இசையில் மயங்கி, மனமுருகி, உடல் குழைந்து, தம் கையிலுள்ள ஆயுதங்களும் நழுவிக் கீழே விழ பாலைநிலக் கள்வர்கள் அருளொழுக்க முடையார் போல கனிந்துநிற்பர் என்பது இதன் பொருளாகும்.

மெய்மறக்கச் செய்யும்இசை அறுபத்து நான்கு வகையான கலைகளின் ஒரு பகுதியே ஆகும். இது போன்று இருக்கும் அனைத்துக் கலைகளும் வெறும் பொழுதுபோக்குசாதனங்களோ அல்லது இன்ப உணர்வுக்கான வைகளோ அல்ல. கலைப் படைப்புக்கள் உணர்த்தும் பொருளின் ஊடாகசெயலுக்குஉந்திச்செல்லும்போதுதான்அவை வெற்றி பெற்ற படைப்புக்களாகக் கொள்ளப்படக் கூடும்.

இந்த இடத்தில் கலைக் கோட்பாடுகள் என்பது பற்றியும் சிறிது குறிப்பிடுதல் பொருந்தும். கலை கலைக்காகவே என்றும் கலை மற்றும் இலக்கியங்கள் யாவும் மக்கள் நலனுக்காகவே என்றும் இரு வேறுபட்டகருத்துக்கள்கடந்த காலங்களில் நிலவியிருக்கின்றன. கலை கலைக்காகவே என்று கருதியவர்கள் கலைப் படைப்புக்களின் பயன்கள் இன்பவுணர்வுகளை நுகர்வோரிடையே தூண்டுவது தான் எனவலியுறுத்தினர். அதனால் கலைப்படைப்புக்களில் அழகியல் அம்சங்களுக்கே முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கருதினர். கலைப் படைப்புக்கள் மக்களின் நலனுக்கே என்று கருதியவர்கள் கலைப்படைப்புக்களில் அழகியல் அம்சங்களை விடவும்அது வெளிப்படுத்தும்செய்தியையே முதன்மைப் படுத்தினார்கள். கலைப் படைப்புக்களின் உருவம்அதாவது வடிவம் முக்கியமானதாக அல்லது உள்ளடக்கம் அதாவது உணர்த்தப்படும் செய்தி மூக்கியமானதா என்ற இந்த விவாதம் மிகவும்நீண்டு செல்லக்கூடியது. அத்துடன் இது தொடர்பாக முடிந்த முடிபு ஒன்றை சுட்டுவது ஒவ்வொரு படைப்பாளனினதும் நுகர்வோனினதும்தனிப்பட்ட விடயமாக இருக்கும்.

எனினும் இன்று இம் மண்ணில் எழுகின்ற கலைப்படைப்புக்கள் யாவும் சமகாலச் சம்பவங்களின் பதிவேடுகளாக இருக்க வேண்டும்என்றகருத்து மேலோங்கி வருகின்றது. கலைப்படைப்புக்கள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் என்பது உண்மையே. எனினும் படைப்பாளர்கள் காலத்தை பதிவு செய்தல் போர்வையின் கீழ் ஒழிந்துகொண்டு தத்தம் சுயநல எல்லைகளுக்குள்குறுகிப்போய்தத்தமது சுயநல வெளிப்பாடுகளையேதமது "உண்மையான அனுபவங்கள்'' என்று முத்திரையிட்டு விடக்கூடிய ஆபத்தும் இதில் உண்டு. ஆதலால் சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடியது, எதிர்காலத்திற்கு வழிகாட்டுவது, எதிரிகளை இனம் காட்டுவது, சீரழிவுக்குக் காரணமான சுயநல வட்டங்களிலிருந்து விடுபடத் தூண்டுவது, பரந்தமனப்பான்மையையும், சேவை மற்றும் அர்ப்பணிப்புஉணர்வுகளையும் ஏற்படுத்துவது போன்ற கலைப்படைப்புக்கள் ஏராளமாக வெளிவருவதேஇன்றைய தேவை எனலாம்.

---

### கடற்படை

சென்ற ஐந்து கட்டுமரங்களும் கடற்படையினால் சேதமாக்கப்பட்ட நிலையில் கரை ஒதுங்கியுள்ளன இரண்டுலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் கடற்படையினால் சேதமாக்கப்பட்டு காணப்பட்டன.

பூனைத்தொடுவாய் பகுதியில் கடற்படையினரின் தாக்குதல் நடவடிக்கையின்போது பல பொதுமக்கள் கரையில் நின்று சம்பவத்தை அவதானித்ததாகச் சொல்லப்பட்டது.

இச்சம்பவத்தில் மேலும் பல மீனவர்கள் தப்பித்து கரையேறியுள்ளனர்.

---

# தாய்லாந்து தூதுவராக இராணுவத்தளபதி சிசில்

### எதிர்க்கட்சிகள் ஆட்சேபம்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்ணாவை தாய்லாந்து தூதுவராக நியமிப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து கொழும்பு எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மிகப்பெரிய பூநகரி முகாம் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாத நிலையில் அதற்குப் பொறுப்பேற்று ராஜினாமாச் செய்த இவரை எப்படி தூதுவர் பதவிக்கு நியமிக்கலாம் என அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை தாய்லாந்து தூதுவராகஇவரைநியமிப்பது தொடர்பாக அந் நாட்டு மன்னருக்கு ஜனாதிபதியினால் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் அடுத்தமாத இறுதியில் பதவி ஏற்பார் எனவும் கூறப்படுகிறது.

# தேசத் துரோகமானாலும் தமிழீழத்தை ஆதரிப்பேன்

### வை. கோபாலசாமி தெரிவிப்பு

(சென்னை)

''தமிழீழத்தை ஆதரிப்பது தேசத்துரோகம் என்றால் தொடர்ந்து அதைச் செய்யவே நான் விரும்புகிறேன்'' என வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

தனது கட்சியின் சார்பில் மாதம் இருமுறை வெளிவரும் ''நீதியின் போர்வாள்'' என்ற பத்திரிகையின் வெளியீட்டு விழாவிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இப் பத்திரிகையின் முதற் பிரதியை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் பெற்றுக் கொண்டார்.

---

### பங்கீட்டு

பங்கீட்டு அட்டைக்கும் இரண்டு கிலோ வீதம் அடுத்த வார நடுப்பகுதியிலிருந்து விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

---

## தாகம் . . ,

சாதாரணத்தை விடக் குறைந்த உயரம், அளவான உடல், பொது நிறம், எண்ணைக்கோ, சீப்புக்சோ அடங்காத தலைமயிர், கபடமில்லாத கண்கள். எந்த நேரமும் தமாஷாகப் பேசுவான், மிகவும் பண்பானவன்; அதுமட்டுமல்ல மிகவும் நிதானமானவன்.

இன்றுகூட அவன் நிதானம் தவறவில்லை... ஆனால் எப்படியோ இப்படியொரு நிலைக்குள்ளாகிவிட்டான்.

சுரேஷ் முகம் குப்புறப் படுத்திருக்கிறான்.

இரத்தம் பெருமளவில் வெளியேறியதால்... பலவீனம்... அசதி... எரிவு .. வலிப்பு... நோவு
மரண சிந்தனைகள்...!

சுரேஷ் பல தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டிருக்கின்றான். இதே போன்று காயப்பட்ட எத்தனையோ போராளிகளைப் பார்த்திருக்கின்றான். காயம்பட்டு இரத்தம் வெளியேறி மரணித்தவர்கள்... கால் கழற்றப்பட்டவர்கள்... தேங்காய்க் கயர் போல அவனது மனத் தழும்பாகிவிட்ட அனுபவங்கள் ஒவ்வொன்றாக முகிழ்த்து . வெடித்து பல சிந்தனைக் கீலங்களாகின்றன...

அனுபவங்கள் சாவதில்லையே...!

அதிலும் சுரேஷ் ஒரு போராளி. இன்று நேற்றுப் போராட்டத்தில் சேர்ந்தவனல்ல, ஐந்து வருடங்கள்... எத்தனையோ அனுபவங்களைப் பெற்றவன்...

மிகவும் நுணுக்கமாகத் தீர்மானங்களை எடுக்கும் திறன் வாய்ந்தவன்..

தன்னுடைய நிலையைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பானா?

இலேசான மயக்க உணர்வு... வலது கையை விரித்து நெஞ்சின் இடது பக்கமாக வைத்து தனது இதயவடிப்பை அவதானிக்கின்றான்...மனச்சோர்வு .. அதிகரிக்கின்றது.

முகம் குப்புறப்படுத்திருந்த சுரேஷ் உடலைப் புரட்டி, கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டி... சிலுவையில் அறையப்பட்ட யேசுவைப்போல் படுக்கின்றான். கயிறு அறுந்த திரைச் சீலைபோல்...அவனது கண் இமைகள் மூடிக் கொள்கின்றன.

பிடரிப்பக்கத்திலுள்ள முண்ணான் வலிக்க ஆரம்பிக்கின்றது... மரண சிந்தனைகள்...

போர்க்களத்தில் இறந்திருக்கலாம்... கரும்புலியாய் இறந்திருக்கலாம்... இப்போது... மரணச்செய்திகூட வெளிவரமுடியாத மரணம்... தனது மரணத்தைப் பற்றி அவன் கவலைப் படவில்லை அந்த மரணம் மயில் இறகைப் போன்று கனதியற்றதாகி விட்டதே என்றுதான் கவலைப்படுகின்றான்!

நாளைக் காலையில் இராணுவத்தினர் எனது பிணத்தைக் காண்பார்கள் .. இழுத்துச் செல்வார்கள்... எவ்வளவு கேவலப்படுத்துவார்கள்... தனது மரணத்தின் பின்னுள்ள சம்பவங்களைக் கற்பனை செய்கிறான் .

''எனது உடல்கூட எதிரிகளின் கைகளுக்குக் கிடைக்கக் கூடாது ..'' திடீரென்று இப்படியொரு நினைவு அவனுக்கு... ஓசையற்ற நிலையில் அவனது உதடுகள் துடிக்கின்றன. திரும்பவும் முகம் குப்புறப்படுத்து இடது காலால் நிலத்தை உதைந்து புல் பூண்டுகளைப் பிடித்து ஊர ஆரம்பிக்கின்றான். கதவுக்கும், கதவு நிலைக்குமிடையே நசிபட்ட பல்லி, மரணத் துடிப்போடு நகர்வதுபோல் சுரேஷ் நகருகின்றான்... முழங்காலில் ஏற்பட்ட காயத்தினுள் புல் பூண்டுகள் கொழுவி இழுக்கின்றன .. எரிவு ... வலிப்பு... நோவு...

இவைகளுக்கு மேலால் ஏதோவொரு பலம் அவனை இயக்குகின்றது என்னதான் பலமிருந்தாலும் உடலியங்க வேண்டுமே! பெருமளவு குருதி வெளியேறி .. நாடி நரம்புகள் காற்றுப்போன பலூனைப்போல் . சோர்ந்து ...

மிகவும் கஷ்டப்பட்டு ஐந்துயார் வரை ஊர்ந்திருப்பான்... அதற்கு மேல் அவனால் முடியவில்லை...

அடிவயிற்றிலிருந்து மூச்சிழுக்க ஆரம்பிக்கின்றது .. !

முகம் குப்புறப் படுக்கிறான் ..

சேகரிக்கப்பட்ட விடயங்களை உரிய இடத்தில் சேர்த்துவிட வேண்டுமென்ற முதல் முயற்சி மரித்து... எதிரிகள் எனது உடலைக்கூடத் தொடக் கூடாது என்ற இரண்டாவது முயற்சியும் மரிக்கின்றது...

பனித்துளிகளாலும், வியர்வைத் துளிகளாலும் தோய்ந்து போயிருந்த அவனது முகத்தில் மண்துகள்களும், கஞ்சல்களும் ஒட்டிப்போய், அவனது முகத்தை விகாரப்படுத்துகின்றது...

ஒரு எதிரியையாவது நான் அழிக்காமல் இறக்கப் போகின்றேனே ' அவனது மனம் அழுகின்றது! கடந்த ஐந்த ஆண்டுகளிலும் சுரேஷ் எத்தனையோ எதிரிகளை அழித்து விட்டான் இருந்தும் இந்த நேரத்திலும் அவனுக்கு இப்படியொரு ஆத்மதாகம்!

'ஒரு எதிரியையாவது நான் அழிக்க வேண்டும்' ஒரு எதிரியையாவது அழிக்காமல் சாகப் போகின்றேனே என்று எண்ணி வருந்தியவன், இப்போது ஒரு எதிரியையாவது அழிக்க வேண்டுமென்று எண்ணுகின்றான். மரணவாசலில் நிற்கின்ற அவன், எதிரியின் அழிவைப்பற்றி எண்ணுகின்றான்

இந்த மண்ணில் வாழுகின்ற, அவனால் அறியப்படாததன் இனத்தவர் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற ஆத்மதாகம்!...

'ஒரு எதிரியையாவது அழிக்க வேண்டும்'

சிந்தனைக் கூர்கள் அவனது இதயத்தைக் குத்திக்குடைகின்றன ..! எத்தனையோ இராணுவத்தினர், இராணுவமுகாமுக்குள் நடமாடிக் கொண்டிருக்க, அத்தனை இராணுவத்தினரின் கண்களுக்கும் படாமல் வேவு பார்க்கும் திறமைகள் அனைத்தும் திரண்டு .. மரண இருளுக்குள் ஒரு பாதையைத் தேடுகின்றன...

பல குறுக்குப் பாதைகளின் கதவுகள் திறக்கப்படுகின்றன

சுரேஷின் சிந்தனை ஒரு பாதையில் தரிக்கின்றது

'ஒரு எதிரியையாவது அழிக்க வேண்டும்'

தனது கழுத்தில் கறுத்தக் கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்த சயனைற்' குப்பியைக் கழற்றி தனது முகத்துக்கு நேரே மண்ணில் போடுகின்றான். இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த இரண்டு கிரனைட் குண்டுகளையும் எடுக்கின்றான். வலது கையில் ஒன்று இடதுகையில் ஒன்று. வலது கையிலிருந்த கிரனைட் குண்டின் கிளிப்பைப் பற்களால் கடித்திழுத்து, அதன் விசையை வலது கைப் பெருவிரலால் அமர்த்திப் பிடிக்கின்றான். இடது கையிலிருந்த குண்டின் கிளிப்பையும் பற்களால் கடித்திழுத்துக் குண்டின் விசையை இடது கைப் பெருவிரலால் அமர்த்திக் கொள்கின்றான்.

குண்டின் கிளிப் இழுக்கப்பட்டு அதன் விசை அசைந்தால், மூன்று நான்கு செக்கன்களில் குண்டு வெடிக்கும்...

பெருமளவு குருதி வெளியேறி பலமிழந்துபோன அவனது உடலில் எஞ்சியிருந்த பலத்தையெல்லாம் இரண்டு பெருவிரல்களிலும் [illegible]க்கி, குண்டின் விசைகளை பிடி[illegible]கின்றான்...

விரல்கள் நகரக் குண்டுகள் வெடி[illegible]

[illegible] அமர்த்தியபடி, குண்டோ[illegible] கையை மார்பின் வலது பக்கத்[illegible]டு அணைத்து வைக்கின்றான், [illegible]துகையிலிருந்த குண்டின் விசையை அமர்த்தியபடி மார்பின் இடதுபக்கத்தோடு அணைத்து வைக்கின்றான்.

உடல் அசையும் வரை குண்டுகளின் விசைகளிலிருந்து பெருவிரல்கள் அசையாதவாறு மார்புப்பக்கத்தை லாவகமாக வைக்கின்றான்.

ஆத்ம தாகமும் -
ஆத்ம பலமும்...

புல் பூண்டுகளும், மரஞ்செடி கொடிகளும் சுரேஷின் செயலைக் கண்டு விறைத்துப்போய் நிற்கின்றன... தனது விடுதலைக்காக தன்னால் சுவீகாரம் எடுக்கப்பட்ட தனது மகனின் செயலைக்கண்டு அசந்து போய் நிற்கின்றாள் மண்மாதா!

நிலத்தில் கிடந்த சயனைற் குப்பியை வாயினால் கௌவி .. எடுத்து... கடிக்கிறான்...

சில வினாடிகள்...

மண்ணை முத்தமிட்டபடி சுரேஷின் உடல் பிணமாய்க்கிடக்கின்றது.

★ ★ ★

கதிரவன் செந்தணலாய் கிழக்கடி வானத்தில் பிரசவிக்கின்றான்.

காவலரணில் இருந்த இராணுவத்தினன் தொலைநோக்குக் கண்ணாடிமூலம், தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்த இடத்தைப் பார்க்கின்றான்.

சுரேஷின் பிணம் தெரிகின்றது.

இராணுவத்தினன் தனது மொழியில் ஆரவாரம் செய்கின்றான். பல இராணுவத்தினர் கூடுகின்றனர் ..... வெற்றிப் பெருமிதத்தில் ஆரவாரம் செய்கின்றனர்...

கொடிவிட்டு வந்த இராணுவத்தினர் சுரேஷின் உடலைச் சூழ்ந்து நின்று பார்க்கின்றனர்...

இருவர் குனிந்து சுரேஷின் உடலைப் புரட்டுகின்றனர்...

உடல் அசைய, விசையிலிருந்து பெருவிரல்கள் விலக... குண்டுகள் பெரும் சத்தத்துடன் வெடிக்கின்றன!

குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட புகைமண்டலத்துள் மரண ஓலங்கள் கேட்கின்றன!

(யாவும் கற்பனை)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, இல. 31, ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது